அதிக பக்கங்கள்;
புதிய பகுதிகள்!
பொங்கல் சிறப்பிதழ்

கல்கி

KALKI 11.1.98 ரூ. 4.50



இந்தியாவின் மிகப் பெரிய தங்க நகைக்கடை

சரவணா ஸ்டோர்ஸ்

தங்கநகைகள் + பட்டுஜவுளிகள் + பாத்திரங்கள்

ரெங்கநாதன் தெரு, தி.நகர், சென்னை - 17.

தங்க, வெள்ளி நகைகளுக்கு செய்கூலி இல்லை

22 ct தங்கம் 1 கிராம் ரூ. 20 வரை குறைவு

அதிகம் கல் எடையுள்ள நகைகளுக்கு மட்டும் 10% தள்ளுபடி மேலும் செய்கூலி, சேதாரம் இல்லை



நாங்கள் விற்கும் தங்க நகைகள் மற்ற எந்த கடை களையும் விட உயர்வான தரம் என்று சவால் விட்டு உறுதி கூறுகிறோம்.

பழைய பொன் நகைகளை கொடுத்து புன்னகையோடு புதிய பொன் நகை பெறவும்

இந்தியாவின் மிகப் பெரிய பட்டு ஜவுளி மாளிகை


பட்டு புடவைகளுக்கு 10% தள்ளுபடி

ஜவுளிகள், ரெடிமேட் ஆடைகள், பாத்திரங்கள்,
டி.வி. ரேடியோ, ஃபிரிஜ், பேன்

WE ACCEPT ONLY VISA & MASTER CARDS

ஞாயிறு விற்பனை உண்டு

L.R.SWAM



கோக் - பெப்ஸி யுத்தம்:

பலியாகும் வீரர்கள்!

'ஒரு நாள் கிரிக்கெட்டுக்கு நீ லாயக்கில்லை' என்று ராகுல் திராவிடை நீக்கி விட்டது கிரிக்கெட் தேர்வுக்குழு.

மொத்தம் ஆறு வீரர்கள் தூக்கப் பட்டிருப்பினும் திராவிட்டின் நீக்கம், பலத்த சந்தேகத்தையும் சர்ச்சையையும் உண்டாக்கி இருக்கிறது. காரணம் - அணியை விட்டு நீக்கும் அளவுக்கு அத்தனை (தொடர்) மோசமாக அவர் ஆடியதே இல்லையே என்பதுதான்!

உறுதியான ஆட்டம், மைதானத்தில் தவறுகள் செய்யாமல் ரன் எடுப்பதில் மட்டும் குறியாக இருப்பது, டீம் ஸ்பிரிட், வேகத்துக்கு வேகம், விவேகத்துக்கு விவேகம் -

இது வதந்தியா? உண்மையா? சிண்டைப் பிய்த்துக் கொள்கிறார்கள் கிரிக்கெட் ரசிகர்கள்.

இத்தனை இருந்தும் திராவிட் ஏன் நீக்கப்பட்டார்?

ஒவ்வொரு மேட்சிலும் சராசரியாக 70 ரன்களுக்கு மேல் எடுக்கும் திராவிட் நீக்கப்பட்டதற்கான காரணம் - பெப்ஸி Vs கோககோலா யுத்தம்தான் என்கிறார்கள் கிரிக்கெட் உலகப் புள்ளிகள்.

விஷயம் இதுதான்: 'பெப்ஸி' நிறுவனம் தன் விளம்பரத்துக்காக சச்சின் டெண்டுல்கரை அணுகிய போது இரண்டரைக் கோடி ரூபாய் சச்சின் தரப்பில் கேட்கப்பட்டிருக்கிறது.

அதைத் தர மறுத்த தோடல்லாமல், "இதே ரேட்டுக்கு இரண்டு கிரிக்கெட் பிரபலங்களை வளைக்கிறேன் பார்!" என்று சவால் விட்டு, ராகுல் திராவிடையும் அஸாருதீனையும் பேசி, புக் பண்ணி விட்டதாம் பெப்ஸி.

இது கௌரவப் பிரச்னையாகப் போய் விட்டதால், தனது ஜூனியரான திராவிடை, "நீ ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடாதே!" என்று சச்சின் மிரட்டியதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், இதைப் பொருட்படுத்தாமல் திராவிட், பெப்ஸி விளம்பர ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு, விளம்பரமும் வெளியாகி விட்டது. 'எதிரணி' விளம்பரத்தில் தோன்றியதற்காக திராவிட் நீக்கப்பட்டிருக்கிறார் என்பது கிரிக்கெட் வட்டாரப் பேச்சு.

இதே கால கட்டத்தில், டீவி வர்ணனையில் அஸாரைக் கடுமையாக விமர்சித்திருக்கிறார் கவாஸ்கர். தேர்வாளர்களும் அவரை அழைத்துத் திட்டியதாகத் தகவல்.

திராவிட், அஸார் இருவருமே சச்சினுக்கு எதிரான பெப்ஸியணியாளர்கள் என்பதால் தான் அவர்கள் பேரில் ஓரவஞ்சனை என்று பத்திரிகைகள் பரபரக்கின்றன!

பெப்ஸியின் ஜென்ம விரோதியான கோககோலா, டெண்டுல்கரை மூன்று கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்திருக்கிறதாம். தவிர சௌரவ் கங்கூலியும் 2 கோடிக்கு ஒப்பந்தமாகி உள்ளார். விரைவில் ஜடேஜாவும் சித்துவும் கூட ஒப்பந்தமாகப் போகிறார்கள் என்கிறது கிரிக்கெட் வட்டாரம்.

கேப்டன் ஒருபுறம் இருக்கும்போது எதிர் கோஷ்டிக்கு வேறொரு 'ஸ்டார்' 'தத்து'ப் போவதை அந்த நிறுவனம் சகிக்காமல் தூண்டிவிட்டதுதான் இந்த அதிரடி நீக்கத்துக்குக் காரணம் என்கிறார்கள்.

"கோக் - பெப்ஸிக்கு இடையே நடக்கிற ஆதிக்கப் போட்டியில் எப்படியோ இந்திய கிரிக்கெட் அணி பலியாடாக விழுந்து விட்டது என்று வருத்தத்துடன் கமெண்ட் அடித்தார் ஒரு பிரபல முன்னாள் கிரிக்கெட் வீரர். நம்புவது கஷ்டமாகத்தான் இருக்கிறது... ஆனால் திராவிட் போன்றவரின் நீக்கத்துக்கு தேர்வுக்குழு வலுவான காரணம் கூறாதவரை வதந்திகள் வளர்ந்து கொண்டே போகும். ⊙

— நமது நிருபர்



• திராவிட்

ராபர்ட் ஜோன்ஸின் மாரியம்மன் கனவு!

• தமிழ் துர்கா

மதுரையில் புதிதாக ஒரு மாரியம்மன் கோவிலைக் கட்ட ஒருவர் முழு மூச்சாக இறங்கியுள்ளார். மூக்குக்கு முந்நூறு கோவில் இருக்கும்போது இது என்ன பிரமாதம்?

பிரமாதம்தான். கட்டப் போகிறவர் ராபர்ட் ஜோன்ஸ் என்ற இங்கிலாந்து இளைஞர்!

தன்னுடைய பதினேழாவது வயதில் குடும்பத்தை விட்டு வெளியேறிய ஜோன்ஸ் செய்யாத வேலைகள் இல்லை. ஹோட்டல் வேலையிலிருந்து செய்தித் தாள்கள் விற்பதுவரை அடிமட்டத்திலேயே ஒரு பயணம் செய்தவர். லண்டனிலிருந்து 76 மைல் தென் பகுதியில் உள்ள 'பாட்ஸ்மௌத்' என்னும் ஊரில் பிறந்தவர்.

மதுரை ராம்நகர் தெருவிலுள்ள அவர் வீட்டில் சந்திக்கச் சென்றபோது வெள்ளை சட்டை, கதர் வேட்டியில் நெற்றியில் குங்குமம் துலங்க "Come in!" என்றார் புன்னகை மலர.

"நான் 1983-ல் தனியாக மேற்கு வங்காளம் வந்து இறங்கியபோது வயது 22. 'பிரம சங்கிதா' என்ற புத்தகம்தான், என் வாழ்க்கையை மாற்றியமைத்தது! 'அம்ரோசியா' ஆசிரமத்தில் கால் வைத்ததும் நான் ஒரு இந்து என்று சொல்ல மனம் துடித்தது!" என்கிறார்.

ஸ்ரீதர் தேவ் கோஸ்வாமியின் வழி நடத்தலைக் கண்டு, அவரையே தன் குருவாக ஏற்றுக் கொண்டிருக்கிறாராம்!

ரேவதி ராமன்தாஸ் என்று தன்னுடைய பெயரை மாற்றிக் கொண்டுள்ளார்.

அதென்ன ரேவதி ராமன் தாஸ்?

"கிருஷ்ணனின் அண்ணன் பலராமன் இருக்காரில்லை? அவரோட மனைவி ரேவதி... அதான் ரேவதி ராமன் தாஸ்னு வச்சுக்கிட்டேன்!"

ராமன்தாஸ் நல்ல ஓவியர். லண்டனில் சக ஓவியர்களோடு பரிச்சயம் ஏற்பட்டதும், ஓவியத்தை மக்களிடம் எடுத்துச் செல்லும் விற்பனையாளராக மாறியுள்ளார்! இந்த பிஸினஸில் முழு நேரம் கவனம் செலுத்த, தியானம் கை கொடுத்திருக்கிறது என்கிறார்.

தம் அறையில் யாருக்கும் தெரியாமல் கிருஷ்ணன் படத்தை வைத்து பூஜிப்பாராம். நண்பர்கள் பார்த்து கேலி செய்வார்களே என்ற தவிப்பில் பெட்டிக்குள் ஒளித்து வைத்து விடுவது வழக்கமாம். சிவராத்திரி, விஜயதசமி போன்ற நாட்களில் உண்ணாநோன்பைத் தொடர்ந்து கடைபிடிக்கிறார்.

"ஒருமுறை லண்டன் பேர்லி தெரு வழியாக இரண்டு கைகளில் ஓவியங்களை அணைத்துக் கொண்டு வரும்போது கனமழை பெய்து கொண்



• ராபர்ட் ஜோன்ஸ்



டிருந்தது. முழங்கால் அளவு தண்ணீர், ரோட்டில் ஓடியது. பிளாட்பாரத்திற்கு ஏறக் கால் வைத்தபோது நீருக்குள் சிறு ஓவியம் மின்னியது! கையில் எடுத்தால் துர்காதேவி!'' சொல்லும்போதே பரவசப்படுகிறார். அவர் வீட்டில், அந்த துர்கையம்மன் வட்டக் கண்ணாடிக்குள் தரிசனம் தருகிறாள்.

ரேவதி ராமன்தாஸ் வீட்டுக்குள் தேவி நுழைந்தபின் பண மழைதான்! ஐந்தாண்டுகளில் ஓவிய விற்பனை ஆளைத் தூக்கி உச்சத்தில் உட்கார வைத்து விட்டது!

இரு நண்பர்களுடன் மதுரை வந்த பிறகு ராமனுக்குப் புதிய உற்சாகம் கிளம்பி விட்டது.

''மதுரை மீனாட்சி அம்மனைப் பார்த்த பின் என்னுடைய தடுமாற்றங்கள் கரைந்து விட்டன. எந்த விதச் சலனமும் இல்லாத ஒரு பாதை என் முன் விரிந்து போவதாக உணர்ந்தேன்!'' என்கிறார்.

வீட்டில் மாரியம்மன் சிலை வைத்து பூஜிக்கிறார். அதனை 'தமிழ் துர்கா' என்கிறார். பெரிய கேரள குத்துவிளக்கில் தீபம் எரிகிறது. பசுமலையில் பாதி செதுக்கப்பட்ட நிலையிலேயே இந்த மாரியம்மன் திருவுருவம் பிடித்துப் போய்விட, அதை வடித்து முடிக்கும்வரை காத்திருந்து ஒரு பௌர்ணமி நாளில் வீட்டுக்கு எடுத்து வந்திருக்கிறார். பாலாபிஷேகம் செய்த விஷயத்தைப் பெருமையாகச் சொல்கிறார்.

''வெளிநாட்டுக்காரனாக இருப்பதால் இடம் வாங்க முடியவில்லை. இந்திய அரசு என்னை இங்கு ஏற்றுக் கொண்டதும் இந்தக் கஷ்டங்கள் போய் விடும். பரந்த நெ[illegible] மத்தியில், அ[illegible]வாரத்தில் சின்னதாக மாரியம்மன் கோவிலைக் கட்டுவேன். இடத்தைத் தேடிக் கொண்டே இருக்கிறேன். அதனருகில் நான் தங்கிக் கொள்ள சிறிய வீடும் கட்டிக் கொள்வேன்...''

— அம்மாபட்டி ஐம்பு

''விறகு வெட்ட வந்திருக்கிறேன், ஐயா''

''உள்ளே போய் வெட்டு''

கொஞ்சம் காட்டில் உள்ளே போய் வெட்டினான். சாதாரண மரங்கள் கிடைத்தன.


''இன்னும் உள்ளே போய் வெட்டு''

அப்படியே செய்தான். தேக்கு மரம் கிடைத்தது.

''இன்னும் கொஞ்சம் உள்ளே போ!'' போனான்; கருங்காலி மரம் கிடைத்தது. ''இன்னும் போ!''

அதைப் போலவே உள்ளே நெருங்கி சென்றான். சந்தன மரம் கிடைத்தது. இதைப் போல ஒருவன் தனக்குள்ளே உள்ளே, மிக உள்ளே நடந்து சென்றால் ஆத்மாவைப் பார்க்கலாம் என்றார் ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸர்.

— சித்ரா தேவி, சென்னை.




கூட்டணி மேளா!
''நம்ம கட்சிக்கு இருபது தொகுதி தருவார்னு நம்பி இரண்டு நாளா பேச்சு வார்த்தை நடத்தினது வீணாப் போச்சு!''
''ஏன்?''
''இருபது தொகுதியும், பீகார்ல தர்றேன்னு இப்போ சொல்றார்.''
''தலைவர் வீட்டு வாசல்ல புத்தம் புது கார் நிக்கறதே, என்ன விசேஷம்?''
''கூட்டணியில நமக்கு அதிகத் தொகுதி தர்ற கட்சிக்கு, முதல் பரிசா ஒரு மாருதி கார் தர்றதா தலைவர் அறிவிச்சிருக்காரில்லே!''
''டெபாசிட்டை.... இ
மீன்.. ஸாரி..
ஜனநாயகத்தைக்
காப்பாத்தத்தான் இந்த
கூட்டணி...!''
- பாபுஜி


"தலைவர்கள் என்னமோ கண்ணை மூடிக்கிட்டு தமிழக மேப்பை வைச் சுட்டு விளையாடறாங் களே...?"
"ஒண்ணுமில்லே... தொகுதி பங்கீடு..."
"கூட்டணிக் கட்சிகள் மாநாடாம்!"
"ஏன் எல்லாரும் இப்படி விழுந் தடிச்சுட்டு பி.ஜே.பி.யில போய்ச் சேர்றாங்க...?"
"ஏன்னா... அது பாரதீய ஜெயிக்கிற பார்ட்டி!"
"இப்படியெல்லாம் வந்து பயமுறுத்தினா நான் அதிகத் தொகுதி தந்திருவேன்னு எதிர்பார்க்காதீங்க, ஆமாம்!"



“நான் ஒரு கத்துக்குட்டிதான்!”

– இலங்கை வேகப்பந்து வீச்சாளர் சமிந்தா வாஸ்

வெறும் இருபத்தி மூன்று வயது தான். ஆனால் உலகப் புகழ் பெற்ற இலங்கை கிரிக்கெட் அணியின் போலிங் பலத்தின் எழுபத்தைந்து சதவீதம், சமிந்தா வாஸைச் சார்ந்தது. இந்த இளைஞர் பிறந்து வளர்ந்த தெல்லாம் இலங்கை என்றாலும் வேகப்பந்து வீசப் பழகியது சென்னையில்தான்!

எம்.ஆர்.எஃப் உருவாக்கிய எத்தனையோ வேகப்பந்து வீச்சாளர்களுள் வாஸ் மிக முக்கியமானவர். ‘ரிவர்ஸ் ஸ்விங்’ போடுவதில் விற்பன்னர் என்று சொல்லப்படும் வாஸ் சமீபத்திய இந்திய சுற்றுப் பயணத்தின்போது ‘கல்கி’க்குப் பிரத்தியேகப் பேட்டி அளித்தார்:

கல்கி: நீங்கள் ஒரு பௌலராக உருவான விதம் பற்றிக் கூறுங்கள்...

வாஸ்: சிறு வயதிலிருந்தே எனக்கு இதே கனவுதான்! எங்கள் நாட்டு வேகப்பந்து வீச்சாளர்களான டி.மெல், ஒப்பத்தா, ருமேஷ் ரத்னாயக ஆகியோரை கவனித்து, ரசித்து, வியந்து, நாமும் எப்படியும் ஒரு வேகப் பந்து வீச்சாளனாக வேண்டும் என்று முடிவு செய்து கொண்டேன். பிறகு 87ல் கபில்தேவின் அபார ஆட்டத்தால் உலகக் கோப்பையை இந்தியா வென்றபோது என் வேகப்பந்துக் கனவு, வெறியாக மாறியது! அப்போதுதான் சோபர்ஸ், இலங்கைக்கு வந்து, இளம் ஆட்டக்காரர்களுக்குப் பயிற்சி அளித்தார். மிகக் கவனமாகக் கற்றுக் கொண்டு, இளைஞர் அணியில் இடம் பெற்றேன். (அண்டர் 19) அப்போது டென்னிஸ் லில்லியும் தாம்ஸனும் சென்னைக்கு வந்து எம். ஆர். எஃப் ஃபௌண்டேஷன் சார்பில் வேகப் பந்துப் பயிற்சி அளித்துக் கொண்டிருந்தார்கள். எங்கள் கிரிக்கெட் போர்டு, அந்தப் பயிற்சிக்கு என்னையும் புஷ்பகுமாராவையும் அனுப்பியது. இரண்டு வருஷம் சென்னை வாசம்! டி.ஏ.சேகர்தான் அடிப்படையான விஷயங்களை போதித்தார். பிறகு லில்லி, தாம்ஸன்

இருவரும் எங்களைக் கவனித்து, பந்து வீச்சு முறையில் தேவையான மாற்றங்களைச் செய்தனர். அதனால் தான்- அந்தப் பயிற்சியால்தான் இன்று உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஃபாஸ்ட் போலராக இருக்கிறேன்."

கல்கி: 'ரிவர்ஸ் ஸ்விங்' போடுவதில் மன்னராக இருக்கிறீர்களே? எப்படிக் கற்றுக் கொண்டீர்கள்?

வாஸ்: எல்லாம் பயிற்சிக் காலத்தில் கற்றுக் கொண்டதுதான். இன்றைக்கு வெறுமனே போடும் 'ஸ்விங்' எல்லாம் எடுபடுகிறதில்லை. ரிவர்ஸ் ஸ்விங்கிலேயே யார்க்கரும் போட வேண்டும். நான் மட்டும் என்றில்லை. கிட்டத் தட்ட எல்லா போலர்களுக்குமே இதே நிர்பந்தங்கள்தாம். எனது முன்னோடிகளான வாஸிம் அக்ரம், வக்கார் யூனுஸ், மனோஜ் பிரபாகர் எல்லாம் இந்தத் தொழில் நுணுக்கத்தில் Experts. அவர்களோடெல்லாம் ஒப்பிட்டால் நான் ஒரு கத்துக்குட்டி தான்!"

கல்கி: அணியில் மிக இளம் வீரர் நீங்கள். ஆனால் மெயின் போலராகவும் இருக்கிறீர்கள். கேப்டனோடு எப்படி இன்டர்-ஆக்ட் செய்கிறீர்கள்? அவர் உங்களுக்கு எப்படி உதவுவார்?

வாஸ்: நான், முரளி (முத்தையா முரளிதரன்), தர்மசேனா-மூவருக்கும் எல்லாமே அவர்தான்! (ரணதுங்க.) சின்னப்பையன் என்று பார்க்காமல், நாங்கள் பந்து வீசும் போது, கேட்கிறபடி ஃபீல்டிங் அமைத்துத் தருவார். ஒரு நல்ல பந்து போடும்போது பாராட்டுவது பெரிய விஷயமல்ல! ஒரு பந்தை எதிரணியினர் விளாசி ரன் குவித்தாலும் பதறாமல் அருகே வந்து தட்டிக் கொடுத்து, 'கவலைப்படாதே' என்று உற்சாக மூட்டுவார். இந்தக் குணம், கிரிக்கெட்டில் வேறு யாருக்கும் வராது!

> **"எனக்கு ஒரே ஒரு ஆசை. ஆனால் அது என்றுமே நிறைவேறாத ஆசையாகத்தான் இருக்கப் போகிறது."**

கல்கி: யாருக்குப் பந்து வீசும்போது அதிகம் சிரமப்படுகிறீர்கள் என்று சொல்ல முடியுமா?

வாஸ்: (சிரித்தவாறே) இதையெல்லாம் பார்க்க முடியுமா? சில நாள் பிரமாதமாகப் பந்து வீசுவேன். என் பந்தை அடிக்க எல்லாருமேதான் திணறுவார்கள். சிலநாள் 'பேட்ஸ்மன்களின் தினமாக' இருக்கும். வெளுத்து வாங்கிவிடுவார்கள். அப்படிப் பார்த்தால் லாரா, டெண்டுல்கர், மார்க் வாக் ஆகியோருக்குச் சில நாள் யாருமே பந்து வீச சிரமப்பட வேண்டி இருக்கும்! அந்த நாள் அவர்களுடையதாக இருக்கும்! அது மாதிரி சமயங்களில் நான் சற்று அளவு குறைவான பந்துகளையே வீசி, முடிந்த வரை ரன் குறைக்கப் பார்ப்பேன்.

கல்கி: உங்களின் நிறைவேறாத ஆசை ஏதாவது இருக்கிறதா?

வாஸ்: ஓ. ஒரே ஒரு ஆசை. ஆனால் அது என்றுமே நிறைவேறாத ஆசையாகத்தான் இருக்கப் போகிறது. உலகப் புகழ்பெற்ற பேட்ஸ்மன்- எங்கள் ஜெயசூர்யாவுக்குப் பந்து வீச முடியவில்லையே என்பது தான் அது! ●

பேட்டி, படம்: பழுவேட்டரையர்

ஹேப்பி பொங்கலில் ஒரு ஹேப்பி நியூஸ்!

கல்கி தகவல் வீட்டுக்கு வாருங்கள்!

இந்த இதழ் (11.1.98) தொடங்கி உங்கள் கல்கி இன்டர்நெட்டில் இடம்பிடிக்கிறது.

முகவரியைக் குறித்துக் கொள்ளுங்கள்:

www.kalkiweekly.com

ஈ மெயில் முகவரி:

kalki@md2.vsnl.net.in

இப்பவே கண்டுக்குங்க... நாளைக்கு இவங்க பெரியாளு!

இது இளைஞர்களின் யுகம். பல்வேறு துறைகளில் நாளை சாதனையாளராக ஆகப் போகிற இன்றைய குட்டி நட்சத்திரங்களைப் பற்றி ஒரு புயல்வேக சர்வே எடுத்தோம். சிக்கிய இளமைப் படை இது:

அபர்ணா பொப்பட்:


இந்தக் கர்நாடக பேட்மிண்டன் புயலின் வயது பத்தொன்பதுதான். புகழ் பெற்ற பேட்மிண்டன் வீரர் பிரகாஷ்



• சுபஸ்ரீ தணிகாசலம்

• அபர்ணா பொப்பட்

பதுகோன் இவருக்குக் கோச்சாக இருக்கிறார் என்றாலே புரிந்து விடும் - இவரது திறமை எப்படிப்பட்டதாக இருக்கும் என்பது. உலக அளவில் ஜூனியர் பிரிவில் இரண்டாமிடத்தில் நிற்கிற இந்த யுவதி, இந்தியாவின் எதிர்கால பேட்மிண்டன் நம்பிக்கை நட்சத்திரம். நட்சத்திரம் இப்போது இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனில் ஆபீஸராக இருக்கிறது.



ஹேமங் கே. பதானி

• கார்த்திக் குருமூர்த்தி

கார்த்திக் குருமூர்த்தி:

நம் ஊர் விவேகாவிலும் அண்ணாவிலும் அறிவியல் படித்துவிட்டு, ஐ.ஐ.டி இவரது ஆராய்ச்சித் திறனைப் பார்த்து மூக்கில் விரல் வைத்து ஜூனியர் பெல்லோஷிப் உதவி அளிக்க, இன்று அமெரிக்க டியூலேன் பல்கலையில் Human spectroscophy and Physical chemistry என்கிற கஷ்டமான (உச்சரிக்கவே) பிரிவில் ஆராய்ச்சி பண்ணிக் கொண்டிருக்கும் இருபத்தி நான்கு வயது சென்னை இளைஞர்! இந்திய அறிவியல் துறையின் நாளைய புதுமைப் புயல்!

அசோக்குமார்:

இருபத்தேழு வயது இளம் பிஸினஸ் மேன். ராஜஸ்தான்வாசி. + 2 வரைதான் படிப்பு. ஆனால் இவர் தேர்ந்தெடுத்திருக்கிற வியாபாரமே இவர் எத்தனை புத்திசாலி என்று இனம் காட்டும். 'கேரி-பேக்' தொழிற்சாலை ஒன்று நிறுவி, ஆறு வருடங்களாக பிளாஸ்டிக் கவர்களை உற்பத்தி செய்து வருகிறார்.

"2 பேருடன் ஆரம்பித்த என் தொழிற்சாலை இன்று 30 ஊழியர்களுடன் 4 கிளைகள் பரப்பி உற்பத்தியில் படுதீவிரமாக இருக்கிறது. விரைவில் மேலும் விஸ்தரிப்பேன். அரபு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணி சேர்ப்பது உடனடி லட்சியம்" என்கிறார்.

சுபஸ்ரீ தணிகாசலம்:

சன் டீவி ரசிகர்களுக்கு சுபஸ்ரீயின் பெயர் தெரியாமல் இருக்க முடியாது. நாலு வருடமாக 'சூரிய' நிழலில், தயாரிப்பாளராக 'ஹலோ சுகமா?', 'திரை விமர்சனம்', 'புலன் விசாரணை', 'சப்த ஸ்வரங்கள்' நிகழ்ச்சிகளை சுவாரஸ்யமாக வழங்கி வருபவர். திரை விமர்சனங்களில் இவரது 'பஞ்ச் லைனு'க்கென்று ஒரு ரசிகர் கூட்டமே இருக்கிறது. இருபத்தாறு

வயதான இந்தப் பட்டதாரிப் பெண்,
"குளியல் அறைப் பாடகர்களாக இல்லாமல் நிஜமாகவே நல்ல பாடகர்களை என் நிகழ்ச்சியின் மூலம் அறிமுகப்படுத்துவதே என் லட்சியம். விஷுவல் மீடியாவில் புதிது புதிதாக எதையாவது செய்து கொண்டே இருக்க வேண்டும் என்பதே என் தீராத தாகம்" என்கிறார்.

ஹேமங் கே. பதானி:

இருபது வயது இளம் கிரிக்கெட்டர். சென்னை விவேகானந்தா கல்லூரியில் இளநிலை இரண்டாமாண்டு படித்துக் கொண்டிருக்கும் பதானி, 19 வயதுக்குட்பட்ட போட்டியில் தென் ஆப்பிரிக்கா அணிக்கு எதிராக அடித்த சதத்தின் மூலம் சமீபகாலமாக இந்திய கிரிக்கெட் போர்டின் கவன வட்டத்துக்குள் வந்திருக்கிறார். அநேகமாக அடுத்த டூரில் இந்திய அணிக்குள்ளே வந்து விடக் கூடும் என்பது கிரிக்கெட் உலகப் பெரும்புள்ளிகளின் கணிப்பு. இடது கை ஸ்பின்னர், இடது கை பேட்ஸ்மேன் என்பது இவரது சிறப்புத் தகுதி. கும்ளேவுக்குப் பிறகு மிகவும் எதிர்பார்க்கப்படுகிற ஆல்ரவுண்டர்.

ஆர். அனுராதா:

"அருண் ஷோரி போல் வர வேண்டும்!" என்று தன் இலக்கைக் கனவுடனும் நம்பிக்கையுடனும் தெரிவித்த அனுராதா இந்தியன் எக்ஸ்பிரஸில் இருக்கிற எக்ஸ்பிரஸ் வேக செய்தியாளர்! டெலிபோன் துறையில் லைன்மேன்களால் நடத்தப்படும் 'கனெக்ஷன்' ஊழல் மற்றும் மெட்ரோவாட்டர் இணைப்பு தருவதில் நடைமுறையிலுள்ள லஞ்ச ஊழல்களை வெளிக் கொண்டு வந்ததன் மூலம் பரபரப்பாகக் கவனம் பெற்றிருக்கும் இவருக்கு வயது இருபத்தி மூன்று. ...ந்தவக் கல்லூரியில் படித்து, பின் ...லிஸத்தில் டிப்ளமோ வாங்கி ...ப்பவர். ●

தொகுப்பு: **சிம்மம்**
படங்கள்: **உமாமணி.**





1

நான் உன்னை சுவாசிக்கிறேன்

காதல் டைரிக் குறிப்பு :

உறங்காதிருந்தேன் – சுகம் – நினைவுகள்!

உறங்கிப் போனேன் – சுகம் – கனவுகள்!

அது ஒரு சூப்பர் மார்க்கெட்.

கண்ணாடிச் சுவருக்கு அந்தப் பக்கம் மக்கள் மௌனமாக எல்லாத் திசைகளிலும் சிறிய டிராலிகளைத் தள்ளிச் சென்று பொருள்களை எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தார்கள். சீருடை அணிந்த பணிப்பெண்கள் கம்ப்யூட்டர்களில் மும்முரமாக பில் போட, எல்லா கம்ப்யூட்டர்களின் முன்பும் ஒரு சின்ன 'க்யூ' இருந்தது.

பிரெட், ஜாம் மற்றும் சில அயிட்டங்களை அம்மா லிஸ்ட் எழுதிக் கொடுத்திருந்ததை பாக்கெட்டில் பல காகிதங்களுக்கு நடுவிலிருந்து தேடி எடுத்தான் அரவிந்த்.

கண்ணாடிக் கதவு தள்ளி உள்ளே வந்தான். ஹெல்மெட்டை ஒரு புறாக் கூண்டில் வைத்துவிட்டு பிளாஸ்டிக் டோக்கன் பெற்றுக் கொண்டான். ஒரு வலைக் கூடை எடுத்துக் கொண்டு மளிகைப் பகுதிக்கு வந்தான்.

லிஸ்ட் பார்த்து ஒவ்வொன்றாகத் தேடி எடுத்துக் கொண்டிருந்தபோது –

"எக்ஸ்க்யூஸ் மீ"

இந்த இரண்டு வார்த்தைகளை இதைவிட இனிமையாக, மென்மையாக யாராலும் உச்சரிக்க முடியாது.

அரவிந்த் திரும்பிப் பார்த்தான்.

டிராலியுடன் வழிக்கான விழிக் கெஞ்சலுடன் நின்றிருந்த அவளைப் பார்த்தவன், சில விநாடிகளுக்குப் பிறகுதான் சுதாரித்து ஒதுங்கி வழி விட்டான்.

அவன் தள்ளிக் கொண்டு நகர, அவள் முகம் மறைந்து முதுகு தெரியும் வரை பார்த்துக் கொண்டிருந்து விட்டுப் பார்வையைத் திருப்பினான்.

இரண்டு விநாடிகளில் அவள் அவனைக் கடந்திருந்தாலும், ஜன்னலைத் திறந்ததும் முகத்தில் கவிதை எழுதும் மார்கழிக் காற்றாக, அவள் முகம் பார்த்ததும் சில்லென்று மாறிப் போனது மனசு.

இவளை நான் எங்கேயோ பார்த்திருக்கிறேனே...

எங்கே? எப்போது?

மூளை சுறுசுறுவென்று வினாக்களை எழுப்பி நினைவடுக்கின் பக்கங்களை பரபரவென்று புரட்டத் துவங்கியது.

தூரத்தில் நின்ற அவளை மீண்டும் திரும்பிப் பார்த்தான். முதுகு காட்டி நின்ற அவள், பணிப்பெண்ணிடம் ஏதோ தலையை ஆட்டிக் கேட்க, 'யு' கட் செய்து வகிடில்லாமல் தொகுத்து பட்டை மரக் கிளிப் வைக்கப்பட்ட கூந்தல் அழகாக அசைந்தது. அவளின் புடைவைக் கட்டலில் நேர்த்தியும், நளினமும் இருந்தது. ஒரு மரியாதையைக் கேட்டுப் பெற்றது.

கண்டிப்பாக இவளை நான் பார்த்திருக்கிறேன். ச்சே! ஏன் உடனே நினைவிற்கு வர மறுக்கிறது?

தொலைக்காட்சியில் நிகழ்ச்சி எதிலோ வந்தவளா? நிகழ்ச்சித் தொகுப்பாளரா? ஏதாவது செய்தித்தாளில், புத்தகத்தில் பார்த்தேனா? இசை, நாட்டியம், கதை, கவிதை எதிலாவது இவள் பிரபலமா?

சினிமா தியேட்டரில் எனக்கு டிக்கெட் வாங்கித் தந்தவளா? சேப்பாக்கம் கிரிக்கெட் ஸ்டேடியத்தில் பாப்கார்ன் வாங்க என்னிடம் சில்லறை மாற்றியவளா? பேங்கில் பணம் எடுத்தபோது அடுத்த டோக்கன்காரியா? ரயில்வே ரிசர்வேஷன் கியூவில் பேனா இரவல் கொடுத்தேனா?

ச்சே! ஞாபகம் வரவில்லையே.. மீண்டும் ஒருமுறை அவள் முகத்தைப் பார்த்தால் ஞாபகத்திற்கு வருமோ? மறுபடி அவள் முகத்

தைப் பார்க்க வேண்டுமென்றால் அவளைத் தொடர்ந்து, அவள் போகின்ற பகுதிக்கெல்லாம் போக வேண்டும். நேரடியாகப் பார்ப்பதும் நாகரீகமில்லை. அவளைக் கவனிக்காதது போல யதேச்சையாகத் திரும்பி அவள் முகத்தைக் கவனிக்க வேண்டும்.

இது தேவைதானா? அவள் யாராக வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டுமே. அதனால் என்ன? அவளை மீண்டும் பார்க்க நான் எதற்குத் துடிக்க வேண்டும்?

மனம் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கும் போதே கால்கள் அவள் நின்ற திசை நோக்கி நடக்கத் துவங்கி விட்டன.

அவள் இப்போது ஒப்பனைப் பொருட்களின் பகுதியில் நின்று டிசைன் ஸ்டிக்கர் பொட்டு அட்டைகளைத் தேர்வு செய்து கொண்டிருக்க, பத்தடி தள்ளி நின்று இவன் கைக்குக் கிடைத்த ஒரு ஷேவிங் க்ரீமை எடுத்துப் பார்த்தபடி திரும்பி அவள் முகத்தைப் பக்கவாட்டுத் தோற்றத்தில் பார்த்தான்.

அந்தப் பளீர் வெண்மையும், மென்மையும் முதுகுத் தண்டில் ஐஸ் கட்டிகளை ஊர்வலம் நடத்த, உடனே பார்வையைத் திருப்பிக் கொண்டான். ஆனால் ஸ்பிரிங் வைத்த கதவு போல உடனே அவள் பக்கம் பார்வை திரும்பிக் கொண்டது.

என்ன ஆயிற்று எனக்கு? ஏன் இப்படித் தவிக்கிறேன்? ஏன் உள்ளே நூறு வயலின்கள் இசைக்கப்படுகின்றன? ஏன் பறவைகள் கிரீச்சிடுகின்றன? ஏன் சந்தோஷ ஊற்று கொப்பளிக்கின்றது?

"இந்த ஷேவிங் க்ரீம் புதுசா அறிமுகப்படுத்தினது சார். ரொம்ப நல்லா இருக்கும்" என்றாள் அந்தப் பணிப்பெண்.

தான் நீண்ட நேரமாக அந்த ஷேவிங்

பட்டுக்கோட்டை பிரபாகர்



க்ரீமைக் கையில் வைத்துக் கொண்டு எந்த முடிவுக்கும் வராததை உணர்ந்து, "எக்ஸ்பைரி தேதி பார்த்தேன்" என்று வைத்து விட்டான்.

"ஷேவிங் க்ரீமுக்கு ஏது சார் எக்ஸ்பயரி?"

"ஆமாம். கிடையாது... ஸாரி" என்று வழிந்து விட்டு நகர்ந்தான்.

அவள் இப்போது வேறு பகுதிக்குச் செல்ல, அவளைத் தொடர்வதை அவனால் தடுக்க முடியவில்லை.

நேராக அவளிடமே சென்று கேட்டு விட்டால் என்ன? இதில் என்ன தவறு இருக்கிறது?

அரவிந்த் அவளருகில் வந்தான்.

"எக்ஸ்க்யூஸ் மீ"

அவள் திரும்பிப் பார்த்தாள்.

"யெஸ்?"

"நான் உங்களை எங்கேயோ பார்த்திருக்கேன். ஆனா சட்டுன்னு ஞாபகத்துக்கு வரலை. நீங்க.."

அவள் லேசாக முறைத்தாள்.

"நான் யாரா இருந்தா உங்களுக்கென்ன?"

"அதில்லை. எங்கேயோ பார்த்திருக்க மேன்னு தவிப்பா இருக்கு."

"மிஸ்டர்! உங்களுக்கு இப்ப என்ன, என் பேரும் அட்ரஸும் தெரியணுமா? தெரிஞ்சிக் கிட்டு என்ன பண்ணப் போறீங்க? நான் போற இடத்துக்கெல்லாம் என் பின்னாடியே வந்து லவ் லெட்டர் தரணுமா? நான்சென்ஸ்! இதெல்லாம் ரொம்ப ஓல்டு அப்ரோச்! கெட் லாஸ்ட்!"

அவள் விருட்டென்று விலகிச் செல்ல...

அரவிந்த் தன் கற்பனை உரையாடலில் இருந்து மீண்டான்.

நேரடியாகப் போய்ப் பேசினால் இப்படி முகத்திலடிப்பது போல அவள் பதில் பேச வாய்ப்பிருக்கிறது.

'உங்களை எங்கேயோ பார்த்திருக்கேனே' என்பது ஒரு துவக்கப் பேச்சுக்காக பலர் சொல்கிற பொய்தான். ஆனால்... நான் நிஜமாகவே எங்கேயோ பார்த்திருக்கிறேனே...

அவள் இப்போது பிஸ்கெட்டுகள் இருந்த பகுதியில் உயரத்தில் இருந்த ஒரு க்ரீம் பிஸ்கெட் பாக்கெட்டை எடுக்க எம்பி அப்படியும் எட்டாமல் போக, பணிப்பெண்ணின் உதவிக்காக சுற்றும் முற்றும் பார்த்தாள்.

அப்போது அந்தப் பகுதியில் யாரும் இல்லாததால், அரவிந்த் தன் உயரத்திற்கு அந்த பிஸ்கெட் பாக்கெட் சுலபத்தில் எட்டும் என்று உணர்ந்ததால், சட்டென்று எடுத்து அவளிடம் நீட்டினான்.

"தேங்க்யூ" புன்னகையுடன் வாங்கி டிராலியில் போட்டுக் கொண்டு அவள் நகர்ந்தாள்.

தன் முகம் பார்த்து அவள் சொன்ன வார்த்தைகள் மனத்திற்கு மலர் ஒத்தடம் கொடுத்தன.

அவள் இன்னொரு பகுதிக்கு டிராலியைத் திருப்பியபோது அவளின் பார்வை இவனைத் தடவிச் சென்றதை உணர்ந்தான்.

நான் அவளின் நடவடிக்கைகளையே கவனித்துக் கொண்டிருந்ததால்தான் அந்த பிஸ்கெட்டை எடுத்துக் கொடுக்க முடிந்த தென்பதை அவள் தாமதமாக உணர்ந்திருக்க வேண்டும்.

'என்னை அவன் கவனித்திருக்கான்' என்கிற உள்ளுணர்வின் வெளிப்பாடாக, 'என்னைக் கவனித்த இவன் யார்?' என்கிற கேள்வியின் விடை தேடலாகத்தான் அந்த



மறு பார்வை இருந்திருக்க வேண்டும்.

இதற்கு மேல் அவளைத் தொடர்ந்து செல்வதற்குச் சங்கடமாக இருந்தது. 'நான் உன் பின்னாலேயே வரவில்லை. யதேச்சையாகக் கவனித்து உதவினேன்' என்று ஸ்தாபிக்க வேண்டுமென்றால் இனி தொடரக் கூடாது.

அவள் இப்போது பார்வையிலிருந்து முற்றிலும் மறைந்து விட்டாள். ஓர் ஏமாற்ற அலை உள்ளே வீசியது.

கடந்த பல நிமிடங்களாக அவளைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பது சுவாரசியமாகவும் இருந்தது. அவஸ்தையாகவும் இருந்தது.

பார்த்திருப்பதாக ஞாபகம் வருகிறது. எங்கே, எப்போது என்று மட்டும் நினைவுக்கு வந்து தொலைக்க மாட்டேனென்கிறதே... தேவையற்ற எத்தனையோ விஷயங்களை உடனே நினைவுபடுத்தும் மூளையே, இவள் விஷயத்தில் ஏன் இப்படி சண்டித்தனம் செய்கிறாய்?

அரவிந்த் பில் போடுகிற பகுதிக்கு வந்

தான். நான்கு வரிசைகளில் அவன் நின்றிருந்த வரிசைக்குத்தான் கால்கள் நடத்திச் சென்றன.

அந்த வரிசையில் இரண்டாவது நபராக அவள் நின்றிருந்தாள். நடுவில் இரண்டு பேர் நிற்க, ஐந்தாவது நபராக இவன் நின்றிருந்தான். அவளுக்கு நேர் பின்னால் நின்ற ஜீன்ஸ் இளைஞன் மேல் அர்த்தமில்லாமல் கோபம் வந்தது.

நியாயமான காரணத்தோடு அவளின் அருகாமையில் நிற்கின்ற வாய்ப்பு தனக்குக் கிடைக்காமல் போனதில் ஓர் ஏமாற்றம் உணர்ந்தான்.

வரிசை நகர்ந்து அவள் தன் நீளமான மெல்லிய விரல்களால் தன் டிராலியில் இருந்த பொருட்களை எடுத்து மேஜை மேல் வைத்து விட்டு, கைப்பை திறந்து பணம் எடுத்து பில் தொகை சொல்லப்படுவதற்குக் காத்திருந்தாள்.

அவள் செயல்களில் அவசியமற்ற பதற்றமில்லை. நளினமிருந்தது. கைப்பையின் ஜிப்பை சரக்கென்று திறக்கவில்லை. அந்த நிதானத்தில் ஒரு ரசனை இருந்தது.

"மேடம், நானூத்திப் பத்து ரூபா. ஐந்நூறு ரூபாய்க்கு பர்ச்சேஸ் செஞ்சா இந்த பெயிண்ட்டிங் ஃப்ரீ மேடம். இன்னும் தொண்ணூறு ரூபாய்க்கு ஏதாவது எடுக்கறீங்களா?"

> "அந்த டாக்டர் புதுசா 'ஸ்கேனிங் மிஷின்' வாங்கியிருக்கார் போலிருக்கு."
> "எப்படிச் சொல்றீங்க?"
> "குப்புசாமின்னு ஒரு பேஷண்ட் வந்தாரா டாக்டர்னு கேட்டதுக்கு, 'ஸ்கேன் பண்ணிப் பார்த்தால்தான் கரெக்டா சொல்ல முடியும்'னு சொன்னாரே!"
> — சீர்காழி வி. ரேவதி

அந்தப் பணிப்பெண் காட்டிய லாமினேட் செய்யப்பட்ட அழகான கோட்டுச் சித்திரத்தைக் கையில் வாங்கிப் பார்த்தாள் அவள்.

"பியூட்டிஃபுல்! ஆனா நான் எல்லாம் வாங்கி முடிச்சுட்டேனே... சரி, பரவால்லை. நீங்க பில்லை க்ளோஸ் பண்ணிக்கங்க."

அந்த ஓவியத்தை மீண்டும் இருமுறை பார்த்துவிட்டு வைத்தாள்.

அரவிந்த் அவசரமாக தன் வலைக் கூடைக்குள் பார்த்தான். தான் வாங்கியுள்ள பொருட்கள் கண்டிப்பாக நூற்றைம்பது ரூபாய்க்கு மேல் வரும் என்று தோன்றியது.

அதே பில்லில் இவற்றையும் போட்டால் பில் தொகை ஐநூறைத் தாண்டும். அப்போது அந்த ஓவியம் இலவசமாகக் கிடைக்கும். அவள் ரசித்த அந்த ஓவியத்தை அவளிடமே கொடுத்து விடலாம்.

அவளிடம் கேட்டுப் பார்க்கலாமா என்று துடிப்பேற்பட்டாலும் உடனே அதைத் தடுத்தான். இது அதிகப்பிரசங்கித்தனமாகப் படாதா? வேண்டுமென்றே வழிவது போலிருக்காதா?

"மைண்ட் யுவர் பிசினஸ்" என்று சொல்லிவிட்டால்?

அரவிந்த் பேசாமலிருந்துவிட, அவள் தன் பொருட்களின் பாலிதீன் பைகளோடு வாசலை நோக்கி நடந்தாள். இவன் பார்வையால் தொடர்ந்தான்.

வெளியே மழை பெய்து கொண்டு இருக்க, அவள் நின்று மழை குறையக் காத்திருந்தாள்.

இவன் முறை வந்தபோது ஒரு தைரியத்தில், "எக்ஸ்க்யூஸ் மீ, முதல்ல நானூத்திப் பத்து ரூபாய்க்கு பில் போட்டீங்களே, அந்த பில்லோட இதையும் சேர்த்துப் போட முடியுமா?" என்றான்.

"ஏன் அப்படிப் போடணும்? அந்த பில்லை க்ளோஸ் பண்ணியாச்சே!"

"கம்ப்யூட்டர்ல மறுபடி திருத்த முடியுமே, அந்த ஓவியம் கிடைக்கும். அவங்க ரொம்ப ஆசைப்பட்டாங்க. அவங்ககிட்ட கொடுக்கலாம்னு பார்த்தேன்."

"அவங்களுக்காக நீங்க எதுக்கு சார்..."

"வந்து... ஷி ஈஸ் மை லவர். ஒரு சின்ன ஊடல். அதான் பேசாம இருக்கோம். இந்த உதவி செஞ்சீங்கன்னா இந்த ஓவியத்தைக் கொடுத்து அவளைச் சமாதானப்படுத்துவேன். ப்ளீஸ்..."

தனக்கு இப்படியெல்லாம் சரளமாகப் பொய் பேச வருமா என்று அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது.

"ஓ.கே. சார். நான் உதவி பண்றேன்."

அந்தப் பெண் அவளின் பில்லில் இதையும் சேர்த்து, ஓவியத்தைத் தர, இப்போது தனது பொருட்களுடன் மற்றும் ஓவியத்துடன் வாசலுக்கு நடந்தான் அரவிந்த்.

அந்தக் கம்ப்யூட்டர் பெண் கண்டிப்பாகப் பார்ப்பாள். இதை எப்படி, என்ன சொல்லி அவளிடம் ஒப்படைக்கப் போகிறேன்? அவள் என்ன சொல்வாள்?

அவளை நோக்கிப் பதறும் உள்ளத்துடன் மெதுவாக நடந்தான் அரவிந்த்.

(தொடரும்)

ஸ்ரீ

ஸ்ரீபூமிநீளா ஸமேத ஸ்ரீஆதிகேசவ பரப்ரஹ்மணே நம:

SRI KESAVA PERUMAL SANNADHI NITHYA PUJA THIRUPPANI NIRUVAHA SABHA

SCHOOL STREET, SELAIYUR, CHENNAI - 600 073

ஸ்ரீய: பதியான ஸர்வேஸ்வரன் ஸ்ரீமத் நாராயணன் ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து இம்மண்ணுலகில் அர்ச்சாவதாரமாய் எழுந்தருளி சென்னை மாநகரில் உள்ள தாம்பரம் அருகில் சேலையூரில் வெகுகாலமாக கோயில் கொண்டுள்ளார். இக் கோயிலை சீர் செய்ய வேண்டி, சேலையூர் வாசிகள் முயற்சி செய்து, அமிர்தவல்லித் தாயார் ஸன்னிதி, ஜெயராமன் ஸன்னிதி, மணி மண்டபம், விமானங்களும் ஏற்படுத்தி திருப்பணி செய்யப்பட்டு **மஹா சம்ப்ரோக்ஷணை (கும்பாபிஷேகம்) நாளது ஈஸ்வர வருஷம் தை மாதம் 17-ந் தேதி (30.1.98) ஆரம்பிக்கப்பட்டு 19-ந் தேதி (1.2.98) ஞாயிற்றுக்கிழமை 8.20 மணியிலிருந்து 9 மணிக்குள்** கும்ப லக்கினத்தில், ஆச்சாரியர்களாலும், பெரியோர்களாலும் நிச்சயிக்கப்பட்டு, மிகச் சிறப்புடன் நடைபெற உள்ளது) நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன.

1. நெய் 30 kg ரூ. 5,000, 2. கலசம் (செம்பு) 108 each ரூ. 60/- ரூ. 6,500, 3. பிரதான கலசம் 9 each 450/- ரூ. 4,000 4. தீகைஷ வஸ்திரங்கள் (9x5= 32, 7x5=35) ரூ. 15,000, 5. ததியாராதனை - ஒரு நாளைக்கு ரூ. 7,500, 6. கல்யாண உற்சவம் ரூ. 5,000, 7. பூர்ணாஹுதி ரூ. 7,000, 8. பூரிதக்ஷிணை ரூ. 5,000, 9. யாகசாலை, வேதபாராயண தக்ஷிணை ரூ. 25,000, 10. புஷ்பங்கள் மாலைகள் ரூ. 7,500, 11. ஷோடஸ உபசாரம் (பெருமாள் பாத்திரங்கள்) ரூ. 10,000, 12. ஸ்வாமி வீதி புறப்பாடு ரூ. 10,000, 13. வாசனை திரவியங்கள் ரூ. 1000, 14. மண்டலாபிஷேகம் ரூ. 250 சுபம்

Cheque /DD in favour of


SRI KESAVA PERUMAL SANNADHI NITHYA PUJA & THIRUPPANI NIRUVAHA SABHA

அனுப்ப வேண்டிய முகவரி

K. SEENU DURAI, Hony. President, No.191, Velachery Road, Selaiyur, Chennai - 600 073. Phone; 2376824	**T.R. SRINIVASAN,** No.5, Suresh Nagar, Selaiyur, Chennai - 600 073.



இது சர்வதேச போன் கால். அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்கள். எம் & ஏ. யு.எஸ்.ஏ.





1998 ஜனவரி 11
ஈசுவர மார்கழி 27
மலர் : 56
இதழ் : 24

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




ஏமாந்த சோனியா!

கேசரி விரித்த வலையில் கண்ணை மூடிக்கொண்டு விழுந்திருக்கிறார் சோனியா காந்தி! காங்கிரஸுக்காகப் பிரசாரம் செய்வது என்ற அவர் முடிவில் மெய்யாகவே நல்லெண்ணம் இருக்கலாம். ஆனால், அவரை இந்தக் காரியத்தில் இழுத்துப் போட்டுள்ள கேசரி நிச்சயமாக நல்லெண்ணத்துடன் செயல்படவில்லை! சோனியாவுடன் அவருக்கு நல்லுறவு கிடையாது என்பது உலகறிந்த உண்மை. அப்படியும் அவர் சோனியாவின் உதவியை நாடிப் போக வேண்டிய நிர்ப்பந்தம் விளைந்திருக்கிறது.

காங்கிரஸில் இனி எதிர்காலம் இல்லை என்று முடிவு செய்த அதன் முக்கிய உறுப்பினர்கள், கொத்துக் கொத்தாக விலகிப் போய் வேறு கட்சிகளில் சேர ஆரம்பித்தபோது, 'போகாதே! போகாதே!' என்று கெஞ்சிப் பார்த்தார் கேசரி. யாரும் கேட்கிற வழியைக் காணோம்! தம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் இறுதி முயற்சியாக சோனியா காந்தியை அணுகி 'சரணாகதி'யாகி விட்டார். சோனியாவும் தம் 'குடும்பக் கட்சி' அடைந்துள்ள பரிதாப நிலை கருதியோ அல்லது அடிமனத்தில் இருக்கக்கூடிய பதவி ஆசையின் உந்துதலாலோ, தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட சம்மதித்து விட்டார்!

சோனியா தேர்தலில் போட்டியிட்டாலும் சரி, பிராசாரத்தோடு நிறுத்திக் கொண்டாலும் சரி, தேர்தல் முடிவுகளை அது பெரிய அளவில் பாதிக்காது.

இன்று நாடாளுமன்றத்தில் அதிக இடங்கள் பெற்றுள்ள தனிக்கட்சி பி.ஜே.பி. இக் கட்சியைத்




தேர்தலில் எதிர்ப்பவை காங்கிரஸ் மற்றும் ஐக்கிய முன்னணி. இந்த நிலையில், சோனியாவின் பிரசாரத்தால் சில - பல வாக்காளர்கள் கவரப்பட்டாலும் இந்த மும்முனைப் போட்டியில் ஐ.மு.வின் வாய்ப்புகள்தான் பாதிக்கப்படுமேயொழிய, பி.ஜே.பியினுடையவை அல்ல.

மாநில அளவிலான கூட்டணிகள் அமைத்து பி.ஜே.பி. ஏற்கெனவே தன்னை மேலும் பலப்படுத்திக் கொண்டிருக்கிறது. நாட்டில் தொழில்துறை கடந்த சில மாதங்களாக ஸ்தம்பித்துக் கிடப்பதைக் கண்டு அரண்டு போயிருக்கும் தொழிலதிபர்கள், ஜெயிக்கக்கூடிய கட்சியான பி.ஜே.பிக்கு ஆதரவையும் நிதியுதவியையும் தாராளமாக வழங்கியிருக்கிறார்கள். தனது அடிப்படைவாதப் போக்கையும் பி.ஜே.பி. குறைத்துக் கொண்டு, 'வி.எச்.பிக்கும் எங்களுக்கும் ஏது தொடர்பு...?' என்று கேட்கிற அளவுக்கு அதிரடி மாற்றங்களுக்கு இடம்தர ஆரம்பித்துள்ளது.

இவ்வளவு நடந்த பிறகும் தமது பிரசாரத்தினால் நேரு அபிமானிகளின் கணிசமான ஆதரவைப் பெறலாம் என்று சோனியாவுக்கு ஓர் எண்ணம் இருந்தால், அது நிறைவேறப் போவதில்லை. ராஜீவ் மரணத்தையொட்டி அவர் நடத்திய பிரசாரத்துக்கும் இப்போது நடத்தப் போகும் பிரசாரத்துக்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது. கடந்த சில ஆண்டுகளில் அனுதாப அலை அடங்கிப் போயிருப்பதுடன் போபர்ஸ் உண்மைகள் ராஜீவின் இமேஜை சேதப்படுத்தியிருக்கின்றன. போதாக்குறைக்கு ராவ், கேசரி போன்ற காங்கிரஸ் தலைவர்கள் பேரிலெல்லாம் வேறு, வண்டி வண்டியாக ஊழல் குற்றச்சாட்டுகள் உள்ளன. சோனியாவின் பிரசாரத்தால் இந்த அழுக்குகளைப் போக்க முடியாது.

இத்தனை பேர் விட்டு நீங்கிய பிறகும் காங்கிரஸுக்குள் நீடிக்கும் உட்பூசல்களுக்கு சோனியாவால் ஒட்டுப் போட முடியாது! பவார், கேசரி, அர்ஜுன் சிங் என்று தலைக்கொரு பக்கமாக அவரை அலைக்கழிக்கக் காத்திருக்கிறார்கள்!

பிரசாரத்தோடு நிறுத்திக் கொள்ளாமல், சோனியா தேர்தல் களத்திலேயே இறங்க முடிவு



செய்தாலோ, அது மேலும் விபரீதமாக முடியும்!

என்னதான் ராஜீவின் மனைவி என்றாலும் ஓர் இத்தாலியரைத் தலைவியாக ஏற்கவோ, ஆட்சியில் எந்தவித பொறுப்பையும் அளிக்கவோ நமது சராசரி மக்களின் மனநிலை அனுமதிக்கவே அனுமதிக்காது.

ராஜீவ் காந்தி ஃபவுண்டேஷனின் தலைவியாகச் செயல்பட்டு இந்தியா முழுவதற்கும் ஏராளமான நற்பணிகள் செய்து சம்பாதிக்கக்கூடிய நற்பெயரை, அரசியல் பிரவேசமோ, ஈடுபாடோ சோனியாவுக்கு நிச்சயமாகப் பெற்றுத்தரப் போவதில்லை.

இந்த யோசனைகளெல்லாம் இன்றியோ அல்லது அவற்றை ஒதுக்கித் தள்ளி விட்டோ சோனியா காந்தி ஏன் இப்படியொரு முடிவை எடுத்தார் என்பது புதிர்தான்.

ஆனால், இந்தக் கணக்குகளைப் போட்டுப் பார்த்த பிறகும் கேசரி ஏன் சோனியா உதவியை வற்புறுத்திப் பெற்றார் என்பது புதிரே அல்ல!

வரவிருக்கும் தேர்தலில் காங்கிரஸ் பலத்த அடி வாங்கும்போது, 'சோனியா பிரசாரம் செய்தும் பயனில்லை பாருங்கள்...' என்று அவர் தமது பொறுப்பைக் கை கழுவி விட்டு விடலாம். ஒருவேளை சோனியாவின் பிரசாரத்துக்கு ஓரளவு பலனிருந்து எதிர்பார்த்ததை விடக் கூடுதலான இடங்களை காங்கிரஸ் பெற்றாலோ, 'சோனியாவைப் பிரசாரத்துக்கு அழைத்ததே நான்தான்... என் யோசனையால், என் முயற்சியால்தான் இது நடந்தது' என்று நல்ல பெயரைத் தட்டிக் கொள்ளலாம்.

தமது தலைமைக் காலத்தில் சீதாராம் கேசரி காங்கிரஸுக்கு ஒரு நல்லதைக் கூடச் செய்யவில்லை. இப்போது அவர் செய்திருப்பதோ சிகரம் வைத்தது போன்ற தீமை. நவீன அரசியலுக்கு சற்றும் ஒத்துவராத வாரிசு அமைப்பை மீண்டும் தூசி தட்டி உயிருக்குக் கொண்டு வரும் அவரது முயற்சி, காங்கிரஸுக்கும் சோனியாவுக்கும் குழிபறிக்கும் சுயநலக் காரியம்!

1

எம்.எஸ். உதயமூர்த்தி

என்னைச்

திருமணமான புதிது. அப்போதுதான் பி.எஸ்ஸி. படிப்பை முடித்திருக்கிறேன். சீர்காழி இந்து உயர்நிலைப் பள்ளியில் எனக்கு ஆசிரியர் வேலை கிடைத்தது. பள்ளி ஆசிரியராகப் போக ஆசிரியப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும் - பி.டி. பட்டம் வேண்டும். பயிற்சி பெறாதவர்களையும் எடுத்துக் கொள்வார்கள்.

என் மாமா வீடு வைத்தீஸ்வரன் கோவிலில் இருந்தது. என் மனைவியின் அம்மா வழியில் என் மாமாவுக்குக் கிடைத்த பூர்வீக சொத்து அது! ஓய்வு பெற்று வந்ததும் வசிப்பதற்காகப் புதிதாக வீடு கட்டி இருந்தார்கள். அதிலேதான் நானும் என் மனைவியும் வாழ்வைத் துவங்கினோம். சீர்காழி நான்கு மைல் தூரம். சைக்கிளில் போய் வருவேன்.



எனக்கு வயது 21. என் மனைவி வயது 18. துணிச்சலான பெண். வேலை செய்யத் தயங்க மாட்டாள். வீட்டிலோ, தண்ணீருக்கு வசதி இல்லை. கொல்லையிலே கிணறு இல்லை. குளிக்க, துணி துவைக்க, பாத்திரம் விளக்க தினமும் தண்ணீரை வெளியில் இருந்துதான் எடுத்து வர வேண்டும். நாங்கள் இருந்த வீடோ, கடைத் தெரு முனையிலிருந்து நான்காவது வீடு. கடைத் தெரு எப்போதும் 'ஜே, ஜே' என்றிருக்கும். வீடு வெட்டி ஆட்கள் எப்போதும் தெருமுனையில் நின்று கொண்டிருப்பார்கள். பஸ் நிற்குமிடம் அது. 'அது யார் வீடு?' என்பது கடைத் தெருவில் உள்ளவர்களுக்குப் பொதுவாகத் தெரியும். எனினும் ஒரு வயதுப் பெண் வெளியில் பலமுறை சென்று குடத்தில் தண்ணீர் எடுத்து வருவது கஷ்டமான காரியமாகத்தான் இருந்தது.

என் மனைவி அதை எப்படி உணர்ந்தாளோ - நினைவில்லை. எனக்கு அது கஷ்டமாக இருந்தது. வள்ளுவர் ஓரிடத்தில் பாடுகிறார்:

''மலரன்ன கண்ணான் முகம் ஒத்தியாயின்
பலர் காணத் தோன்றல் மதி'' என்று.

அதாவது, ''ஓ சந்திரனே, நீ என் காதலியின் முகத்தைப் போல அழகுடையவனாக இருந்தால் நீ பலர் காணத் தோன்றாதே'' என்று பாடுகிறார். நானும் சந்திரனைப் பார்த்து அப்படிப் பாடும் நிலையில்தான் இருந்தேன்!

இதை எழுதும்போது என் நிலைக்கு நேர் எதிரான நிலையிலிருந்த முல்லாவின் சங்கதிதான் நினைவுக்கு வருகிறது!

முதலிரவு. முல்லாவின் திருமணம்



முடிந்த முதல் நாள். முல்லாவின் மனைவி அறைக்குள் வருகிறார். இதுவரை முல்லா தன் மனைவியின் முகத்தைப் பார்த்ததில்லை. தன் முகத்தின் முன் தொங்கியிருந்த சீலையைத் தூக்கி முல்லாவைப் பார்த்துச் சொல்கிறார். "பிரபோ! நம் வீட்டுக்கு வரும் யார் யாரிடம் என் முகத்தைக் காட்ட வேண்டும் என்று சொல்கிறீர்களோ அவர்களிடம் நான் என் முகத்தைக் காட்டுவேன்; நீங்கள் உத்தரவிடுங்கள்!" என்கிறார்.



முல்லாவுக்கோ அதிர்ச்சி! காரணம் அவர் மனைவியின் முகம் அவ்வளவு அவலட்சணமாய் இருந்தது! முல்லா சொன்னார்: "அன்பே! நீ யாரிடம் வேண்டுமானாலும் உன் முகத்தைக் காட்டு! என்னிடம் மட்டும் இந்த ஜன்மத்திற்குக் காட்டாதே!" முல்லாவின் கதை அப்படி!

நாங்கள் வேலைக்காரியை வீட்டு வேலைக்கு வைத்துக் கொள்ளலாம். குடும்பத்தில் நானும் என் மனைவியும் மட்டுமே. தண்ணீர் கொண்டு வருவதைத் தவிர வேலை ஏதும் கிடையாது. எனது மாதச் சம்பளமோ 65+22=87 ரூபாய். இதில் என் பெற்றோருக்கு அனுப்புவது போக குடும்பம் நடத்தத்தான் மிஞ்சும்.

ஒரு யோசனை தோன்றிற்று. மனைவியிடம் சொன்னேன்.

"இதோ பார்! நம் கொல்லையிலே ஒரு கிணறு தோண்டினால் என்ன?"

"ஆமாம். அதுதான் நல்லது. தண்ணீருக்காக வெளியே நடக்க வேண்டியதில்லை" என்றாள்.

கொல்லைக்குப் போனோம்; நோட்டம் விட்டோம். அதுவோ களி மண் பூமி. மேற்பரப்போ காய்ந்து கட்டாந்தரையாக இருந்தது. வீட்டிலே ஒரு மண்வெட்டியும் கடப்பாரையும் இருந்தது.

காய்ந்த தரையில், மண்வெட்டி போக மறுத்தது! நான் நினைத்தது போல வெட்டுவது ஒன்றும் சுலபமாக இல்லை! என்னுடைய வேலை மண்வெட்டியால் வெட்டி மண்ணை வாரிக் கூடையில் நிரப்புவது. என் மனைவியின் வேலை அந்தக் கூடையைத் தூக்கிச் சென்று வேலி ஓரத்தில் கொட்ட வேண்டியது.

பள்ளியிலிருந்து சுமார் ஐந்து மணிக்கு வீடு வந்து சேர்வேன். ஆறரை வரையில் வெளிச்சம் இருக்கும். எங்கள் இருவருக்கும் 'கிணறு வெட்ட' வேண்டியதுதான் வேலை. பத்து நாட்களில் இடுப்பளவு ஆழம் போய் விட்டோம்.

மண்வெட்டி பிடித்த கைகள் காய்த்துப் போய் முரடு தட்டி இருந்தன. பள்ளிக்கூடத்தில் சக ஆசிரியர்களுடன் கை குலுக்கினால், அவர்கள் கேட்க ஆரம்பித்தார்கள். "என்ன மண்வெட்டி பிடித்தவன் கை போல கை கரடு தட்டி இருக்கிறது?" நான் சமாளிப்பதுண்டு. "நான் கிராமத்திலிருந்து வருகிற ஆள்! கை அப்படித்தான் இருக்கும்"

பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தபோதே நான் தினமணியில் கட்டுரைகளும் 'பொன்னி'யில் கதைகளும் எழுதி வந்தவன். எனவே



கரடு தட்டிய கைகளைப் பார்த்து எனக்கே அனுதாபம் ஏற்படும். "ஓ எழுத விரும்பும் விரல்களே, கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். எழுத உங்களை வலுப்படுத்துகிறேன் இப்போது." என்று நான் மானசீகமாகப் பேச

செதுக்கிய எண்ணங்கள்!

வதுண்டு. கை காய்த்துப் போனால் என்ன? நான் விடுவதாக இல்லை! நாங்கள் சோர்ந்து விடவில்லை. பன்னிரண்டு அடி வெட்டி இருப்போம். தண்ணீர் சுரந்தது. எங்களுக்கு ஒரே மகிழ்ச்சி! மேலும் இரண்டடி தோண்டினோம். மறுநாள் காலையில் நான்கடி ஆழத்திற்குத் தண்ணீர் நிறைந்திருப்பதைப் பார்த்து பெரு மகிழ்ச்சி. ஏதோ கங்கையை வீட்டுக்குக் கொண்டு வந்து விட்ட பெருமை. சுற்றிச் சுற்றி வந்தோம். அதையே பார்த்துக் கொண்டு நெடு நேரம் நின்றோம்.

கனி மண் பூமியாதலால் கிணறு சரியில்லை. கிணறு சதுரமாக அழகாக அமைந்தது. பல் விளக்கினோம்; பாத்திரம் துலக்கினோம், குளித்தோம்! அடாடா! என்ன ஆனந்தம்!

ஆனால் என் வீட்டிற்கு வந்த என் மாமாவும் மாமியும் உறவினர்களும் ஆச்சர்யத்துடன் கேட்டார்கள். "என்ன நீங்களா வெட்டினீர்கள்?" என்று. எனக்கு அவர்களது ஆச்சர்யம் புரியவில்லை.

ஆனால் எனக்கு மட்டும் தெரியும். அது தான் நான்; அதுதான் என் மனைவி!

"**நா**ன் சென்ற சில நாடுகள்" என்ற நூலில் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் எழுதுகிறார். - அமெரிக்காவின் தலைநகரத்து விமானதளத்தில் இறங்கினேன். என்னை வரவேற்ற அமெரிக்க தூதர் என்னுடன் பேசிக் கொண்டு வந்தார். திடீரென்று அவரைக் காணோம். திரும்பிச் சென்று பார்த்தேன். எனக்குத் திடுக்கிட்டது. அங்கே அவர் என் பெட்டியைப் பெற்று அவரே தூக்கிக் கொண்டு வந்தார். அங்கே அவரவர்கள் பெட்டியை அவரவர்களே தூக்கிக் கொண்டு வந்தார்கள்!

இன்றுகூட என் மைத்துனர்கள் எங்களது ஆரம்ப கால வாழ்வைப் பற்றிப் பேசும்போது "அவனும் இவளும் சேர்ந்து கிணறு வெட்டினார்கள்" என்று பெருமையுடன் சொல்வார்கள்.

என் வாழ்வில் தொடர்ந்து நிகழ்ந்த சம்பவங்களைப் பார்க்கும்போது எனக்கு ஜேம்ஸ் ஆலனின் வாசகங்கள்தான் நினைவுக்கு வரும். சொல்கிறார் ஆலன்: "சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் ஒரு மனிதனை உருவாக்குவதில்லை. உன்னுக்குள்ளே இப்படிப்பட்ட மனிதன்தான் இருக்கிறான் என்பதை அவனுக்கே காட்டிக் கொடுக்கிறது"

உள்ளே எப்படிப்பட்ட மனிதன் இருக்கிறான்?

நானும் யோசிக்கிறேன். என்னைச் செதுக்கிய எண்ணம் எது?

(வளரும்)


நெல்லை மாநாடு: நேரடி ரிப்போர்ட்

எம்.ஜி.ஆர். 1987 டிசம்பர் 31-ம் தேதிதான் ஜெயலலிதாவை அ.தி.மு.க.விற்குப் பொதுச் செயலாளராக அறிவித்தார். ஜெயலலிதா 88 ஜனவரி 1-ம் தேதிதான் பொறுப் பேற்றுக் கொண்டார். பத்தாண்டுகால நிரந்தரப் பொதுச் செயலாளரான ஜெ., அதே நாளில் நெல்லையில் கழக மாநாட்டுத் தொண்டர்களைப் பார்த்து உற்சாகமடைந்தார்.

மறுநாள் பத்திரிகையாளர் சந்திப்பில், "நாற்பது சீட்டும் எங்கள் கூட்டணிக்குத்தான்..." என்று சூளுரைத்ததுடன் பத்திரிகையாளர்களை "தி.மு.க.-த.மா.கா. அனுதாபிகள்" என்று குற்றமும் சாட்டினார்.

தாமிரபரணி ஆற்றுப் பாலம் வழியாக குறிச்சி செல்லும் பிரதான சாலையில் மட்டும் பேரணி நடக்கவில்லை. சந்து பொந்துகளிலெல்லாம் திருவிழாக் கோலம்! ஜனவரி 1-ம் தேதி கொக்கிரகுளம் சந்திப்பில் வைக்கப்பட்ட எம்.ஜி.ஆரின் வெண்கலச் சிலையைக் காலை பத்து மணிக்கு ஜெயலலிதா திறந்து வைத்தார்.

மாநாடு நடக்கும் வி.எம். சத்திரத்தில் கொடியேற்ற வரும் போதுதான் பயங்கர கெடுபிடி. கொடி வணக்கத்திற்கு ஏழாயிரம் தொண்டர்கள் படை ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தது. இதைத் தலைமையேற்ற செல்வகணபதியைப் பிற முன்னாள் அமைச்சர்கள் "அடையாளம் கண்டுகொள்ள முடியாத அளவு கச்சிதமாக இருக்குப்பா" என்று பரஸ்பரம் புகழ்ந்து கொண்டனர். எவ்வளவு பயிற்சி கொடுத்தும் 'லெப்டும்-ரைட்டும்' தொண்டர்களுக்கு ஒத்துவரவே இல்லை. 'அட்டேன்ஷன்'



• ஊர்வலத்தைப் பார்வையிடுகிறார் ஜெ.

என்றால் பாதிப்பேர் ஸ்டேன் டட்டீஸில்தான் நிற்கிறார்கள். அம்மா கொடியேற்றும்போது 'சல்யூட்' என்றதும் வீரபாண்டிய கட்ட பொம்மன் மீசை வைத்த முன் வரிசைக்காரர் ஸ்டேன்டட் டீஸில் நின்று திருதிரு என்று முழித்தார்.

ஜெ. கொடி ஏற்றிவிட்டு வந்ததும் அவரது கார் ட்ரைவர் எதைப் பற்றியும் கவலைப்படாமல் ரிவர்ஸ் எடுத்தார். பின்னால் நின்ற காளிமுத்துவை டங்கென்று இடிக்கவும், காரின் பாடியைப் பிடித்துத் தப்பித்தார்! நாவலர் நெடுஞ்செழியன், இடிக்க வந்த காரை எதிர்பார்த்திருக்க முடியாது. ஆனால் சட்டென சுதாரித்து தவ்வி, தப்பித்தார். ஜெயலலிதா எதைப் பற்றியும் கவலைப்படாமல் அட்டகாசமாய்க் காரில் ஏறி கண்காட்சியைத் திறக்கக் கிளம்பினார்!



• புகைப்படக் கண்காட்சியில்...

கொஞ்சம் மிரண்டு நின்ற காளிமுத்துவும் நெடுஞ்செழியனும் ஒருவர் முகத்தை ஒருவர் பரிதாபமாகப் பார்க்க, சமயமில்லாமல் புகைப்படக் கண்காட்சிக்கு வேக வேகமாகப் போட்டி போட்டு நடந்தனர். கண்காட்சியைத் திறந்த பின்னும் நெடுஞ்செழியன் உடன் செல்ல முடியவில்லை. சபாரி அணிந்த அன்பான தொண்டர்கள் ஒரு தள்ளு தள்ளி ஒதுக்க, ஓரத்தில் போய் நின்று கொண்டார். மற்றபடி நெடுஞ்செழியனுக்கு நல்ல கௌரவம் தான் கிடைத்தது!

புகைப்படக் கண்காட்சியில் சில படங்களை செல்வகணபதியிடம் சுட்டிக் காட்டிப் புன்னகையில்லாமல் நினைவு கூர்ந்தார். பாண்டிச்சேரி தேர்தல் பிரசாரத்திற்குச் சென்று திரும்பியபோது ஒரு லாரி மோதி ஆஸ்பத்திரியில் கிடந்தாரே, அந்த போட்டோக்களைப் பார்த்ததும் முகம் சிவந்துவிட்டது. விசுவிசுவென்று நடக்க ஆரம்பித்து விட்டார்.

நூறு ஆண்டுகால திராவிட (ஜஸ்டிஸ் கட்சி முதல்) வரலாற்றை சித்திரிக்கும் இக்கண்காட்சியில் பெரியாரின் புகைப்படம் பலருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. அவர் சாமிக்குப் பூப்பறிப்பது, துறவு நிலையில் தியானத்தில் இருப்பது, போன்ற படங்கள் தொண்டர்களை அல்லாட்டத்தில் ஆழ்த்தியது. திருநாவுக்கரசு அணியில் தன் மானக் குறைவு ஏற்பட்டதாக வெளியேறிய கண்ணப்பனும் வந்தார். முன்னாள் மந்திரி பிரதானிகள் அவரோடு பேசாமல் 'மழுப் பலாகச் சிரித்து ஓடினார்கள். அம்மா தவறாக நினைத்துக் கொள்ளக் கூடாது என்பதாக இருக்கலாம். புகைப்படக் கண்காட்சியில் ஒத்தையாளாக வெறிக்க வெறிக்க எதையோ பார்த்துக் கொண்டு நகர்ந்தார் அவர். ஒரு வேளை இப்படி ஒரு தனிமையை விரும்பினாரோ என்னவோ!

"திராவிட வரலாற்றை மறைக்கக் கூடாது என்பதற்காக கலைஞரையும் அம்மா பெருந்தன்மையாக வச்சிருக்காங்க பாத்தியா" என்று கட்சிக்காரர்கள் பரபரப்பாகப் பேசிக் கொண்டனர். பாவம், க்ரூப் போட்டோக்களில் முதுகு தெரியும் கலைஞரே திராவிட வரலாற்றில் இருந்தார்! தனித்த ஒரு போட்டோவும் இல்லை.

காவிரி கண்ட தாயின் புகைப்படத்தை ஜெயலலிதாவே நின்று பார்த்தார். அதன் பின்னணியில் மூன்று குளிர்சாதனக் கருவிகளும், ஐந்து தலையணையும் ஒரு அடி உயர மெத்தையும் பளிச்சென இருந்தது!



• எம்.ஜி.ஆர். சிலை அருகே

மூன்று மணிக்குத் தொடங்க வேண்டிய பேரணி 1.30க்கே தொடங்கியது. கட்டுக்கடங்காத கூட்டத்தைக் கண்டதும் புரோகிராமைக் கருப்பசாமி பாண்டியன் சற்று முன்னதாக இயக்க வைத்தது நல்லதாகப் போய்விட்டது என்று நினைக்கத் தோன்றியது. கூட்டம் பன்னிரண்டு கிலோ மீட்டர் தூரம் நீண்டு இருந்தது.

வழிநெடுக, தட்டிகளில் புதிய சிந்தனை வாசகங்கள் இல்லை. 'பொன்மனத்தாயே', 'புரட்சித் தலைவியே', 'கொடை வள்ளலே', 'கருணை உள்ளமே', 'சத்துணவு நாயகியே', இப்படி இரவல் வாசகங்கள்தாம் அடைத்துக் கிடந்தன. 'பொன்னகை மறுத்த புன்னகையே' வாசகம்தான் சற்றுப் புதிதாக இருந்தது.

ஒவ்வொரு மாவட்டமும் விதவிதமான கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தது. தெருக்கூத்து, ஒயிலாட்டம், காவடி, குறவன் குறத்தி, கரகாட்டம் தூள்கிளப்பின. திருச்சி தொண்டர்கள் ஏற்பாடு செய்த துக்கையடி ஆட்டம்தான் புதுமையாக இருந்தது. தப்பாட்டத்தின் உச்சத்தில் ஒரு தொண்டருக்கு சாமி வந்து விட்டது. அவரை வெள்ளைச் சீருடை இளைஞரணிக்காரர் தாங்கிப் பிடித்து "என்ன சொல்லு" என்றார். அவர், "அம்மா எறங்கிருக்காங்கடா" என்று முறுக்கினார். பின்னர் நான்கு விரலைக்காட்டி அந்தரத்தில் முட்டை போட்டுக் காட்டினார். "என்ன நாற்பது லட்ச மக்கள் கூட்டமா" என்று ஒருவர் கேட்க, சாமி கோபத்தில் சிணுங்கியது. "நாற்பது சீட்டும் நம்ம கூட்டணிக்கா?" என்றதும் "ஆமாடா" என்று ஆவேசமாகக் கண்களைத் திரட்டி ஆடினார்!

"தொண்டர்கள் "முழு கருநியில்" "ஆய் பூய்" என்று வேட்டி நழுவக் கத்திக் கொண்டு போனார்கள். தலைமையேற்றுச் சென்ற முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் மாநாட்டுப் பந்தலில் உள்ள அம்மாவிடம் பலவிதங்களில் கையசைத்து, தன்னைக் கண்டு கொண்டு விட்டார் என்றதும், நகர்ந்தனர். பின் தொண்டர்களை விட்டுவிட்டு மாநாட்டுப் பந்தலுக்குப் பின் உள்ள தெரு வழியாக விழுந்தடித்து பரணி, புளு ஸ்டார்ஸ், ஜானகிராம் ஹோட்டலுக்கு ஓடினார்கள். சரக்குகளை உள்ளே இறக்கி வெளியில் வேட்டியை மடித்துக் கட்டி நின்றனர். "என்னாப்பா விண்டேஜ்ன்னு காசவாங்கிட்டு சாராயத்தில கலர ஊத்தி வச்சிருக்கான். பூராம் கலப்படமா இருக்கே!" என்று காரி துப்பிக் கொண்டனர்.

தவித்த வாய்க்குத் தண்ணீர்ப் பந்தலை மாநாட்டு நிர்வாகம் அமைக்காமல் போய் விட்டது! வை.கோ. தொண்டர்படை தண்ணீர் பந்தலை நிறுவி, புகழைத் தட்டிச் சென்றது. ஆனால் இதே தாமிர பரணியில்தான் வை.கோ. குளித்து விட்டு, "ஜெயலலிதாவின் கொடுங்கோலாட்சியை ஒழிப்போம்" என்று சபதம் எடுத்தார். இன்று இதே தாமிரபரணியில் நீராடிவிட்டு "அம்மாவின் பலத்திற்கு உறுதுணையாக இருந்து கருணாநிதி ஆட்சியை முறியடிப்போம்" என்று சூளுரைத்துள்ளார்.

தொண்டர் சுரேஷ்குமார், சேலம் மாவட்ட நகர பேரவை செயலாளர் "ஏனுங்க அம்மா ஆட்சியில் ஒரு குண்டுதான் வெடிச்சது. ரஜினி அம்மாவ திட்டினார். கருணாநிதி ஆட்சியில தினம் தினம் வெடிக்குது. ஒரே ஒரு வாட்டி சொல்லமாட்டாரா?" என்று தம் ஆதங்கத்தை வெளியிட்டார்.

T.V.L. தனபால் கொஞ்சம் கோபமாக இருந்தார். "120 தனியார் பஸ்ஸுக்கு மாநாட்டுக்காக பணத்த கட்டியிருந்தோம்க. புறப்படுறதுக்கு ரெண்டு நாளைக்கு முன்னால R.T.O. பணத்த திருப்பி தந்திட்டாரு. கடைசி நேரத்தில் வண்டி கிடைக்கலங்க. எப்படியோ வந்து சேர்ந்திருக்கோம். இந்தக் கருணாநிதி எங்கள எப்படி பிளாக் பண்ணினாலும் மறுபடி உடைச்சு வந்திடுவோம்க" என்று கண்களைத் திரட்டியபடி சொன்னார்.

செஞ்சி ஏ.எல். அண்ணாமலை, பாராளுமன்றத்திற்கு சீட் கேட்டுள்ளார். பழைய மந்திரிகளுக்கு சீட் தராமல் புதியவர்களுக்குத் தந்தால் வெற்றி வாய்ப்பு நிச்சயம் உண்டு என்பது இவரது நம்பிக்கை.

"சோனியா வர்றதால உங்களுக்கு வோட்டு குறையுமே" என்றோம்.

"சோனியா வருகையால சைக்கிள் சின்னத்துக்குத்தான் பாதிப்பு வரும்ங்க. எங்களுக்கு வராது."

"நேத்துக்கூட ஸ்பிக் உர ஊழல் பிரச்னை வந்திருக்கு. மக்கள் எப்படி நம்புவாங்க."

"லஞ்ச ஊழலையெல்லாம் யாரும் பெரிசா எடுக்க மாட்டாங்க, அம்மா கூழுனா 100கோடி தாங்க சேத்திருக்கும். மத்திய மந்திரிங்க 500 கோடியெல்லாம் சேத்திருக்காங்க. அதனால லஞ்ச ஊழல் பேச்சு எடுபடாது."

"கருணாநிதி ஆட்சிய எப்படி விமர்சிப்பீங்க?"

"என்னாங்க பஸ் கட்டண உயர்வு ஒண்ணு பத்தாதா?" என்று அடித்துச் சொல்கிறார்.

புதுக்கோட்டை மகளிர் அணி துணைச் செயலாளர் செல்வம் படு சுறுசுறுப்பாகக் கூட்டத்தை வரிசைப்படுத்திக் கொண்டிருந்தார். "சோனியா காங்கிரசுக்கு பிரசாரம்செய்ய வந்திருக்காங்க. உங்களுக்கு அது எப்படி..." என்று நாம் முடிக்கவில்லை.

"அய்யோ சோனியா அம்மா வர்றாங்களா. அப்ப ஓட்டு பூராம் எங்களுக்குத்தான். அந்தம்மாவையும் எங்களையும் பிரிக்க முடியாது. அந்தம்மாவுக்குத்தான் மக்கள் ஓட்டு போடுவாங்க. நாங்க ஈசியா ஜெயிச்சிடுவோம்" என்றார்!!!

குழம்பிப்போய்விட்டோம். செல்வம் செயலாளர் மட்டுமல்ல. தலைமைக் கழகப் பேச்சாளராம்! அரசியலில் என்ன நடக்கிறது என்பது கட்சிக்காரர்களுக்கே புரியவில்லையோ என்னவோ. ●

- யுகாந்தன்

படங்கள்: சௌந்தர்ராஜன்



காதலை உறவுகள் எதிர்க்கின்றன. குப்பத்துக்காரர்கள் அடைக்கலம் தர, காதலர்களின் திருமணத்துக்கு ஏற்பாடு நடக்கிறது. "நம் பெற்றோரும் அண்ணன்களும் நம் காதலை ஏற்க ஏன் மறுக்கிறார்கள்? நம் மீது கொண்ட அன்பினால்தானே?" என்று யோசிக்கும் அந்த ஜோடி, அவர்களது அன்புக்காகத் தங்கள் காதலைத் தியாகம் செய்ய முடிவு செய்து, பிரிகிறார்கள். ஒரு கட்டத்தில் இதை அறிந்து அவர்கள் பெற்றோரே நெகிழ்ந்து போய், திருமணத்துக்குப் பச்சைக் கொடி காட்டுகிறார்கள்.

கதையின் வலுவான மேற்படி பகுதி கடைசி இரண்டு ரீல்களில்தான். அதற்கு முன் காதல் ஜவ்வாக இழுக்கப்படுகிறது.

படம் முழுக்க, காதலர்கள் - கற்பனையில் கூட ஒருவரையொருவர் தொட்டுக் கொள்வதில்லை. புதுமைக்காக பாசிலுக்குப் பாராட்டுகள். என்றாலும் சில 'ஆனால்'கள்.

சார்லியும் தாமுவும் திறமைசாலிகளாக இருக்கலாம். ஆனால் பால்வடியும் முகத்துடன் எம்.பி.ஏ. படிப்பவராக வரும் விஜய்க்கு நெருங்கிய நண்பர்களாக அவர்களை உலவ விட்டிருப்பது கொடுமை. (போதாக்குறைக்கு அவர்களின் பாத்திரவார்ப்பும் ரொம்பவும் அரைத்த மாவு.)

குழந்தை நட்சத்திரமாகக் கொடிகட்டிப் பறந்த ஷாலினி, இதில் குமாரி. அவரா இவர் என்று அவநம்பிக்கை எழும் அளவுக்கு முகத்தில் கூட வேறுபாடு. அடக்கமான நாயகியாகப் பல உணர்வுகளை வெளிக்காட்டுகிறார். ஆனால் கதையில் மைய இழையான காதலை வெளிப்படுத்துவதில் பாஸ் மார்க் கூடப் பெறக் காணோம். அதே போல் விஜய் பரிதாபக் காட்சிகளில் மட்டும் பக்காவாகப் பொருந்துகிறார்.

ஷாலினியின் பெரிய குடும்பத்தில் மூன்று அண்ணன்கள் மற்றும் அம்மாவைத் தவிர சுமார் முக்கால் டஜன் பாத்திரங்கள் இருந்தும் அவர்களுக்கு வசனமே இல்லாதது கொஞ்சம் செயற்கையாக இருக்கிறது.


இளையராஜா சிலிர்ப்பூட்டுகிறார். 'என்னைத் தாலாட்ட வருவாளா, பட்டாம்பூச்சி, ஆனந்தக் குயிலின் பாட்டு' என்று ட்யூன்களில் இனிமை வெள்ளம். உறுத்தாத பக்கவாத்தியமாய்ப் பழனி பாரதி.

குற்ற உணர்வில் தவிக்கும் ஸ்ரீவித்யா, "உங்க பொண்ணை எனக்கு மருமகளா கொடுத்திடுங்க" என்று கதறுவதும், மற்றவர்கள் 'ஸ்டன்'னாகி நிற்க, "எடுத்துக்குங்க" என்று லீலாவதி கூறுவதும், உறவினர்கள் ஒவ்வொருவரின் மனஇறுக்கமும் மாறுவதுமாக - கிளைமாக்ஸ் மட்டும் கனஜோர்.

— ஜி.

காதலுக்கு மரியாதை

யாருக்கு




உங்கள் வோட்டு?

''சமீபத்தில் தமிழ்த் திரையுலகிற்கு அறிமுகமாகியுள்ள கதாநாயகர்களில் உங்களைக் கவர்ந்தவர் யார்?'' என்ற அபாரமான கேள்வியை சில இளம் பெண்களிடம் கேட்டோம். (இந்த சர்வே நாட்டுக்கு எத்தனை முக்கியமானது!) இளைஞர்களின் முன் நாம் வைத்த கேள்வி: ''கதாநாயகிகளில் யாருக்கு உங்கள் வோட்டு?'' சட்டென்று மனத்தில் தோன்றியதைப் பட்டென்று போட்டு உடைத்தார்கள்.

பிரியதர்ஷினி:

''தொடக்கத்திலே வந்த படங்களில் எல்லாம் குறிப்பிட்டு சொல்லும்படி பண்ண லேன்னாலும், இப்பவெல்லாம் தான் வரும் படங்களிலே விஜய் நல்லாவே செய்துக்கிட்டிருக்கார். சண்டைக் காட்சிகளிலே அசத்துகிற இளம் ஹீரோ அவர்தான். அதே சமயம் இன்னொரு யங் ஹீரோ மாதிரி இவர் திரையில் பந்தா செய்து கொள்வதில்லை. அதுவும் 'ஒன்ஸ் மோர்' படம் பார்த்த பிறகு நான் விஜயின் ரசிகை ஆயிட்டேன்.''



பூபதி:

''சிம்ரன், சிம்ரன்! என்ன இல்லை இவங்க கிட்டே? கிளாமர் இல்லையா? அழகான நடன அசைவுகள் இல்லையா? அதுவும் நேருக்கு நேர் படத்திலே ''எங்கெங்கே'' பாடலின் போது மைசூர் பின்னணியில் நளினமாக சில அசைவுகள் கொடுப்பாங்களே, அதுக்கு ஈடு இணையே கிடையாது! நடிப்பு எப்படின்னு கேட்க வேண்டாம். இப்போதைய நடிகைகளிலே யாருக்குத் தான் நடிப்புத் திறமை இருக்குது?''

ஈஸ்வரி:

''ஒரு நீளமான கோட்டோடு 'வி.ஐ.பி. படத்திலே, வெளி நாட்டில் எடுக்கப்பட்ட பாடல் காட்சியில் அப்பாஸ் வருவார் பாருங்க, அசந்துட்டேன். நடிப்பு பத்தாதுதான். இருந்தாலும் அப்பாஸோட அப்பீலே தனி. மாடலாக இருந்தவர் இல்லையா? மாடல்களுக்கே உள்ள ஒரு 'சார்ம்' அவரிடம் கொட்டிக்கிடக்கு. அவர் மிகவும் 'ஹெல்த் கான்ஷியஸாக' இருப்பது பளிச்சுனு தெரியுது. நடனம்னா, பிரபு தேவா ஓ.கே. மற்றபடி மொத்தத்திலே அப்பாஸ்தான்.''



• பிரகாத்மணி


• ஜெயலட்சுமி


• ஞானம்


• ஈஸ்வரி


• பிரியதர்ஷினி



ஞானம்:

"இளைஞர்கன்னா கவர்ச்சியை மட்டுமேதான் விரும்பணும்னு சட்டமா என்ன? ஏதோ தயாரிப்பாளருக்கு செலவைக் குறைப்பதே நோக்கம்ங்கிற மாதிரி அரைகுறை ஆடைகளுடன் வந்து குதித்து விட்டுப் போகும் நடிகைகளை நினைத்தால் எரிச்சல்தான் வருது. சில காட்சிகளிலே கவர்ச்சியைக் காட்டுவதுகூட பரவாயில்லை. படம் முழுவதுமே அப்படி வந்தால் என்னங்க நியாயம்? இப்படி இல்லாததாலேயே எனக்கு தேவயானியைப் பிடிச்சிருக்கு. அதுவும் காதல் கோட்டை படத்திலே 'நலம் நலமறிய ஆவல்' பாட்டிலே அவங்க வெளிப்படுத்தும் நளினமான, மென்மையான உணர்ச்சிகள் சூப்பர்.''

ஜெயலட்சுமி:

"சூர்யாவுக்கு நடன அசைவுகள் சரியில்லேன்னு சில பத்திரிகைகளிலே எழுதியிருந்ததைப் படிச்ச எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. காரணம் நேருக்கு நேரிலே அவர் கொஞ்சம் வித்தியாசமாகவும், அழகாகவும்தான் டான்ஸ் மூவ்மென்டுகளைக் கொடுத்திருந்தார். 'அவள் வருவாளா' பாட்டுக்கு அவர் காட்டியிருக்கும் ஸ்டைலும் மேனரிஸமும் அற்புதம்.''

பிரகாஷ் மணி:

"சிம்ரன், ரம்பா இரண்டு பேரைத்தவிர வேறு எந்த சமகால ஹீரோயினும் நிலைச்சு நிப்பாங்கன்னு தோணலை. அதுவும் ரம்பா ஒடிந்து விழும் ஒல்லியும் இல்லை; உரல் போன்ற குண்டும் இல்லை. ஒரு ஐடியல் உடல்வாகு. உள்ளத்தை அள்ளித்தாவிலே "ஐ லவ் யூ லவ் யூ" பாட்டிலே அவங்க நடையழகும், உடையழகும் - ரசிகர்கள் எல்லாருமே உள்ளத்தை அள்ளித் தந்திருப்பாங்க.''

- ஜி.எஸ்.எஸ்.

படங்கள்: ஸ்ரீஹரி



''தலைவருக்கு இந்த வயசிலே இப்படி ஒரு ஆசையா!''

''ஏன் என்ன பண்ணினார்?''

'' 'அலயன்ஸ் பாருங்கள்'னு மேலிடம் சொன்னதுக்கு தப்பாப் புரிஞ்சுகிட்டு, 'ஹை! இரண்டாம் கல்யாணமா, ஜாலி'ங்கிறார்!''

– வெ. ராஜாராமன்



''நம்ம தலைவரோட பேட்டியோ, அவரைப் பற்றிய செய்தியோ எந்தப் பத்திரிகையிலேயும் ரொம்ப நாளா வரலேங்கிறதுக்காக இப்படியா செய்யறது?''

''என்னாச்சு?''

''தலைவரே சொந்தச் செலவுல 'காணவில்லை'னு விளம்பரம் கொடுத்திருக்காரு!''

– பஞ்சவண்ணமகன்

வட்டமேஜை

வாசகர்களுக்கு ஒரு வழக்காடு மன்றம்!

✉ '229- பக்க ஜெயலலிதா விளாசல்' - தலையங்கம் படித்தேன். நீதிபதி வெங்கடாசலம் பிறப்பித்த 229பக்க உத்தரவை விடத் தாங்கள் அரைப் பக்கத்தில் கொடுத்துள்ள 'விளாசல்' சுரீர் என்று இருந்தது.
நெய்வேலி, மீனாட்சிநாதன்.

✉ 'தமிழுக்கு அவமானம்' என்று ராமகிருஷ்ணன் ஆதாரங்களை அடுக்கி வாதம் தொடங்க, 'அவமானம் அல்ல; அணிகலன்' என்று சந்தான கோபாலன் விளக்கம் கொடுக்க.... ஒரு வழக்காடு மன்றம் வாசகர்களுக்குக் கிடைத்தது.
நீலம்பூர், ஏ. எஸ். இராமசாமி.

✉ 'மும்பையில் ஒரு சின்னத் திருப்பதி' கட்டுரை மனதை உருகவைத்தது. தத்ரூபமான படங்கள் மிகவும் பொலிவுடன் ஜொலித்தன.
காயக்காடு, ப. ராமகிருஷ்ணன்.

✉ ஒன்..டூ..த்ரீ... கதைகள்- 'அவன்... அவள்... அவளும் அவனும்' ஆகிய தலைப்புகளைப் போலவே கதை நிகழ்வுகள் பின்னிப் பிணைந்து காதலின் ஆழமான உள்ளுணர்வையும் - தாம்பத்தியத்தின் மகத்துவத்தையும் குற்றாலத்தின் சாரலாய் உணர்த்தியது. 'வையவன்' பாராட்டிற்குரியவர்.
வலையபட்டி, எம். பாலசுப்பிரமணியன்.

✉ பாரதிபாலனின் 'வேடிக்கை மனிதர்கள்' என்ற சிறுகதை என் நெஞ்சைக் கனக்க வைத்து விட்டது. கதையில் குறிப்பிடப்பட்டுள்ள இன்றைய மனிதர்களே நமது சமுதாயத்தில் பெருகிவருவது மிகவும் வருந்தத்தக்கது.
சீர்காழி, டி. என். ராகு.

✉ விளையாட்டு முதல் விண்வெளி வரை சாதனை படைக்கும் பெண்கள், ஈடுபடாத துறை இது ஒன்றுதான் என நினைத்திருந்தோம். கடைசியில் கசாப்புக் கடைக்குள்ளும் பெண்கள் நுழைந்து விட்டார்களா? அதுவும் பட்டம் பெற்று, கம்ப்யூட்டர் கற்று... ஆச்சர்யத்தில் வாயைப் பிளந்தேன்.
சென்னை - 1, கே. ஆர். ரவீந்திரன்.

✉ செந்தில்குமார் தாம் பெற்ற பரிசை செல்வி பிரேமாவுக் குப் பரிசளித்தது பாராட்டப்படக்கூடியது. ஆடம்பரமின்றி ஒரு ஆரவார விழா பற்றிய செய்தியைப் படத்துடன் படித்ததும் விழாவை நேரில் பார்த்ததுபோல் இருந்தது. கல்கிக்கும் பாலு ஜுவல்லர்ஸுக்கும் என் மனமார்ந்த பாராட்டுக்கள்.
மணியக்காரன்பாளையம், ஏ.ஜி. கல்யாணசுந்தரம்.

✉ B'J'P யின் நிஜமான பின்னணியை ஆராய்ந்து சொன்ன உம்முடைய கட்டுரையைப் பார்த்துத்தான் பல அ.தி.மு.க.காரர்களுக்கே நிஜம் புரிந்திருக்கும்!
சென்னை - 20, ஆரெஸ். பிரபு.

✉ "குறையொன்றுமில்லை..." கட்டுரையில் இடம் பெறும் ஆண்டாள் பாசுரத்தில், "மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்" என்பது தவறாக "மேலையார் செய்வினைகள் வேண்டுவன கேட்டியே..." என்று அச்சாகியிருக்கிறதே!
செகந்திராபாத் - 15, ச.எஸ். முகுந்தன்

✉ கல்கி 28.12.97 இதழ் தலையங்கம்- 'நியாயம் தேர்தல் ஆணையர் கிருஷ்ணமூர்த்தியின் பக்கம்'- எழுதியதைப் பற்றி இக்கடிதம் எழுதுகிறேன்.

தேர்தல் ஆணையர் கிருஷ்ணமூர்த்தி விடுப்பில் போனதையும், ஒரிஸ்ஸாவிற்கு செல்லவிருந்த தனது அதிகாரபூர்வ பயணத்தை ரத்து செய்ததையும், ஆபீஸுக்குப் போகாமல் மட்டம் போட்டதையும் வேறு, சாதாரணப் பொறுப்பில் உள்ளவர்கள் செய்திருந்தால், தாற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பார்கள்! மேலும் அவர் விஷமத்தனமாக தனது தலைவரின் பேரில் அபாண்டமாக சிவசேனை அபிமானி என்று குற்றம் சாட்டியது மன்னிக்க முடியாத குற்றம். பல அங்கத்தினர் உள்ள குழுவின் சார்பில், அதன் தலைவர் மட்டுமே அதிகாரபூர்வமாக பத்திரிகையாளருடன் பேசுவது மரபு. அந்த மரபை மீறுபவர்களை யாரும் நியாயப்படுத்த முடியாது.
சென்னை - 41. ம.க. பாலசுப்ரமணியன்

(சிவசேனைக்குத் தனிச்சலுகை காட்டப்படக் கூடாது என்று கிருஷ்ணமூர்த்தி கருதியதைத் தான் அவர் பக்கம் நியாயம் இருக்கிறது என்று குறிப்பிட்டோம். மற்றபடி நடந்த நிகழ்ச்சிகள் (இரு தரப்பிலும்) ரசக்குறைவானவை என்று சொல்லியிருந்தோம். ஒரு அந்தர்பல்டி அடித்து, தாக்கரே, உட்கட்சித் தேர்தல் நடத்தியதாக ஒரு நாடகமாடியிருப்பதே கிருஷ்ணமூர்த்தி தரப்பு வாதம் நியாயமானது என்பதை உணர்த்தும்.

-ஆர்.)

'சொய்ய்ங்... சொய்ங்...' என்று டைவடித்துக் காட்டினார். ஹெலிகாப்டரில் பறந்தவாறு - அந்தரத்தில் நின்று - கயிற்றில் இறங்கி - கடலில் மயக்க நிலையில் மிதப் பவர்களை எப்படிக் காப்பாற்றுவது என்றெல்லாம் பல சாகச நிகழ்ச்சிகள்... ஒத்திகை மாதிரி வடிவமைப்புகள்...

கடலாடை, ஆக்ஸிஜன் சிலிண்டருடன் நீருக்குள் மூழ்கி பைசாவைக் கண்டெடுத்து (நாம் விட்டெறிந்த பைசாவைத்தான்) வரும் வீரர்கள்...!

இது நடந்தது தூத்துக்குடியிலோ, சென்னை நாகப் பட்டிணம் போன்ற கடல் பிரதேசத்திலோ அல்ல! கடல் காணா கோவையில்! நடத்திக் காட்டியது நம் கடற்படை வீரர்கள்.

வருடந்தோறும் எல்லா கடற்படை தளங்களிலும் டிசம்பரில் கொண்டாடப் படும் இக்கடற்படை வார விழா கோவையில் வெறுமனே கடற்படை சார்ந்த விஷயங்களை மட்டும் அள்ளித் தெளிக் காது நம் கிராமத்து, நகரத்து பொருட்காட்சி போல் பல சங்கதிகளைத் தாங்கி நின்றது.

● நிறைய ஃபேமிலி ஷாப், கேக் ஷாப், ஐஸ் கிரீம் பார்... ரெடிமேட் ஷாப் ஒரு பக்கம்... மறு பக்கம் ஜிகுபுகு, ஜிகுபுகு குட்டி ரயில், மயில்வாகன ராட்டனம், விளையாட்டு பொம்மை வியாபாரிகள் என நிறைய்ய்ய....




• போர்த்துப்பாக்கி



● 'தம்போலா சீட்' ஒரு பக்கம் அமர்க் களம். அத்தோடு நம் லோக்கல் போலீஸ் வேடிக்கை பார்த்து நகர வேண்டிய கட்டாயத்தில் 'வை ராஜா வை... மூணு சீட்டு... ஒத்தைக்கி ரெட்டை பணம்' என்றெல்லாம் அங்கீகாரம் பெற்ற சூதாட்டங்கள். நுழைவுச் சீட்டுக்கு ஒரு மணி நேரத்திற்கு ஒரு குலுக்கல் பரிசுகள்... கடற்படை வார விழா பரிசுக் கூப்பன் என தனியாய் வேறு பரிசுச் சீட்டுகள்... வந்த பொது மக்களுக்கு இது ரிலேக்சேஷனோ இல்லையோ, கண்டிப்பாக இதை நடத்தின கடற்படை வீரர்களுக்கு ஒரு உன்னதப் பொழுது போக்காயிருந்தது!

● இந்த விழாவின் சிறப்பு, 'சீப் அண்ட் பெஸ்ட்' கேண் டீன் வகையறாதான். வெறும் 20 ரூபாய்க்கு சிக்கன் ஃபிரை யுடன் பிரியாணி... காப்பி, டீ, 3 ரூபாய்... இதுவே நம் லோக்கல் பொருட்காட்சி என்றால் 50, 60 க்கு விற் பார்கள் என்றனர் பலர்.

• கண்காட்சியில் நீர்மூழ்கிக் கப்பலின் மாடல்



• நீரில் மூழ்கி சாகசம்...

'மருத்துவ கேம்ப்' ஒன்றும் இடம் பெற்றிருந்தது. ப்ளட், ஹார்ட், பல்ஸ், பி.பி. என செக்கப் செய்யக் கட்டணம் வெறும் இரண்டு ரூபாய்தான். இதற்கும் பொது மக்களின் நீண்ட க்யூ....!

கடலில்லா பூமியில் கடற்படை வார விழா!

● கடலில் சந்திக்கும் போர் முறை... கையாளப்படும் தற்காப்பு முறைகள்... பயன்படுத்தும் துப்பாக்கிகள்... குண்டுகள்... நீர் மூழ்கிக் கப்பல் மாதிரி... என கண்காட்சியில் ஏராளம்! ஆனால் அதை விளக்கும் வீரர்கள் பலருக்கும் தமிழ் வாடை பூஜ்யம்! நம்ம ஊர் கிராமத்து ஆசாமி ஒருவர் போர்க் கப்பல் மாதிரியிடம் தம் பொண்டு பிள்ளை சகிதமாய் நிற்க, ஒரு சர்தார்ஜி ஆங்கில இந்திக் கலப்பில் போர்முறை விளக்கம் சொல்ல... நம்ம ஆள் பேய் முழி முழித்தபடி தலையை ஆட்டிக் கொண்டே நின்றாரே பார்க்கலாம்!

● 'லெப்டினென்ட் கமாண்டர்' முருந்த குமார் பார்வையில் இயங்கும் மாஸ்டர் ஆப் சீஃப் ஆர். குமார் நம்மிடம் பேசும்போது "சாதாரண நாட்களில் இங்கு யாரும் வரமுடியாது. டிசம்பர் 4 கடற்படை நாளாக உள்ளதால் அந்த முதலிரு வாரங்களையே கடற்படை விழாவாகக் கொண்டாடுவதோடு, பொதுமக்களும் இது பற்றி அறிந்து கொள்ளுமாறு கடற்படை கண்காட்சி ஏற்படுத்தியுள்ளோம். நீர்மூழ்கி, போர்க்கப்பல் மாதிரிகள் எல்லாம் வைத்து விளக்குவதோடு 'தேடுதல்.... காப்பாற்றுதல்' பற்றியெல்லாம் செய்து காட்டுகிறோம்...

"வெறுமனே எங்க சமாசாரங்களே இதில் இடம் பெற்றால் சுவராஸ்யம் கெட்டு விடுமல்லவா...? அதனாலேயே லோக்கல் அயிட்டம் பலதும் கலந்து கொடுத்துள்ளோம். இந்த கோவை 'கடற்படை தளம்', Navy -ல் சேருவது பற்றின விரிவான விளக்கம் தரும் இடமாகவும் கடற்படை பயிற்சி அளிக்கப்படும் தளமாகவும் அமைந்துள்ளது.

"அத்தோடு லீடர்ஷிப், கோர்ஸ், மானேஜ்மெண்ட் வகுப்புகளும் நடத்தப்படுகின்றன" என்றார்.

கட்டுரை, படங்கள் :
கா.சு. வேலாயுதன்

4

தளிர் போல் தூங்கிக் கொண்டிருந்தது குழந்தை. மிருதுவான அதன் கன்னத்தை இலேசாக ஒரு விரலால் தொட்டாள். சிலிர்த்துக் கொண்டது. பவித்ரா அவசரமாகக் கையை விலக்கினாள். மெத்தென்ற தலையணையில் அழுந்திக் கிடந்த கன்னத்தருகே மூடிய கைவிரல்கள் நீண்டு தெரிந்தன... வியப்பு, ஊற்றாகப் பெருகியது... அம்மாவை அச்சு அசலாகப் பிரதியெடுத்துக் கொடுத்த சிருஷ்டியின் அற்புதம்!

'இந்தக் குட்டி உருவத்தின் ஜீவ அணுக்களுள் என்னென்ன சக்திகள் உறங்கிக் கிடக்கின்றனவோ..? அம்மாவைப் போலவே, ஆயிரமாயிரம் பேரை ஆகர்ஷிக்கும் ஆற்றலா? அல்லது ஒரு பி.டி. உஷாவாகப் பரிணமிக்கும் சக்தியா?... மேதா பட்கர்? மஹாஸ்வேதா தேவி...? அல்லது ஒரு சராசரி பவித்ரா...? என்னவாக வளரும் இந்தச் சின்னப் பொட்டலம்...?'

தியாகராஜன், முகம் கொள்ளாத பெருமிதத்துடன் சாக்லேட் டப்பாவை நீட்டினான்.

"தேங்க் யூ..."

"சௌதாமினியை நினைச்சாத்தான் ரொம்பக் கவலையாயிருக்கு..."

"ஏன்...? ரத்தம் குடுக்க வேண்டி வந்துடுத்தேன்னா...? பயப்படாதீங்க... அவ சரியாயிடுவா..."

"நான் பயப்படாமத்தான் இருந்தேன்... அவ ரொம்ப பயப்படறாளே... நீங்க கொஞ்சம் தைரியம் சொல்லுங்க... நான் வெளியே இருக்கேன்.."

தொட்டிலில் கிடந்த குழந்தையை மீண்டும் ஒருமுறை பார்த்துவிட்டு சௌதாமினியினருகே போனாள்.

"பவித்ரா...!"

"கங்கிராட்ஸ் சௌதாமினி... நேத்திக்கே வரலாம்னு நினைச்சேன். ஆனா, transfusion



காஞ்சனா பிரகாஷ்ராவ்

டிசம்பர் கனவுகள்

கொடுக்கறதாச் சொன்னாங்க. சரி, நாம வேற வந்து தொந்தரவு குடுப்பானேன்னு வரலை..."

''எல்லாம் நார்மல், நார்மல்னாங்க கடைசில இப்படியாயிடுத்து பாரு..."

"ஷ்... ஒண்ணும் ஆகலை உனக்கு... மூணு மாசத்துல திரும்பவும் பாட ஆரம்பிக்கப் போறே..."

''இல்ல பவித்ரா... எனக்கு என்னமோ பயமாயிருக்கு... something tells me. I will not sing again..."

"சே! சே! இப்படியெல்லாம் மனசைப் போட்டு அலட்டிக்காதே. என்ன ஆயிடுத்து இப்போ..? எதிர்பாராத சிக்கல். டெலிவரிக்கப்பறம் யூட்ரஸ் வேகமா காண்ட்ராக்ட் ஆகலை. அதனால் இழந்த ரத்தத்தை ஈடு செய்திருக்காங்க... அவ்வளவுதானே! இன்னைக்கு மருத்துவ உலகம் இருக்கற நிலைமைல இதெல்லாம் ரொம்ப ரொம்ப சாதாரணமான விஷயம்..."

"எல்லாம் சாதாரணம்தான்... இத்தனை நாள் நான் பாடினதுகூட ரொம்ப ரொம்ப சாதாரணம். என்ன இருந்தது பவித்ரா அதிலே...? வெறும் பதர்! எனக்குத் தெரியாம இல்ல... நல்லா தெரியும்..." ஒரு பீதிப் புயல் சௌதாமினியின் முகத்தில் வீசியது.

"வேண்டாமே சௌதாமினி... அமைதியாயிரு. பாரு... குழந்தை எத்தனை அழகா இருக்கா..."


சௌதாமினியின் பார்வை தொட்டிலுக்குத் திரும்பியது. "ஆமாம்... அவளும் அழகுதான். என்னை மாதிரி... இப்படி எல்லாத்திலேயும் என்னை மாதிரியா பிறக்கணும்..?"

"அடாடா..! உனக்கென்ன குறைச்சல்... இப்படிப் பேசலாமா நீ...?"

''போதும் பவித்ரா! என்னையும் ஏமாத்திக்கிட்டு உலகத்தையும் இத்தனை நாளா ஏமாத்தியாச்சு... போறும்!"

ஆழ்மனத்தின் அவஸ்தையென்பது கொடிய நிஜம். தவறுகளை, இயலாமையை நளினமாய் மறைத்து நாடகம் நடத்திய பிறகு விழுகின்ற நிரந்தரத் திரை!

பவித்ராவுக்கு சௌதாமினியைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது. நடந்த அனைத்துக்கும் அவளையே குற்றம் சொல்லிவிட முடியாது. இளமைக்கும் அழகுக்கும் மதிப் பெண்களை அள்ளித்தர சமுதாயம் தயாராயிருக்கும்போது, இருபது வயதில் அந்த வெற்றி போதைக்கு அடிமையாகாமல் இருப்பதென்ன சுலபமா..? குரலினிமையிருக்கட்டும்... ஆளுமையின் இனிமையையும் ஆயுதமாக்கினாள்



சௌதாமினி. அந்த ஆயுதத்தைப் பிரயோகித்து மனிதர்களை, சந்தர்ப்பங்களை, மேடைகளை, வெற்றிகளை வளைத்துப் போட முடிந்திருக்கிறது. இந்த கலப்பு வழியில் சங்கீத ஆராதனைக்கு இடமில்லை. அது முரட்டுப் பாதை. தவமாய் எண்ணி நடக்க வேண்டிய நீள் பயணம்.

பவித்ராவுக்குத் தன்னையறியாமல் பட்டாபிராமனின் நினைவு வந்தது. அந்த முரட்டுப் பாதையில் பாசமுடன் நடந்தவன். கலப்படமற்ற பக்தியுடன் தன் கலையை, பணியை உபாசிக்கிறவன். அத்தனைக்குப் பிறகும் இரண்டாம் இடந்தானே என்கிற அவனது ஆதங்கம் கூட நியாயமானதே..! ஆனால் அதைப் பவித்ரா அவனிடம் ஒப்புக் கொண்டதில்லை...

"பவித்ரா...!" சோர்வுடன் அழைத்தாள் சௌதாமினி. உள்ளத்தின் துக்கத்தையெல்லாம் ஒன்றுதிரட்டியதுபோல் இரு நீர் முத்துக்கள் விழிக்கடைகளில் நடுங்கிக் கொண்டிருந்தன...

"ம்...?" அவள் நெற்றியை வருடினாள் பவித்ரா.

"எனக்குப் பட்டாபிராமனைப் பார்க்கணும்..."

தூக்கிவாரிப் போட்டது. 'என் சிந்தனையின் நிழல் போய் இவள் மனத்தில் கவிந்ததா...?'

சௌதாமினியின் நெற்றியிலிருந்து கை விலக்கி அவள் கரங்களைப் பிடித்துக் கொண்டாள்.

"ஆகட்டும், சௌதாமினி. நீ நல்லபடியா வீட்டுக்கு வந்து சேரு... நான் அழைச்சுண்டு வரேன் பட்டாபியை..."

ஆனால், பவித்ரா அவளை நர்சிங் ஹோமுக்குத் தான் அழைத்துப் போக வேண்டியிருந்தது! வீட்டுக்கு வந்து சேர்ந்த மூன்றாம் நாளே சௌதாமினி மீண்டும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள். ரத்தம் செலுத்தியபோது ஏமாற்றிக்கொண்டு ஏறிய காமாலைக் கிருமிகள் கடுமையாய்த் தாக்கியிருந்தன. குழந்தையைத் தனிமைப்படுத்தியிருந்தார்கள்.

"ஐயம் சாரி மிஸ்டர் தியாகராஜன்... இது எப்பவாவது நடக்கறதுதான். ஆனா, மோசமான அட்டாக்கா இருக்கு..."

"ப்ளீஸ் டாக்டர்..."

"ஐ யம் டூயிங் மை பெஸ்ட். ஆனா அவ மனசு அமைதியாயில்லை... 'பட்டாபி, பட்டாபி'ன்னு ஒரே புலம்பல் வேற..." சற்று தர்ம சங்கடத்துடன் தியாகராஜனைப் பார்த்தாள் டாக்டர் விமலா.

"வரச் சொல்லியிருக்கேன் டாக்டர்..."

வந்தவன் சுத்தமாய் ஆடிப் போனான். அழகெல்லாம் விடைபெற்று, பழுத்த நிறத்தில் அந்த முகத்தைப் பார்க்கவும் சக்தியின்றித் துவண்டான்.

பவித்ரா அவன் தோளை அழுத்தி தைரியமூட்டினாள்.

"பட்டாபி! வந்துட்டியா...!" அவனைக் கண்ட கணத்தில் சௌதாமினியிடம் ஒரு ஜீவகளை மின்னி மறைந்தது. கைகள் நெஞ்சருகே கூப்பிக் கொண்டன.

"எனக்கொரு பொண்ணு பொறந்திருக்கு பட்டாபி..."

"தெரியும் சௌதாமினி... ரொம்ப சந்தோஷம்..."

"என்ன சந்தோஷம்...? அதுக்குப் பேர் வைக்கக் கூட முடியாம இப்படியாயிட்டேன் பாரு..."

"சீக்கிரமா சரியாயிடும்..."

"இல்ல பட்டாபி. எனக்கு நம்பிக்கையில்லே..." ஜாடையில் தியாகராஜனை அருகே அழைத்தாள். அவன் அதைரியத்துடன் அவள் கைபிடித்துக் கொண்டான்.

"பயப்படாதீங்க தியாகு.. நம்ம பொண்ணு பட்டாபியோட பொறுப்பு.. சரியா...?"

தியாகராஜன் மௌனமாய் துக்கத்தைப் மறைத்துக் கொண்டான்.

"பட்டாபி... எங்க பொண்ணு இருக்கே... உன்னோட சிஷ்யையா வரணும். உன்னை மாதிரியே... நீ பொறுப்பெடுத்துக்கோ பட்டாபி. இல்லாதுபோனா என்னை மாதிரி வளர்ந்தாலும் வளர்ந்துடுவா.. அப்புறம்... என்னை மாதிரி பாடுவா... அது வேண்டாம், வேண்டவே வேண்டாம்..."

ஜுர வேகத்தில் அவள் பேச, பட்டாபிராமனுக்குள் ஒரு மலை புரண்டு திரும்பியது. செய்வதறியாது திகைத்து நின்றான் அவன்.

சாயரட்சை பூஜைக்கு ஆயத்தங்களாகிக் கொண்டிருந்தன. நாதஸ்வரத்தில் ஸாரமதி ஆலாபனை குழைந்து குழைந்து நாதோபாஸனை நிகழ்த்தியது.

❑ நீங்கள் உண்மையிலேயே அழகானவராக விளங்க வேண்டுமென்றால் கண்ணாடி முன் ஒரு நிமிடமும், உங்கள் ஆத்மாவின் முன் ஐந்து நிமிடமும், கடவுளின் முன் பதினைந்து நிமிடமும் நில்லுங்கள்.

- ரோஸா மரியா

❑ எல்லோரும் தம்மை விட்டு வேறு எதையோ சீர்திருத்த முயல்கிறார்கள்.

- தாகூர்

தகவல் : கே. ஆர். ரவீந்திரன்



கருத்து : கிட்டு

மருந்தீசர் சன்னதியில் பட்டாபிராமன் மனமொன்றி நின்றான். 'சாக்ஷாத் காரநீ...'- கீர்த்தனை ஆரம்பித்ததும் அவனறியாமல் கண்ணீர் பெருகி இதய சுத்தி செய்தது. தீப ஒளியும் இசையின் ஒலியும் ஒன்றாகி அவனுள் புகுந்து பரவியதுபோல் உணர்ந்தான். எங்கும் எதிலும் நிர்மலம்...

அரை மணி நேரம் சென்று அவன் வெளிப் பிராகார மண்டபத்தை அடைந்த போது பவித்ரா காத்திருந்தாள்.

"அப்பவே வந்துட்டேன்... ஐயா கண்ணைத் திறக்கற வழியைக் காணும்... பேசாம இங்க வந்து உட்கார்ந்துட்டேன்.."

கனிந்து சிரித்தான் பட்டாபிராமன்.

"சௌதாமினி எப்படி இருக்கா...?"

"பரவால்லை. நல்ல முன்னேற்றம்..." அவனை வாஞ்சையுடன் பார்த்தாள். "அப்பா! உன் குரலைக் கேட்க எத்தனை ஆனந்தமாயிருக்கு தெரியுமா..?"

"அப்படியா...? எனக்கும் இந்த ஒரு வார மௌனம் ஆனந்தமாய்த்தான் இருந்தது பவித்ரா..."

வியப்புடன் திரும்பினாள்.

"சௌதாமினிக்காக ஒரு பிரார்த்தனையாத்தான் மௌனவிரதமிருந்தேன். ஆனா அது என்னையும் குணமாக்கியிருக்கு..."

"ம்...?"

எண்ணங்களை வரிசைப்படுத்த சில கணங்கள் எடுத்துக் கொண்டான்.

"உண்மையிலே சௌதாமினி ரொம்ப உயர்ந்த மனுஷி பவித்ரா... தன்னோட குறையை அவளால எங்கிட்டே பகிரங்கமா ஒத்துக்க முடிஞ்சிருக்கு... ஆனா என்னால என் பொறாமையை அவகிட்டே உடைச்சு சொல்ல முடியுமா...? முடியாது! முடியவே முடியாது!"

"பட்டாபி!"

"ஆமாம். அது தான் உண்மை. இன்னிக்கு எனக்குள்ளே அந்த உணர்வு இல்லைங்கறது சத்தியம். ஆனால் அது நாலு வருஷமா என்னை ஆட்டிப் படைச்சதுன்றதும் சத்தியம்.... ஒவ்வொரு டிசம்பருக்கும் ஒரு கனவு வைச்சிருப்பேன். அவளைத் தோற்கடிக்கறதாக, வீழ்த்தறதாக, நானே முதலிடத்திலே வர்றதாக... ஆனா எல்லாத்துலயும் நான்தான் தோற்றுப் போவேன்..."

அவன் தன்னைத் தானே பார்த்துச் சிரித்துக் கொள்வதுபோல் தொடர்ந்தான். பவித்ரா ஆடாமல் அசையாமல் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"எல்லாமே தப்பு! எத்தனை பேருக்கு இடமிருக்கு இங்கே...! பின்னல் கோலாட்டம் மாதிரி, சிடுக்கு விழாம, மோதாம, முட்டாம, மாறி மாறி விதவிதமா அவரவர் பாணியிலே வந்து போறவங்க... இதுலே ஒருத்தரை மட்டம்னு சொல்ல நாம யாருன்னு தோணிப் போச்சு..."

அவன் நெற்றியில் திருநீறு துலங்குவது தூரத்து மெர்க்குரி விளக்கு வெளிச்சத்தில் இலேசாகத் தெரிந்தது.

கும்பலாகப் பெண் குழந்தைகள் பட்டாளமொன்று கிழக்கு வாசல் வழியே ஓடி வந்தது.

"இன்னும் பத்து வருஷமானா சௌதாமினியோட பொண்ணு இப்படித்தான் இருப்பா..." - பட்டாபிராமன் அந்த வண்ணமிகு ஊர்வலத்தைச் சுட்டிக்காட்டினான்.

"அவ பேரு சுருதி... சுருதின்னு வைச்சிருக்காங்க... சுருதி-சௌதாமினி- தியாகராஜனின் மகள், பட்டாபிராமனின் சிஷ்யை... டாட்டர் ஆஃப் சௌதாமினி தியாகராஜன் அண்ட் டிஸைபிள் ஆஃப் பட்டாபிராமன்..." என்றாள் பவித்ரா.

பட்டாபி இலேசாக வெட்கப்பட்டுக் கொண்டான். ●

(நிறைந்தது)



கல்கி

கலெக்ஷன்

சிறப்புப் பகுதி

அமரர் கல்கி நூற்றாண்டு

1899-1999

100

பொன்னியின்

முதலாவது அத்தியாயம்

ஆடித்திருநாள்

ஆதி அந்தமில்லாத கால வெள்ளத்தில் கற்பனை ஓடத்தில் ஏறி நம்முடன் சிறிது நேரம் பிரயாணம் செய்யுமாறு நேயர்களை அழைக்கிறோம். விநாடிக்கு ஒரு நூற்றாண்டு வீதம் எளிதில் கடந்து இன்றைக்குத் தொள்ளாயிரத்து எண்பத்திரண்டு *ஆண்டுகளுக்கு முந்திய காலத்துக்குச் செல்வோமாக.

தொண்டை நாட்டுக்கும் சோழ நாட்டுக்கும் இடையில் உள்ள திருமுனைப்பாடி நாட்டின் தென்பகுதியில், தில்லைச் சிற்றம்பலத்துக்கு மேற்கே இரண்டு காத தூரத்தில், அலை கடல் போன்ற ஓர் ஏரி விரிந்து பரந்து கிடக்கிறது. அதற்கு வீர நாராயண ஏரி என்று பெயர். அது தெற்கு வடக்கில் ஒன்றரைக் காத நீளமும் கிழக்கு மேற்கில் அரைக் காத அகலமும் உள்ளது. காலப்போக்கில் அதன் பெயர் சிதைந்து இந்நாளில் 'வீராணத்து ஏரி' என்ற பெயரால் வழங்கி வருகிறது.

புது வெள்ளம் வந்து பாய்ந்து ஏரியில் நீர் நிரம்பித் ததும்பி நிற்கும் ஆடி ஆவணி மாதங்களில் வீரநாராயண ஏரியைப் பார்ப்பவர் எவரும் நம்முடைய பழந்தமிழ் நாட்டு முன்னோர்கள் தங்கள் காலத்தில் சாதித்த அரும்பெரும் காரியங்களைக் குறித்துப் பெரிமிதமும் பெரு வியப்பும் கொள்ளாமலிருக்க முடியாது. நம் மூதாதையர்கள் தங்களுடைய நலனுக்கும் தங்கள் காலத்திய மக்களின் நலனுக்கும் உரிய காரியங்களை மட்டுமா செய்தார்கள்? தாய்த் திருநாட்டில் தங்களுக்குப் பிற்காலத்தில் வாழையடி வாழையாக வரப்போகும் ஆயிரங்கால சந்ததிகளுக்கும் நன்மை பயக்கும் மாபெரும் செயல்களை நிறைவேற்றி விட்டுப் போனார்கள் அல்லவா?

ஆடித் திங்கள் பதினெட்டாம் நாள் முன் மாலை நேரத்தில் அலை கடல் போல் விரிந்து பரந்திருந்த வீர நாராயண ஏரிக்கரை மீது ஒரு வாலிப வீரன் குதிரை ஏறிப் பிரயாணம் செய்து கொண்டிருந்தான். அவன் தமிழகத்து வீர சரித்திரத்தில் புகழ்பெற்ற வாணர் குலத்தைச் சேர்ந்தவன். வல்லவரையன் வந்தியத்தேவன் என்பது அவன் பெயர். நெடுந்தூரம் பிரயாணம் செய்து அலுத்துக் களைத்திருந்த அவனுடைய குதிரை மெள்ள மெள்ள நடந்து சென்று கொண்டிருந்தது. அதைப் பற்றி அந்த இளம் வீரன் கவலைப்படவில்லை. அகண்டமான அந்த வீர நாராயண ஏரியின் தோற்றம் அவன் உள்ளத்தை அவ்வளவாக வசிகரித்திருந்தது.

ஆடிப் பதினெட்டாம் பெருக்கன்று சோழநாட்டு நதிகளிலெல்லாம் வெள்ளம் இரு கரையும் தொட்டுக் கொண்டு ஓடுவது வழக்கம். அந்த நதிகளிலிருந்து தண்ணீர் பெறும் ஏரிகளும் பூரணமாக நிரம்பிக் கரையின் உச்சியைத் தொட்டுக் கொண்டு அலைமோதிக் கொண்டிருப்பது வழக்கம். வடகாவேரி என்று பக்தர்களா

*1950ல் எழுதியது

செல்வன்

லும் கொள்ளிடம் என்று பொது மக்களா லும் வழங்கப்பட்ட நதியிலிருந்து வடவாற்றின் வழியாகத் தண்ணீர் வந்து வீர நாராயண ஏரியில் பாய்ந்து அதை ஒரு பொங்கும் கடலாக ஆக்கியிருந்தது. அந்த ஏரியின் எழுபத்து நான்கு கணவாய் களின் வழியாகவும் தண்ணீர் குமுகுமு வென்று பாய்ந்து சுற்றுப் பக்கத்தில் நெடுந் தூரத்துக்கு நீர்வளத்தை அளித்துக் கொண்டிருந்தது. அந்த ஏரித் தண்ணீரைக் கொண்டு கண்ணுக்கெட்டிய தூரம் கழனி களில் உழவும் விரை தெளியும் நடவும் நடந்து கொண்டிருந்தன. உழுது கொண் டிருந்த குடியானவர்களும் நடவு நட்டுக் கொண்டிருந்த குடியானப் பெண்களும் இனிய இசைகளில் குதூகலமாக அங் கங்கே பாடிக் கொண்டிருந்தார்கள். இதை யெல்லாம் கேட்டுக் கொண்டு வந்தியத் தேவன் களைத்திருந்த குதிரையை விரட் டாமல் மெதுவாகவே போய்க் கொண் டிருந்தான். ஏரிக்கரை மீது ஏறியதிலிருந்து அந்த ஏரிக்கு எழுபத்துநாலு கணவாய்கள் உண்டு என்று சொல்லப்படுவது உண்மை தானா என்று அறிந்து கொள்ளும் நோக் கத்துடன் அவன் கணவாய்களை எண்ணிக் கொண்டே வந்தான். ஏறக் குறைய ஒன்றரைக் காத தூரம் அவன் அந்த மாபெரும் ஏரிக்கரையோடு வந்த பிறகு எழுபது கணவாய்களை எண்ணி யிருந்தான்.

ஆகா! இது எவ்வளவு பிரம்மாண்ட மான ஏரி? எத்தனை நீளம்? எத்தனை அகலம்? தொண்டை நாட்டில் பல்லவப் பேரரசர்களின் காலத்தில் அமைத்த ஏரி களையெல்லாம் இந்த ஏரிக்கு முன்னால் சிறிய குளங் குட்டை கள் என்றே சொல்லத் தோன்றும் அல்லவா? வட காவேரியில் வீணாகச் சென்று கடலில் விழும் தண்ணீரைப் பயன் படுத்துவதற்காக மதுரை கொண்ட பராந்தகரின் புதல்வர் இளவரசர் இராஜாதித்தர் இந்தக் கடல் போன்ற ஏரியை அமைக்க வேண்டு மென்று எண்ணினாரே? எண்ணி அதைச் செயலி லும் நிறைவேற்றினாரே? அவர் எப்பேர்ப் பட்ட அறிவாளியாயிருந்திருக்க வேண் டும்? வீர பௌருஷத்திலேதான் அவருக்கு இணை வேறு யார்? தக்கோலத்தில் நடந்த போரில் தாமே முன்னணியில் யானை மீது ஏறிச் சென்று போராடினார் அல் லவா? போராடிப் பகைவர்களின் வேலை மார்பிலே தாங்கிக் கொண்டு உயிர்நீத்தார் அல்லவா? அதனால் 'யானை மேல் துஞ்சிய தேவர்' எனப் பெயர்பெற்று வீர சொர்க்கம் அடைந்தார் அல்லவா?

இந்தச் சோழகுலத்து மன்னர்களே அதிசயமானவர்கள்தான்! அவர்கள் வீரத்தில் எப்படியோ, அப்படியே அறத்தி லும் மிக்கவர்கள். அறத்தில் எப்படியோ அப்படியே தெய்வபக்தியில் சிறந்தவர்கள். அத்தகைய சோழகுல மன்னர்களுடன் நட்புரிமை கொள்ளும் பேறு தனக்குக் கிடைத்திருப்பது பற்றி நினைக்க நினைக்க வந்தியத்தேவனுடைய தோள்கள் பூரித் தன. மேற்குத் திசையிலிருந்து விர்ரென்று அடித்த காற்றினால் வீர நாராயண ஏரித் தண்ணீர் அலைமோதிக் கொண்டு கரையைத் தாக்கியதுபோல் அவனுடைய உள்ளமும் பெருமிதத்தினால் பொங்கித் ததும்பிற்று.

இப்படியெல்லாம் எண்ணிக் கொண்டு வீரநாராயண ஏரிக் கரையின் தென்கோடிக்கு வந்தி யத்தேவன் வந்து சேர்ந்தான். அங்கே வடகாவேரியிலிருந்து பிரிந்து வந்த வடவாறு, ஏரியில் வந்து சேரும் காட்சி யைக் கண்டான். ஏரிக்கரையிலிருந்து

அமரர் கல்கி

சிறிது தூரம் வரையில் ஏரியின் உட்புறம் படுகையாக அமைந்திருந்தது. வெள்ளம் வந்து மோதும்போது கரைக்குச் சேதம் உண்டாகாமலிருக்கும் பொருட்டு அந்தப் படுகையில் கருவேல மரங்களையும் விளா மரங்களையும் நட்டு வளர்த்திருந்தார்கள். கரையோரமாக நாணல் அடர்த்தியாக வளர்ந்திருந்தது. தென்மேற்குத் திசையிலிருந்து இருபுறமும் மர வரிசையுடன் வடவாற்றின் வெள்ளம் வந்து ஏரியில் கலக்கும் காட்சி சற்றுத் தூரத்திலிருந்து பார்க்கும்போது அழகிய வர்ணக் கோலம் போட்டது போல் காணப்பட்டது.

இந்த மனோகரமான தோற்றத்தின் இனிமையையும் குதூகலத்தையும் அதிகப் படுத்தும்படியான இன்னும் சில காட்சிகளை வந்தியத்தேவன் அங்கே கண்டான்.


அன்று பதினெட்டாம் பெருக்குத் திருநாள் அல்லவா? பக்கத்துக் கிராமங்களிலிருந்து, தந்த நிறத் தென்னங்குருத்துகளால் சப்பரங்கள் கட்டி இழுத்துக் கொண்டு கும்பல் கும்பலாக மக்கள் அங்கே வந்து கொண்டிருந்தார்கள். ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் சில வயோதிகர்களும் கூடப் புதிய ஆடைகள் அணிந்து விதவிதமான அலங்காரங்கள் செய்து கொண்டு வந்திருந்தார்கள். பெண்களின் கூந்தல்களைத் தாழம்பூ, செவந்திப்பூ, மல்லிகை, முல்லை, இருவாட்சி, செண்பகம் முதலிய மலர்கள் கொத்துக் கொத்தாய் அலங்கரித்தன. கூட்டாஞ்சோறும், சித்திரான்னமும் எடுத்துக் கொண்டு பலர் குடும்பங் குடும்பமாக வந்திருந்தார்கள். சிலர் ஏரிக்கரையில் தண்ணீர் ஓரமாக நின்று கொண்டு, சித்திரான்னம் முதலியவற்றைக் கமுகு மட்டைகளில் போட்டுக் கொண்டு உண்டார்கள். இன்னும் சில தைரியசாலிகள் சிறிது தூரம் தண்ணீரில் நடந்து சென்று வடவாற்றங் கரையை அடைந்து அங்கு நின்றபடி சாப்பிட்டார்கள். குழந்தைகள் சிலர் சாப்பிட்ட கமுகு மட்டைகளைக் கணவாய்களின் ஓரமாய் எறிய, அந்த மட்டைகள் கணவாய்களின் வழியாக ஏரிக்கரைக்கு வெளியே விழுந்தடித்து ஓடி வருவதைக் கண்டு கைகொட்டிச் சிரித்தார்கள். ஆடவர்களில் சில வம்புக்காரர்கள் தங்கள் காதலிகளின் கூந்தல்களில் சூடியிருந்த மலர்களை அவர்கள் அறியாமல் எடுத்துக் கணவாய் ஓரத்தில் விட்டு ஏரிக்கரைக்கு மறு பக்கத்தில் அவை ஓடி வருவதைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டு சிறிது நேரம் வல்லவரையன் அங்கேயே நின்று கொண்டிருந்தான். அங்கு நின்ற பெண்களில் இனிய குரலையுடைய சிலர் பாடுவதையும் காது கொடுத்துக் கேட்டான். அவர்கள் ஓடப் பாட்டும், வெள்ளப் பாட்டும், கும்மியும், சிந்தும் பாடினார்கள்.

"வடவாறு பொங்கி வருது
வந்து பாருங்கள், பள்ளியரே!
வெள்ளாறு விரைந்து வருது
வேடிக்கை பாருங்கள், தோழியரே!
காவேரி புரண்டு வருது
காண வாருங்கள், பாங்கியரே!"

என்பன போன்ற வெள்ளப் பாட்டுக்கள் வந்தியத்தேவன் செவிகளில் இன்ப வெள்ளமாகப் பாய்ந்தன.

வேறு சிலர் சோழகுல மன்னர்களின் வீரப் புகழைக் கூறும் பாடல்களைப் பாடினார்கள். முப்பத்திரண்டு போர்களில் ஈடுபட்டு, உடம்பில் தொண்ணூற்றாறு காயங்களை ஆபரணங்களாகப் பூண்டிருந்த விஜயாலய சோழனின் வீரத்தைச் சில பெண்கள் பாடினார்கள். அவனுடைய மகன் ஆதித்த சோழனுடைய வீரத்தைப் போற்றி, அவன் காவேரி நதி உற்பத்தியாகுமிடத்திலிருந்து கடலில் சேரும் இடம் வரையில் அறுபத்து நாலு சிவாலயங்கள் எடுப்பித்ததை ஒரு பெண் அழகிய பாட்டாகப் பாடினாள். ஆதித்தனுடைய மகன் பராந்தக சோழ மகாராஜன் பாண்டியர்களையும் பல்லவர்களையும் சேரர்களையும் வென்று, ஈழத்துக்குப் படை அனுப்பி வெற்றிக் கொடி நாட்டிய மெய்க் கீர்த்தியை இன்னொரு பெண் உற்சாகம் ததும்பப் பாடினாள். ஒவ்வொருத்தியும் பாடியபோது அவளைச் சுற்றிலும் பலர் நின்று கேட்டார்கள். அவ்வப்போது "ஆ! ஆ!" என்று கோஷித்துத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.



குதிரை மீது இருந்தபடியே அவர்களுடைய பாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்த வந்தியத்தேவனை ஒரு மூதாட்டி கவனித்தாள். "தம்பி! வெகு தூரம் வந்தாய் போலிருக்கிறது. களைத்திருக்கிறாய்! குதிரை மீதிருந்து இறங்கி வந்து கொஞ்சம் கூட்டாஞ்சோறு சாப்பிடு!" என்றாள்.

உடனே, பல இள நங்கைகள் நம் வாலிபப் பிரயாணியைப் பார்த்தார்கள். அவனுடைய தோற்றத்தைக் குறித்துத் தங்களுக்குள் இரகசியமாய்ப் பேசிக்கொண்டு கலகலவென்று சிரித்தார்கள். வந்தியத்தேவனை ஒரு பக்கம் வெட்கமும் இன்னொருபுறம் குதூகலமும் பிடுங்கித் தின்றன. அந்த மூதாட்டி சொற்படி இறங்கிச் சென்று அவள் தரும் உணவைச் சாப்பிடலாமா என்று ஒருகணம் சிந்தித்தான். அப்படிச் சென்றால் அங்கே நின்ற இளமங்கைமார்கள் பலரும் அவனைச் சூழ்ந்து கொண்டு பரிகசித்துச் சிரிப்பார்கள் என்பது நிச்சயம். அதனால் என்ன? அத்தனை அழகிய பெண்களை ஒரே இடத்தில் காண்பது சுலபமான காரியமா? அவர்கள் தன்னைப் பரிகசித்துச் சிரித்தாலும் அந்த ஒலி தேவகானமாகவே இருக்கும். வந்தியத் தேவனின் யௌவனக் கண்களுக்கு அந்த ஏரிக்கரையில் நின்ற நங்கைகள் எல்லாரும் அரம்பைகளாகவும் மேனகைகளாகவுமே தோன்றினார்கள்!

ஆனால் அதே சமயத்தில் தென்மேற்குத் திசையில் வடவாற்றின் நீரோட்டத்தில் தோன்றிய ஒரு காட்சி அவனைச் சிறிது தயங்கச் செய்தது. வெள்ளைப் பாய்கள் விரிக்கப்பட்ட ஏழெட்டுப் பெரிய ஓடங்கள், வெண்சிறகுகளை விரித்துக் கொண்டு நீரில் மிதந்து வரும் அன்னப் பட்சிகளைப் போல், மேலக் காற்றினால் உந்தப்பட்டு விரைந்து வந்து கொண்டிருந்தன.

ஏரிக்கரையில் பலவகைக் களியாட்டங்களில் ஈடுபட்டிருந்த ஜனங்கள் அத்தனை பேரும் அந்தப் படகுகள் வரும் திசையையே ஆவலுடன் பார்க்கத் தொடங்கினார்கள்.

அந்தப் படகுகளிலே ஒரு படகு எல்லாவற்றுக்கும் முன்னதாக விரைந்து வந்து ஏரிக்கரை வடக்கு நோக்கித் திரும்பும் மூலையை அடைந்தது. அந்தப் படகில் கூரிய பிரகாசமான வேல்களை ஏந்திய ஆஜானுபாகுவான வீரர்கள் பலர் இருந்தார்கள்.

அவர்களில் சிலர் ஏரிக்கரையில் குதித்திறங்கி அங்கே இருந்த ஜனங்களைப் பார்த்துப் "போங்கள்! போங்கள்!" என்று விரட்டினார்கள். அவர்கள் அதிகமாக விரட்டுவதற்கு இடம் வையாமல் ஜனங்களும் அவரவர்களுடைய பாத்திரங்கள் முதலியவற்றை எடுத்துக் கொண்டு விரைந்து கரையேறத் தொடங்கினார்கள்.

வந்தியத்தேவனுக்கு இது ஒன்றும் விளங்கவில்லை. இந்த வீரர்கள் யார்? பின்னால் வரும் பாய்விரித்த படகுகளில் யார் வருகிறார்கள்? எங்கிருந்து வருகிறார்கள்? ஒருவேளை அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பார்களோ?

ஏரிக்கரையில் கையிலே கோல்பிடித்து நின்ற பெரியவர் ஒருவரை வல்லவரையன் அணுகினான். "ஐயா! இந்த வீரர்கள் யாரைச் சேர்ந்தவர்கள்? அதோ பின்னால் வரும் அன்னக் கூட்டம் போன்ற ஓடங்கள் யாருடையவை? எதற்காக இவ் வீரர்கள் மக்களை விரட்டுகிறார்கள்? மக்களும் எதற்காக விரைகிறார்கள்?" என்று கேள்விகளை அடுக்கினான்.

"தம்பி! உனக்குத் தெரியவில்லையா, என்ன? அதோ அந்தப் படகுகளின் நடுப் படகில் ஒரு கொடி பறக்கிறதே! அதில் என்ன எழுதியிருக்கிறது, பார்!" என்றார் பெரியவர்.

"பனைமரம் போல் தோன்றுகிறது."

"பனைமரந்தான்! பனைமரக் கொடி பழுவேட்டரையர் கொடி என்று உனக்குத் தெரியாதா?"

"மகாவீரர் பழுவேட்டரையரா வருகிறார்?" என்று வந்தியத்தேவன் திடுக்கிட்ட குரலில் கேட்டான்.

"அப்படித்தான் இருக்க வேண்டும். பனைமரக் கொடியை உயர்த்திக் கொண்டு வேறு யார் வர முடியும்?" என்றார் பெரியவர்.

வல்லவரையனுடைய கண்கள் அளவிலா வியப்பினால் விரிந்து படகுகள் வந்த திசையை நோக்கின. பழுவேட்டரையரைப் பற்றி வல்லவரையன் எவ்வளவோ கேள்விப்பட்டிருந்தான். யார்தான் கேள்விப்படாமலிருக்க முடியும்? தெற்கே ஈழநாட்டிலிருந்து வடக்கே கலிங்க நாடு வரையில் அண்ணன் தம்பிகளான பெரிய பழுவேட்டரையர், சின்னப் பழுவேட்டரையர் என்பவர்களுடைய பெயர்கள் பிரசித்தமாயிருந்தன. உறையூருக்குப் பக்கத்தில் வடகாவேரியின் வடகரையில் உள்ள பழுவூர் அவர்களுடைய நகரம். விஜயாலய சோழன் காலத்திலிருந்து பழுவேட்டரையர் குலம் வீரப் புகழ்பெற்றிருந்தது. அக் குடும்பத்தார் சோழ மன்னர் குடும்பத்துடன் கொள்வினை - கொடுப்பினை செய்து வந்தனர். இது காரணமாகவும், அவர்களுடைய குலத்தொன்மை, வீரப்புகழ் இவை காரணமாகவும் பழுவேட்டரையர் குலம் அரச குலத்தின் சிறப்புக்கள் எல்லாம் பெற்றிருந்தது. தனியாகக் கொடி போட்டுக் கொள்ளும் உரிமையும் அக் குலத்துக்கு உண்டு.

இப்போதுள்ள பழுவேட்டரையர் இருவரில் மூத்தவர் இருபத்து நான்கு போர்களில் ஈடுபட்டவர். அவருடைய காலத்தில் அவருக்கு இணையான வீரர் சோழ நாட்டில் யாருமில்லையென்று புகழ்பெற்றவர். இப்போது பிராயம் ஐம்பதுக்கு மேல் ஆகிவிட்டபடியால் அவர் போர்க்களங்களுக்கு நேரில் செல்வதில்லை. ஆனால் சோழநாட்டு அரசாங்கத்தில் மிக உன்னதமான பல பதவிகளை வகித்து வந்தார். அவர் சோழ சாம்ராஜ்யத்தின் தனாதிகாரி; தான்யாதிகாரி. தனபண்டாரமும் தான்ய பண்டாரமும் அவருடைய அதிகாரத்தில் இருந்தன. அரசியலின் தேவைக்குத் தகுந்தபடி இறைவிதித்து வசூலிக்கும் அதிகாரம் அவரிடம் இருந்தது. எந்தச் சிற்றரசரையும், கோட்டத் தலைவரையும், பெரிய குடித் தனக்காரரையும், "இவ்வாண்டு இவ்வளவு இறை தரவேண்டும்!" என்று கட்டளையிட்டு வசூலிக்கும் உரிமை அவருக்கு இருந்தது. ஆகவே, சுந்தர சோழ மகாராஜாவுக்கு அடுத்தபடியாகச் சோழ சாம்ராஜ்யத்தில் இப்போது வலிமை மிக்கவர் அவர்தான்.

அத்தகைய மகா வீரரும் அளவிலா வலிமையும் அதிகாரமும் படைத்தவருமான, பெரிய பழுவேட்டரையரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் வந்தியத்தேவனுடைய உள்ளத்தில் பொங்கியது. ஆனால் அதே சமயத்தில், காஞ்சி நகரின் புதிய பொன் மாளிகையில் இளவரசர் ஆதித்த கரிகாலர் தன்னிடம் அந்தரங்கமாகச் சொன்ன செய்தி அவனுக்கு நினைவு வந்தது.

"வந்தியத்தேவா! நீ சுத்த வீரன் என்பதை நன்கு அறிவேன். அத்துடன் நீ நல்ல அறிவாளி என்று நம்பி இந்த மாபெரும் பொறுப்பை உன்னிடம் ஒப்புவிக்கிறேன்.

நான் கொடுத்த இரு ஓலைகளில் ஒன்றை என் தந்தை மகாராஜாவிடமும் இன்னொன்றை என் சகோதரி இளைய பிராட்டியிடமும் ஒப்புவிக்க வேண்டும். தஞ்சையில் இராஜ்யத்தின் பெரிய பெரிய அதிகாரிகளைப் பற்றிக் கூட ஏதேதோ கேள்விப்படுகிறேன். ஆகையால் நான் அனுப்பும் செய்தி யாருக்கும் தெரியக் கூடாது. எவ்வளவு முக்கியமானவரா யிருந்தாலும் நீ என்னிடமிருந்து ஓலை கொண்டு போவது தெரியக்கூடாது. வழியில் யாருடனும் சண்டை பிடிக்கக் கூடாது. நீயாக வலுச் சண்டைக்குப் போகாமலிருந்தால் மட்டும் போதாது. மற்றவர்கள் வலுச் சண்டைக்கு இழுத்தாலும் நீ அகப்பட்டுக் கொள்ளக் கூடாது. உன்னுடைய வீரத்தை நான் நன்கறிவேன். எத்தனையோ தடவை நிரூபித்திருக்கிறாய். ஆகையால் வலிய வரும் சண்டையிலிருந்து விலகிக் கொண்டாலும் கௌரவக் குறைவு ஒன்றும் உனக்கு ஏற்பட்டு விடாது. முக்கியமாக, பழுவேட்டரையர்களிடமும் என் சிறிய தந்தை மதுராந்தகரிடமும் நீ மிக்க ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு நீ இன்னான் என்று கூடத் தெரியக் கூடாது! நீ எதற்காகப் போகிறாய் என்று அவர்களுக்குக் கண்டிப்பாய்த் தெரியக் கூடாது!"

சோழ சாம்ராஜ்யத்தின் பட்டத்துக்குரிய இளவரசரும் வடதிசைச் சைன்யத்தின் மகாதண்ட நாயகருமான ஆதித்த கரிகாலர் இவ்விதம் சொல்லியிருந்தார். மேலும் வந்தியத்தேவன் நடந்து கொள்ள



வேண்டியவிதங்களைப் பற்றியும் படித்துப் படித்துக் கூறியிருந்தார். இவையெல்லாம் நினைவு வரவே, பழுவேட்டரையரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலை வல்லவரையன் அடக்கிக் கொண்டான். குதிரையைத் தட்டிவிட்டு வேகமாகச் செல்ல முயன்றான். என்ன தட்டி விட்டாலும் களைப்புற்றிருந்த அந்தக் குதிரை மெதுவாகவே சென்றது. இன்று இரவு கடம்பூர் சம்புவராயர் மாளிகையில் தங்கிவிட்டு நாளைக் காலையில் புறப்படும்போது வேறு நல்ல குதிரை சம்பாதித்துக் கொண்டே கிளம்ப வேண்டும் என்று மனதிற்குள் தீர்மானித்துக் கொண்டான்.

இரண்டாம் அத்தியாயம்

ஆழ்வார்க்கடியான் நம்பி

ஏரிக்கரையிலிருந்து கீழிறங்கித் தென்திசை சென்ற பாதையில் குதிரையைச் செலுத்தியபோது வந்தியத்தேவனுடைய உள்ளம் ஏரி அலைகளின் மீது நடனமாடிய படகைப் போல் ஆனந்தக் கூத்தாடியது. உள்ளத்தின் உள்ளே மறைந்து கிடந்த குதூகலம் பொங்கித் ததும்பியது. வாழ்க்கையில் வேறு யாரும் காணாத அதிசய அனுபவங்களைத் தான் அடையும் காலம் நெருங்கி விட்டதென்று அவனுடைய உள்ளுணர்ச்சி சொல்லியது. சோழ நாட்டை அணுகும்போதே இவ்வளவு ஆனந்தக் கோலாகலமாயிருக்கிறதே? கொள்ளிடத்தைத் தாண்டி விட்ட பின்னர் அச் சோழ நாட்டின் நீர்வளமும் நிலவளமும் எப்படியிருக்கும்? அந்நாட்டில் வாழும் மக்களும் மங்கையரும் எப்படியிருப்பார்கள்? எத்தனை நதிகள்? எத்தனை குளங்கள்? எத்தனை தெளிநீர் ஓடைகள்? கவிகளிலும் காவியங்களிலும் பாடப்பெற்ற பொன்னி நதியின் காட்சி

எப்படியிருக்கும்? அதன் கரைகளிலே பூத்துக் குலுங்கும் புன்னை மரங்களும் கொன்னை மரங்களும் கடம்ப மரங்களும் எத்தகைய மனோகரமான காட்சியாயிருக்கும்? நீரோடைகளில் குவளைகளும் குமுதங்களும் கண்காட்டி அழைப்பதும் செந்தாமரைகள் முகமலர்ந்து வரவேற்பதும் எத்தகைய இனிய காட்சியாயிருக்கும்? காவேரியின் இரு கரைகளிலும் சிவபக்திச் செல்வர்



களான சோழப் பரம்பரையினர் எடுப்பித்துள்ள அற்புத வேலைப்பாடமைந்த ஆலயங்கள் எவ்வளவு அழகாயிருக்கும்?

ஆகா! பழையாறை நகர்! சோழ மன்னர்களின் தலைநகர்! பூம்புகாரையும் உறையூரையும் சிறிய குக்கிராமங்களாகச் செய்துவிட்ட பழையாறை! அந்நகரிலுள்ள மாடமாளிகைகளும் கூட கோபுரங்களும் படை வீடுகளும் கடை வீதிகளும் சிவாலயக் கற்றளிகளும் திருமாலுக்குரிய விண்ணகரங்களும் எப்படியிருக்கும்? அந்த ஆலயங்களில் இசை வல்லவர்கள் இனிய குரலில் தேவாரப் பாடல்களையும் திருவாய்மொழிப் பாசுரங்களையும் பாடக் கேட்டோர் பரவசமடைவார்கள் என்று வந்தியத்தேவன் கேள்வியுற்றிருந்தான். அவற்றையெல்லாம் கேட்கும் பேறு தனக்கு விரைவில் கிடைக்கப் போகிறது. இது மட்டுந்தானா? சில நாளைக்கு முன்பு வரையில் தான் கனவிலும் கருதாத சில பேறுகளும் கிட்டப்போகின்றன. வீரத்தில் வேலனையும் அழகில் மன்மதனையும் நிகர்த்த பராந்தக சுந்தர சோழ மகாராஜாவை நேருக்கு நேர் காணப் போகிறான். அவ்வளவுதானா? அவருடைய செல்வப் புதல்வி, ஒப்புயர்வில்லாத நாரீமணி, குந்தவைப் பிராட்டியையும் காணப் போகிறான்!

ஆனால் வழியில் தடை எதுவும் நேராமல் இருக்க வேண்டும். எந்தத் தடை நேர்ந்தால்தான் என்ன? கையிலே வேல் இருக்கிறது.



இடையில் தொங்கிய உறையிலே வாள் இருக்கிறது. மார்பிலே கவசம் இருக்கிறது. நெஞ்சிலே உரமிருக்கிறது. ஆனால் மகாதண்ட நாயகர், இளவரசர் ஆதித்தர், ஒரு பெரிய முட்டுக்கட்டை போட்டிருக்கிறார்; ஒப்புவித்த காரியத்தை நிறைவேற்றுவதற்கு முன்பு யாரிடமும் சண்டை பிடிக்கக் கூடாதென்று. அந்தக் கட்டளையை நிறைவேற்றுவதுதான் மிகவும் கடினமாயிருக்கிறது. ஏதோ இவ்வளவு தூரமும் பிரயாணம் செய்தபோது நிறைவேற்றியாகி விட்டது. இன்னும் இரண்டு நாளையப் பிரயாணம்தானே மிச்சமிருக்கிறது? அதுவரை பொறுமையுடன் இருந்தே தீர வேண்டும்.

ஆதவன் மறைவதற்குள்ளே கடம்பூரை அடைய வேண்டும் என்ற கருத்துடன் சென்று கொண்டிருந்த வந்தியத்தேவன் சிறிது நேரத்துக்கெல்லாம் வீர நாராயணபுர விண்ணகரக் கோயிலை நெருங்கினான்.

அன்று ஆடித் திருமஞ்சனத் திருவிழாவும் சேர்ந்திருந்தபடியால் கோயிலைச் சுற்றியுள்ள மரத் தோப்புகளில் பெரும் ஜனக் கூட்டம் சேர்ந்திருந்தது.

பலாச் சுளைகளும் வாழைப் பழங்களும் கரும்புக் கழிகளும் பலவகைத் தின்பண்டங்களும் விற்பவர்கள் ஆங்காங்கே கடை வைத்திருந்தார்கள். பெண்கள் தலையில் சூடிக் கொள்ளும் மலர்களையும், தேவ பூஜைக்குரிய தாமரை மொட்டுக்கள் முதலியவற்றையும் சிலர் விற்றுக் கொண்டிருந்தார்கள். தேங்காய், இளநீர், அகில், சந்தனம், வெற்றிலை, வெல்லம், அவல், பொரி முதலியவற்றைச் சிலர் குப்பல் குப்பலாகப் போட்டுக் கொண்டிருந்தார்கள். ஆங்காங்கே வேடிக்கை விநோதங்கள் நடந்து கொண்டிருந்தன. ஜோசியர்கள், ரேகை சாஸ்திரத்தில் வல்லவர்கள், குறி சொல்லுகிறவர்கள், விஷக்கடிக்கு மந்திரிப்பவர்கள், - இவர்களுக்கும் அங்கே குறைவில்லை. இதையெல்லாம் பார்த்துக் கொண்டு சென்ற வந்தியத்தேவன் ஓரிடத்தில் ஒரு பெருங் கூட்டம் நின்று கொண்டிருப்பதையும் அந்தக் கூட்டத்துக்குள்ளேயிருந்து யாரோ சிலர் உரத்த குரலில் வாக்குவாதம் செய்யும் சத்தம் வருவதையும் கவனித்தான். என்ன விவாதம் நடைபெறுகிறது என்பதை அறிந்து கொள்ள அவனுக்கு ஆவல் பீறிக் கொண்டு எழுந்தது. அந்த ஆவலை அடக்கிக் கொள்ள அவனால் முடியவில்லை. கூட்டத்துக்கு வெளியில் சாலை ஓரமாகக் குதிரையை நிறுத்தி விட்டுக் கீழே இறங்கினான். குதிரையை அங்கேயே நிற்கும்படி தட்டிக் கொடுத்துச் சமிக்ஞையால் சொல்லிவிட்டுக் கூட்டத்தைப் பிளந்து கொண்டு உள்ளே போனான்.

அங்கே விவாதத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மூன்றே பேர்தான் என்பதைப் பார்க்க அவனுக்கு வியப்பு ஏற்பட்டது. ஆனால் விவாதத்தில் ஈடுபட்டவர்கள் மூன்றே பேர்தான் என்றாலும், கூட்டத்திலிருந்தவர்கள் பலர் அவ்வப்போது அவரவர்களுக்கு உகந்த வாதக்காரரின் கட்சியை ஆதரித்துக் கோஷங்களைக் கிளப்பினார்கள். அதனாலேதான் அவ்வளவு சத்தம் எழுந்தது என்பதை வந்தியத்தேவன் தெரிந்து கொண்டான். பிறகு என்ன விவாதம் நடைபெறுகிறது என்பதைக் கவனித்தான்.

வாதமிட்ட மூவரில் ஒருவர் உடம்பெல்லாம் ஊர்த்வபுண்டரமாகச் சந்தனம் அணிந்து தலையில் முன் குடுமி வைத்திருந்த வைஷ்ணவ பக்தசிகாமணி. கையில் அவர் ஒரு குறுந்தடியும் வைத்திருந்தார். கட்டையாயும் குட்டையாயும் வைரம் பாய்ந்த திருமேனியுடன் விளங்கினார்.

இன்னொருவர் தமது மேனியெல்லாம் பட்டை பட்டையாய்த் திருநீறு அணிந்திருந்த சிவபக்தர்.

மூன்றாவது மனிதர் காவி வஸ்திரம் தரித்துத் தலையையும் முண்டனம் செய்து கொண்டிருந்தார். அவர் வைஷ்ணவரும் அல்ல, சைவரும் அல்ல, இரண்டையும் கடந்தவரான அத்வைத வேதாந்தி என்று தெரியவந்தது.

சைவர் சொன்னார் : "ஓ, ஆழ்வார்க்கடியான் நம்பியே! இதற்கு விடை சொல்லும்! சிவபெருமானுடைய முடியைக் காண்பதற்குப் பிரம்மாவும், அடியைக் காண்பதற்குத் திருமாலும் முயன்

நார்களா, இல்லையா? முடியும் அடியும் காணாமல் இருவரும் வந்து சிவபெருமானுடைய பாதங்களில் சரணாகதி அடைந்தார்களா, இல்லையா? அப்படியிருக்கச் சிவபெருமானைக் காட்டிலும் உங்கள் திருமால் எப்படிப் பெரிய தெய்வம் ஆவார்?"

இதைக் கேட்ட ஆழ்வார்க்கடியான் நம்பி தன் கைத் தடியை ஆட்டிக் கொண்டு, "சரிதான் காணும்! வீர சைவ பாததூளி பட்டரே! நிறுத்தும் உம்பேச்சை! இலங்கை அரசனாகிய தசகண்ட ராவணனுக்கு உம்முடைய சிவன் வரங்கள் கொடுத்தாரே? அந்த வரங்கள் எல்லாம் எங்கள் திருமாலின் அவதாரமாகிய இராமபிரானின் கோதண்டத்தின் முன்னால் தவிடுபொடியாகப் போகவில்லையா? அப்படியிருக்க, எங்கள் திருமாலைக் காட்டிலும் உங்கள் சிவன் எப்படிப் பெரிய தெய்வமாவார்?" என்று கேட்டான்.

இந்தச் சமயத்தில் காவி வஸ்திரம் அணிந்த அத்வைத சந்நியாசி தலையிட்டுக் கூறியதாவது : "நீங்கள் இருவரும் எதற்காக வீணில் வாதம் இடுகிறீர்கள்? சிவன் பெரிய தெய்வமா, விஷ்ணு பெரிய தெய்வமா என்று எத்தனை நேரம் நீங்கள் வாதித்தாலும் விவகாரம் தீராது. இந்தக் கேள்விக்குப் பதில் வேதாந்தம் சொல்கிறது. நீங்கள் கீழான பக்தி மார்க்கத்தில் இருக்கிற வரையில்தான் சிவன் – விஷ்ணு என்று சண்டையிடுவீர்கள். பக்திக்கு மேலே ஞானமார்க்கம் இருக்கிறது. ஞானத்துக்கு மேலே ஞாஸம் என்று ஒன்று இருக்கிறது. அந்த நிலையை அடைந்து விட்டால் சிவனும் இல்லை, விஷ்ணுவும் இல்லை. சர்வம் பிரம்ம மயம் ஜகத். ஸ்ரீ சங்கர பகவத் பாதாச்சாரியர் பிரம்ம சூத்திர பாஷ்யத்தில் என்ன சொல்லியிருக்கிறார் என்றால்..."

இச்சமயம் ஆழ்வார்க்கடியான் நம்பி குறுக்கிட்டு, "சரிதான் காணும், நிறுத்தும்! உம்முடைய சங்கராச்சாரியார் அவ்வளவு உபநிஷதங்களுக்கும் பகவத்கீதைக்கும் பிரம்ம சூத்திரத்துக்கும் பாஷ்யம் எழுதி விட்டுக் கடைசியில் என்ன சொன்னார் தெரியுமா?

'பஜ கோவிந்தம் பஜ கோவிந்தம்



பஜ கோவிந்தம் மூடமதே!'

என்று மூன்று வாட்டி சொன்னார். உம்மைப் போன்ற மௌடீகர்களைப் பார்த்துத்தான் 'மூடமதே!' என்று சங்கராச்சாரியார் சொன்னார்!" எனக் கூறியதும், அந்தக் கூட்டத்தில் 'ஆஹா' காரமும், பரிகாசச் சிரிப்பும் கரகோஷமும் கலந்து எழுந்தன.

ஆனால் சந்நியாசி சும்மா இருக்கவில்லை. "அடே! முன்குடுமி நம்பி! நான் 'மூடமதி' என்று நீ சொன்னது சரிதான். ஏனென்றால், உன் கையில் வெறுந் தடியை வைத்துக் கொண்டிருக்கும் நீ வெறுந்தடியன் ஆகிறாய். உன்னைப் போன்ற வெறுந் தடியனோடு பேசவந்தது என்னுடைய மூடமதியினால்தானே?" என்றார்.

"ஓய் சுவாமிகளே! என் கையில் வைத்திருப்பது வெறுந் தடியல்ல. வேண்டிய சமயத்தில் உம்முடைய மொட்டை மண்டையை உடைக்கும் சக்தி உடையதுங் காணும்!" என்று கூறிக் கொண்டே ஆழ்வார்க்கடியான் கையிலிருந்த குறுந்தடியை ஓங்கினான். அதைப் பார்த்த அவன் கட்சியார் 'ஓஹோ!' என்று ஆர்ப்பரித்தனர்.

அப்போது அத்வைத சுவாமிகள், "அப்பனே! நிறுத்திக் கொள்! தடி உன்னுடைய கையிலேயே இருக்கட்டும். அப்படியே நீ உன் கைத்தடியால் என்னை அடித்தாலும் அதற்காக நான் கோபங் கொள்ள மாட்டேன். உன்னுடன் சண்டைக்கு வரவும் மாட்டேன். அடிப்பதும்

பிரம்மம்; அடிபடுவதும் பிரம்மம். என்னை நீ அடித்தால் உன்னையே அடித்துக் கொள்கிறவனாவாய்!" என்றார்.

ஆழ்வார்க்கடியான் நம்பி, "இதோ எல்லோரும் பாருங்கள்! பிரம்மத்தைப் பரப்பிரம்மம் திருச்சாத்துச் சாத்தப் போகிறது. என்னை நானே தடி கொண்டு தாக்கப் போகிறேன்!" என்று தடியைச் சுழற்றிக் கொண்டு சுவாமிகளை நெருங்கினான்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த வல்லவரையனுக்கு ஒருகணம் அந்த முன் குடுமி நம்பியின் கைத்தடியை வழிமறித்துப் பிடுங்கிக் கொண்டு அவனை அந்தத் தடியினால் நாலு திருச் சாத்துச் சாத்தலாமா என்று தோன்றியது.

ஆனால் திடீரென்று சுவாமியாரைக் காணோம்! கூட்டத்தில் புகுந்து அவர் மறைந்து விட்டார். அதைப் பார்த்துக் கொண்டிருந்த வைஷ்ணவ கோஷ்டியார் மேலும் ஆர்ப்பரித்தார்கள்.

ஆழ்வார்க்கடியான் வீரசைவருடைய பக்கமாகத் திரும்பி, "ஓய் பாத தூளி பட்டரே! நீர் என்ன சொல்லுகிறீர்? மேலும் வாதம் செய்ய விரும்புகிறீரா? அல்லது சுவாமியாரைப் போல் நீரும் ஓட்டம் எடுக்கிறீரா?" என்றான்.

"நானா? ஒருநாளும் நான் அந்த வாய் வேதாந்தியைப் போல் ஓட்டம் எடுக்க மாட்டேன். என்னையும் உம்முடைய கண்ணன் என்று நினைத்தீரோ? கோபியர் வீட்டில் வெண்ணெய் திருடி உண்டு மத்தால் அடிபட்டவன்தானே உம்முடைய கண்ணன்!...." என்று பாத தூளி பட்டர் சொல்வதற்குள், ஆழ்வார்க்கடியான் குறுக்கிட்டான். "ஏன் காணும்? உம்முடைய பரமசிவன் பிட்டுக்கு மண் சுமந்து முதுகில் அடிபட்டதை மறந்து விட்டீரோ?" என்று கேட்டுக் கொண்டு கைத்தடியை வீசிக் கொண்டு வீர சைவர் அருகில் நெருங்கினான்.

ஆழ்வார்க்கடியான் நல்ல குண்டாதி குண்டன். வீரசைவராகிய பாததூளிபட்டரோ சற்று மெலிந்த மனிதர்.

மேற்கூறிய இருவரையும் விவாதத்தில் உற்சாகப்படுத்தி வந்தவர்கள் தாங்களும் கைகலக்க ஆயத்தமாகி ஆரவாரம் செய்தார்கள்.

இந்த மூடச் சண்டையைத் தடுக்க வேண்டும் என்ற எண்ணம் வல்லவரையன் மனத்தில் உண்டாயிற்று.

அவன் நின்ற இடத்திலிருந்து சற்று முன்னால் வந்து, "எதற்காக ஐயா நீங்கள் சண்டை போடுகிறீர்கள்? வேறு வேலை ஒன்றும் உங்களுக்கு இல்லையா? சண்டைக்குத் தினவு எடுத்தால் ஈழநாட்டுக்குப் போவதுதானே? அங்கே பெரும் போர் நடந்து கொண்டிருக்கிறதே?" என்றான்.

நம்பி சட்டென்று அவனைத் திரும்பிப் பார்த்து, "இவன் யாரடா நியாயம் சொல்ல வந்தவன்!" என்றான்.

கூட்டத்திலே இருந்தவர்களில் சிலருக்கு, வந்தியத்தேவனுடைய வீரத் தோற்றமும் அவனுடைய அழகிய முகவிலாசமும் பிடித்திருந்தன.

"தம்பி! நீ சொல்லு! இந்தச் சண்டைக்காரர்களுக்கு நியாயத்தை எடுத்துச் சொல்லு! உனக்குப் பக்கபலமாக நாங்கள் இருக்கிறோம்!" என்று அவர்கள் சொன்னார்கள்.

"எனக்குத் தெரிந்த நியாயத்தைச் சொல்கிறேன். சிவபெருமானும் நாராயண மூர்த்தியும் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொள்வதாகத் தெரியவில்லை. அவர்கள் சிநேகமாகவும் சுமுகமாகவும் இருந்து வருகிறார்கள். அப்படியிருக்க, இந்த நம்பியும் பட்டரும் எதற்காகச் சண்டை போட்டுக் கொள்ள வேண்டும்?" என்று வல்லவரையன் கூறியதைக் கேட்டு, அக்கூட்டத்தில் பலரும் நகைத்தார்கள்.

அப்போது வீரசைவ பட்டர், "இந்தப் பிள்ளை அறிவாளியாகவே தோன்றுகிறான். ஆனால் வேடிக்கைப் பேச்சினால் மட்டும் விவாதம் தீர்ந்துவிடுமா? சிவபெருமான் திருமாலை விடப் பெரிய தெய்வமா, இல்லையா என்ற கேள்விக்கு இவன் விடை சொல்லட்டும்!" என்றார்.

"சிவனும் பெரிய தெய்வந்தான்; திருமாலும் பெரிய தெய்வந்தான். இருவரும் சமமான தெய்வங்கள். யாரை வேண்டுமானாலும் தொழுது கொள்ளுங்கள். சண்டை எதற்கு?" என்றான் வல்லவரையன்.

"அது எப்படிச் சொல்லலாம்? சிவனும்

விஷ்ணுவும் சமமான தெய்வங்கள் என்று சொல்வதற்கு ஆதாரம் என்ன?" என்று ஆழ்வார்க்கடியான் அதட்டிக் கேட்டான்.

"ஆதாரமா? இதோ சொல்கிறேன்! நேற்று மாலை வைகுண்டத்துக்குப் போயிருந்தேன். அதே சமயத்தில் பரமசிவனும் அங்கே வந்திருந்தார். இருவரும் சம ஆசனத்தில் அமர்ந்திருந்தார்கள். அவர்களுடைய உயரம் ஒன்றாகவே இருந்தது. ஆயினும் ஐயத்துக்கு இடமின்றி என் கையினால் முழம் போட்டு இருவர் உயரத்தையும் அளந்து பார்த்தேன்..."

"அட பின்னாய்! பரிகாசமா செய்கிறாய்?" என்று ஆழ்வார்க்கடியான் கர்ஜனை செய்தான்.

கூட்டத்தினர், "சொல்லு, தம்பி! சொல்லு!" என்று ஆர்ப்பரித்தார்கள்.

"அளந்து பார்த்ததில் இருவரும் சமமான உயரமே இருந்தார்கள். அதோடு விடாமல் சிவனையும் திருமாலையும் நேரிலேயே கேட்டு விட்டேன். அவர்கள் என்ன சொன்னார்கள், தெரியுமா? 'அரியும் சிவனும் ஒண்ணு, அறியாதவர் வாயிலே மண்ணு' என்று சொன்னார்கள். அவ்விதம் சொல்லி, தங்களைப் பற்றிச் சண்டை போடுகிறவர்களின் வாயிலே போடுவதற்கு இந்தப் பிடி மண்ணையும் கொடுத்தார்கள்!" என்று கூறிய வல்லவரையன், மூடியிருந்த தனது வலக்கையைத் திறந்து காட்டினான். அதற்குள்ளே ஒரு பிடி மண் இருந்தது. அதை வீசி உதறினான்.

கூட்டத்திலிருந்தவர்களில் பலர் அப்போது பெரும் உற்சாகங்கொண்டு தலைக்குத் தலை தரையிலிருந்து ஒரு பிடி மண் எடுத்து, நம்பியின் தலையிலும் பட்டர் தலையிலும் வீசி எறிய ஆரம்பித்தார்கள். இந்தத் துராக்ரகச் செயலைச் சிலர் தடுக்க முயன்றார்கள்.

"அடே! தூர்த்தர்களா? நாஸ்திகர்களா?" என்று சொல்லிக் கொண்டு ஆழ்வார்க்கடியான் தன் கைத் தடியைச் சுழற்றிக் கொண்டு கூட்டத்திற்குள் பிரவேசித்தான்.

ஒரு பெரிய கலவரமும் அடிதடி சண்டையும் அப்போது அங்கே நிகழும் போலிருந்தன.



நல்லவேளையாக, அந்தச் சமயத்தில், சற்றுத் தூரத்தில் ஒரு பெரிய சலசலப்பு ஏற்பட்டது.

"சூராதி சூரர், வீரப்பிரதாபர், மாறபாண்டியன் படையை வீறுகொண்டு தாக்கி வேரோடு அறுத்த வெற்றி வேல் உடையார், இருபத்து நாலு போர்களில் சண்டையிட்டு அறுபத்து நான்கு விழுப்புண்களைப் பெற்ற திருமேனியர், சோழ நாட்டுத் தனாதிகாரி, தானிய பண்டார நாயகர், இறைவிதிக்கும் தேவர், பெரிய பழுவேட்டரையர் விஜயம் செய்கிறார்! பராக்! பராக்! வழி விடுங்கள்!" என்று இடிமுழக்கக் குரலில் கட்டியம் கூறுதல் கேட்டது.

இவ்வாறு கட்டியம் கூறியவர்கள் முதலில் வந்தார்கள். பிறகு முரசு அடிப்பவர்கள் வந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் பனைமரக் கொடி தாங்குவோர் வந்தார்கள். பின்னர், கையில் வேல் பிடித்த வீரர்கள் சிலர் கம்பீரமாக நடந்து வந்தார்கள்.

இவர்களுக்குப் பின்னால் வந்த அலங்கரித்த யானையின் மீது ஆஜானுபாகுவான கரிய திருமேனியர் ஒருவர் வீற்றிருந்தார். மத்தகஜத்தின் மேல் அந்த வீரர் வீற்றிருந்த காட்சி, ஒரு மாமலைச் சிகரத்தின் மீது கரியகொண்டல் ஒன்று தங்கியது போல் இருந்தது.

கூட்டத்தில் இருந்தவர்கள் அத்தனை பேரும் சாலையின் இருபுறத்திலும் வந்து நின்றது போல் வல்லவரையனும் வந்து நின்று பார்த்தான். யானை மீது இருந்தவர்

அட்டைப் பட விளக்கம் :

"பொன்னியின் செல்வன்" என்னும் சோழப் பேரரசர் காலத்துச் சரித்திரத் தொடர்கதை இந்தக் 'கல்கி' இதழில் ஆரம்பமாகிறது.

மன்னர் குலப் பெயர்களை ஆராய்வோர், சிற்சில பெயர்கள் திரும்பத் திரும்ப வந்து கொண்டிருப்பதைக் காண்பார்கள். பாட்டன் பெயரைப் பேரனும் பாட்டியின் பெயரைப் பேத்தியும் வைத்துக் கொள்வது மரபு. இவ்வாறாக, பிற்கால சோழ வம்சத்தில் பராந்தகன், ஆதித்தன், விக்கிரமன், மதுராந்தகன், ராஜராஜன், ராஜேந்திரன், குலோத்துங்கன் முதலிய பெயர்களையும் விருதுப் பெயர்களையும் கொண்ட மன்னர்கள் பலர் இருந்தார்கள். அம்மாதிரியே, சோழ மன்னர்குலப் பெண்டிர்களில், குந்தவைப் பிராட்டி, வானமாதேவி, திரிபுவன மாதேவி, உலக மாதேவி, பஞ்சவன் மாதேவி முதலிய பெயர்கள் அடிக்கடி வருவதுண்டு.

"பார்த்திபன் கனவு" என்னும் சரித்திரக் கதையைப் படித்தவர்களுக்கு, விக்கிரம சோழன் பல்லவ குலத்து இளவரசி குந்தவியை மணந்தான் என்பது நினைவிருக்கலாம். அம்மாதரசியின் பெயரைப் பின்னாளில் சோழர்குலப் பெண்கள் பலரும் வைத்துக் கொண்டார்கள். இந்தக் கதை நடைபெறும் காலத்தில் பராந்தக சுந்தர சோழனுடைய செல்வக் குமாரி அந்தப் பெயரினால் விளங்கினாள். சோழர் குலத்திலேயே மிகப் பிரசித்தி பெற்ற குந்தவைப் பிராட்டி இவள்தான். பின்னால் ராஜராஜன் என்று பெயர் பெற்ற அருள்மொழி வர்மனுடைய தமக்கை. சோழவள நாட்டின் மீது இவள் கொண்டிருந்த காதலினால், வேறொரு அரச குலத்தில் வாழ்க்கைப் பட்டால் வேறு நாட்டுக்குச் செல்ல வேண்டும் என்று அஞ்சி, "நான் கலியாணம் செய்து கொள்ளப் போவதில்லை; கன்னியாகவே இருப்பேன்" என்று உறுதி கொண்டிருந்தாள். அந்த உறுதியைக் குலைப்பதற்கு வாணகப்பாடி நாட்டைச் சேர்ந்த வாலிபன் ஒருவன் வந்து சேர்ந்தான். அவன் பெயர் வல்லவரையன் வந்தியத்தேவன்.

இந்த அமர காதலர்களின் சந்திப்பு அச்சமயம் சோழர்களின் முக்கிய தலைநகரமாயிருந்த பழையாறையில் அரண்மனை உத்தியான வனத்தில் நடைபெறுகிறது. அந்தக் காட்சியைத்தான் நமது அட்டைப்படம் சித்திரிக்கிறது.

குந்தவையும் வந்தியத்தேவனும் இன்னாரென்று தெரிந்து கொண்டு ஒருவரையொருவர் பார்க்கும் கட்டம் இது. ஆனால் அதற்கு முன்னாலேயே அவர்கள் இருமுறை சந்தித்திருக்கிறார்கள். ஆகையினாலேயே இருவருடைய முகத்திலும் மகிழ்ச்சியுடன் கூட அவ்வளவு வியப்பும் போட்டியிட்டுத் ததும்புகிறது. இந்தச் சந்திப்பின் முக்கியத்தைப் பற்றிப் பின்னால் கதையில் விவரமாகத் தெரிந்து கொள்வோம்.

தான் பழுவேட்டரையர் என்பதை ஊகித்துக் கொண்டான்.

யானைக்குப் பின்னால் பட்டுத் திரையினால் மூடப்பட்ட சிவிகை ஒன்று வந்தது. அதற்குள் இருப்பது யாரோ என்று வல்லவரையன் சிந்திப்பதற்குள்ளே, செக்கச் சிவந்த நிறத்துடன் வளையல்களும் கங்கணங்களும் அணிந்த ஒரு கரம் சிவிகைக்குள்ளேயிருந்து வெளிப்பட்டுப் பல்லக்கின் பட்டுத் திரையைச் சிறிது விலக்கியது. மேகத்தினால் மூடப்பட்டிருந்த பூரண சந்திரன் மேகத் திரை விலகியதும் பளீரென்று ஒளி வீசுவது போல் சிவிகைக்குள்ளே காந்திமயமான ஒரு பெண்ணின் முகம் தெரிந்தது.

பெண் குலத்தின் அழகைக் கண்டு களிக்கும் கண்கள் வல்லவரையனுக்கு உண்டு என்றாலும், அந்தப் பெண்ணின் முகம் பிரகாசமான பூரண சந்திரனையொத்த பொன்முகமாயிருந்தாலும், எக்காரணத்தினாலோ வல்லவரையனுக்கு அம்முகத்தைப் பார்த்ததும் உள்ளத்தில் மகிழ்ச்சி தோன்றவில்லை. இனந்தெரியாத பயமும் அருவருப்பும் ஏற்பட்டன.


அதே நேரத்தில் அந்தப் பெண்ணின் கண்கள் வல்லவரையனுக்கு அருகில் உற்று நோக்கின. மறுகணம் ஒரு பீதிகரமான பெண் குரலில் 'கிறீச்' என்ற கூச்சல் கேட்டது. உடனே சிவிகையின் பட்டுத்திரை முன்போல் மூடிக் கொண்டது!

வல்லவரையன் தன் அக்கம் பக்கத்தில் நோக்கினான். தனக்கு அருகில் எதையோ யாரையோ பார்த்துவிட்டுத்தான் அந்த மாது 'கிறீச்'சிட்டு விட்டுச் சிவிகைத் திரையை மூடிக் கொண்டாள் என்று அவன் உள்ளுணர்ச்சி சொல்லிற்று. எனவே, சுற்றுமுற்றும் பார்த்தான். ஆழ்வார்க்கடியான் தனக்குச் சற்றுப் பின்னால் ஒரு புளிய மரத்தில் சாய்ந்து கொண்டு நிற்பதைக் கண்டான்.

அந்த வீர வைஷ்ணவ நம்பியினுடைய முகம் சொல்ல முடியாத விகாரத்தை அடைந்து கோர வடிவமாக மாறியிருப்பதையும் பார்த்தான்.

வல்லவரையனுடைய உள்ளத்தில் காரணம் விளங்காத திகைப்பும் அருவருப்பும் ஏற்பட்டன.

(தொடரும்)



காதல் கல்யாண கம்பெனி!

நமது தேசத்தின், புராதன தர்மங்களுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் ஆசார அனுஷ்டானங்களுக்கும் மாறுபடாத முறைகளில் காதல் கல்யாணத்தைப் புனருத்தாரணம் செய்யும் உத்தம நோக்கத்துடன் இந்த கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. சன்மார்க்கத்துக்குகந்த காதல் இன்பத்தை அநுபவிக்க வேண்டுமென்னும் அவாவுடைய ஸ்திரீ, புருஷர்கள் அனைவரும் முறைப்படி இந்தக் கம்பெனிக்கு விண்ணப்பம் செய்து கொண்டு தங்கள் தங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்.

விண்ணப்ப நமூனா

காதலுடையீர்!

நான் காதல் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று தீவிரமாக ஆவல் கொண்டிருப்பதால், தயவு செய்து எனக்குத் தகுந்த ஒரு காதல் மனைவியைத் தேர்ந்தெடுத்துத் தரவேணுமாய் வேண்டிக் கொள்கிறேன். இந்த விஷயத்தில் தாங்கள் எடுத்துக் கொள்ளும் சிரமத்திற்கு என்னுடைய காதல் கட்டணமாக ரூபாய் ஐந்து அனுப்பி இருக்கிறேன். எக்காரணத்தை முன்னிட்டும் தாங்கள் இத் தொகையை வாபஸ் செய்ய வேண்டியதில்லையென்று நான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிற பெண்ணிடம் நான் கொள்ளப் போகிற காதலின் பெயரால் உறுதி கூறுகிறேன். கீழே என்னைப் பற்றிய விவரங்களும், நான் காதல் புரியக்கூடிய பெண்ணைப் பற்றிய விவரங்களும் தந்திருக்கிறேன்:

விவரங்கள்

1) விண்ணப்பதாரரின் பெயர் :
2) விலாசம் :
3) வயது :
4) மதம் : ஹிந்துவானால்:
 1. ஜாதி
 2. உட்சாதி
 3. கோத்திரம்
5) தேகத்தின் உயரம், மார்பின் குறுக்களவு, எடை :
6) நிறம் (கருப்பாயிருந்தால், 'சியாமளம்' என்று குறிக்கவும்) :
7) அங்கஹீனம் உண்டானால், விவரம் :
 1. பார்வை
 2. கேள்வி
 3. கால், கை
 4. பற்கள்
 5. இதர குறைகள்
8) வியாதி (டாக்டர் சர்டிபிகேட்டுடன்)
9) மூளைக்கோளாறு உண்டானால், விவரம் :
10) கல்வி (கலாசாலைப் பட்டதாரியாயிருந்தால் சொல்லாமல் விடுவதே நல்லது) :

அமரர் கல்கி

11) தொழில், மாத வருமானம்

12) சொத்து இருந்தால், விவரம்

1. சுயார்ஜிதம்

2. பிதுரார்ஜிதம்

13) பிரம்மசாரியா, பெண்டிழந்தவரா, முன்னமே மனைவி அல்லது மனைவிகள் உள்ளவரா?

14) முன்னமே மனைவியுள்ளவரானால் : எத்தனை பேர்? அவர்களுடைய வயது:


15) முந்தைய தாரங்களினால் குழந்தைகள் இருந்தால் :

1. ஆண்கள்

2. பெண்கள்

16) ஜாதகம் உண்டா (இருந்தால் தனியாய்ச் சேர்க்கவும்) :

17) போட்டோ உண்டா? (இருந்தால் தனியாய்ச் சேர்க்கவும். போட்டோ ஒரு மாதிரியாயிருந்தால், கார்ட்டூன் சித்திரம் எழுதுவித்துச் சேர்க்கலாம்) :



18) எதிர்பார்க்கும் வரதட்சணை அல்லது கொடுக்கக் கூடிய கன்யாசுல்கம் :

19) எதிர்பார்க்கப்படும் சீர் வரிசைகள் :

20) தேவையான மணப்பெண்ணின் விவரம் :

(அதாவது கன்னியா, வயது வந்தவளா, பால்ய விதவையா, முது விதவையா, படிப்பு வேண்டுமா, சொத்து இருக்க வேண்டுமா, வயது - நிறம் முதலிய விவரங்கள். ஆனால், இந்த விவரங்களையெல்லாம் கம்பெனியின் உசிதத்துக்கு விட்டு விடுவதே நலம்).

மேற்கண்ட நிபந்தனைகளையும் விவரங்களையும் அநுசரித்துத் தாங்கள் தேர்ந்தெடுக்கும் பெண்மீதில் கண்டதும் காதல் கொள்வதாக என் ஹிருதயபூர்வமாயும் தெய்வசாட்சியாயும் பிரமாணம் செய்கிறேன்.

....

(கையொப்பம்)

நேயர்களே! மேற்கண்ட மணப்பெண் விண்ணப்பம் மிகவும் ஹாஸ்ய ரஸத்துடன் நன்றாய் அமைந்திருப்பதாகக் கருதுகிறீர்கள் அல்லவா? இந்த இடத்தில் என்னுடைய மனச்சாட்சி கொஞ்சம் எனக்குத் தொந்தரவு கொடுக்கிறது. "உனக்கு நியாயமாகப் பாத்தியதையில்லாத பாராட்டுதலை நீ அடையப் பார்க்கிறாயே? இது நியாயமாகுமா? காந்தி பிறந்த நாட்டில் நீயும் பிறந்திருக்கிறாயே?" என்று அது இடித்துக் காட்டுகிறது. எனவே, உண்மையை ஒப்புக் கொண்டு விடுகிறேன். மேற்படி விண்ணப்ப நமூனா நான் தயாரித்ததன்று. சென்னையில் ஸ்தாபிதமாகியிருக்கும் ஓர் அசல் கல்யாணக் கம்பெனியார் தயாரித்தது அது. நான் சும்மா அங்கோர் எழுத்தும் இங்கோர் வார்த்தையும் மாற்றியிருக்கிறேன்; அவ்வளவுதான். ஆகையால் உங்கள் பாராட்டுதலுக்கு நான் அருகனல்லன் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். ●

நன்றி : 'ஓ மாம்பழமே'

நம் முன்னோர்களாகிய மகான்கள் விக்கிரகங்களையே தெய்வம் என்று எண்ணி விடவில்லை. எங்கும் நிறைந்த கடவுளை, நெஞ்சத்தில் வீற்றிருக்கும் கடவுளை, நினைத்துத் துதிப்பதற்கு ஒரு சின்னமாகவே கோவில் விக்கிரகங்களைக் கொண்டார்கள். மனம் குவிந்து இறைவனை வழிபடுவதற்கு விக்கிரக ஆராதனையை ஒரு சாதனமாகவே ஏற்படுத்தியிருந்தார்கள். எனவே, இந்திய தேசத்தின் சரித்திரத்தில் விக்கிரகங்களுக்கு அவ்வப்போது பல ஆபத்துக்கள் நேர்ந்திருந்தபோதிலும் ஹிந்து மதத்துக்குத் தீங்கு ஒன்றும் நேர்ந்திடவில்லை.

வடக்கு இலங்கை போர்ச்சுக்கீசியரின் ஆட்சியில் இருந்தபோது ஹிந்து மதத்தின் தெய்வங்களுக்கு, அல்லது விக்கிரகங்களுக்கு, ஆபத்துக்கள் நேர்ந்தன! அதிர்ஷ்டவசமாக, யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள தமிழர்கள் தமது சமய தத்துவங்களை நன்கு உணர்ந்தவர்கள். ஆகவே, விக்கிரகங்கள் போய் விட்டனவே என்று அழுது கொண்டிருந்து விடவில்லை. விக்கிரகத்துக்குப் பதிலாக வேறு சின்னங்களை வைத்துக் கொண்டார்கள்.

யாழ்ப்பாணத்திலுள்ள நல்லூர் கந்தசாமி, கோவிலின் மூல ஸ்தானத்தில் முருகன் விக்கிரகம் இல்லை. அதற்குப் பதிலாக,


"சுற்றி நில்லாதே போ! பகையே! துள்ளி வருகுது வேல்!"

என்று அமரகவி சுப்பிரமணிய பாரதியார் பாடிய வெற்றி வேலாயுதத்தையே பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள்.

— கல்கி

இலங்கையில் ஒரு வாரம்/கல்கி 8.10.50

கச்சி மூதூர் அர்ச்சகர்கள் க்ஷேம நல ட்ரஸ்ட் (பதிவுபெற்றது)
ஸ்ரீ சங்கர மடம் : 1, சாலைத் தெரு, காஞ்சிபுரம் - 631 502
நிர்வாக அலுவலகம் : 10, இரண்டாவது மெயின் ரோடு, கோட்டூர்புரம்,
சென்னை – 600 085. (போன் நம்பர் : 411936 & 4917340)
e-mail :<prb@giasmd01. vsnl. net. in



வேண்டுகோள்

நம் நாட்டில் பெரும்பாலான மக்கள் இன்றியமையாத தெய்வ அருளை நாடி மன அமைதி பெற விழைவதால், கோவில்கள் சரிவர பராமரிக்கப்பட்டு பூஜைகள் செவ்வனே நடைபெற ஏற்பாடு செய்வதே தலைசிறந்த சமூகத் தொண்டு என்று **காஞ்சி மாமுனிவர் ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் கூறுவார்கள்.**

இந்த உன்னத நோக்குடன், பல்வேறு காரணங்களால் தற்சமயம் தமிழ் நாட்டில் நலிவுற்றிருக்கும் கிராமியக் கோவில்களில் வறுமை நிலையிலும் பூஜை செய்து கொண்டிருக்கும் தகுதி வாய்ந்த அர்ச்சகர்களை, ஆண்டு தோறும் வாய்மொழித் தேர்வுகளை நடத்தி, தேர்ந்து எடுத்து அவர்களுக்கு உதவி புரிவதற்காகவே, ஸ்ரீ காஞ்சி மஹாஸ்வாமிகள் மேற்படி ட்ரஸ்டை 1986-ம் ஆண்டு நிறுவினார். இதற்கான மூலதனத்தை பக்தர்களும், ஈடுபாடுடைய ஸ்தாபனங்களும், மனமுவந்து அளிக்கும் நன்கொடைகளால் மட்டுமே சேகரிக்க வேண்டும் என்பது பொறுப்புக் குழுவிற்கு மஹாஸ்வாமிகள் இட்ட கட்டளை. மாதம் 4000 ரூபாயும் அதற்கு மேலும் வருமானம் பெறும் ஒவ்வொரு அன்பரும் தமது ஒரு மாத வருமானத்தை தம் **வாழ்நாளில் ஒரு முறையாவது நன்கொடையாக** அளிக்க முன்வர வேண்டும் என்பது பேரருளாளரின் ஆக்ஞை. மற்றவர்கள் தங்களால் இயன்ற அளவு கொடுக்கலாம்.


1987-ம் ஆண்டில் 5 அர்ச்சகர்களுக்கு தலா மாதம் 100 ரூபாய் விதம் உதவத் தொடங்கிய இந்த ட்ரஸ்ட், தற்சமயம் ஸ்ரீ காஞ்சி மஹானின் அருளாசியுடன் சேர்ந்துள்ள வைப்புத் தொகையான ரூ.81 லட்சத்திலிருந்து கிடைக்கும் வட்டி வருமானத்தைக் கொண்டு மொத்தம் 253 அர்ச்சகர்களுக்கு (57 பட்டாச்சாரியர்கள், 99 சிவாச்சாரியர்கள், 97 பரம்பரை பூஜாரிகள்) நபர் ஒருவருக்கு மாதம் ரூ. 275/- விதம் உதவி வழங்கி வருகிறது. உதவித் தொகை பெறுவதற்கான தகுதியுடையவர்கள் ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டிருக்கிறார்கள். மாதாந்திர உதவித் தொகையையும் உயர்த்த வேண்டியிருக்கிறது. எனவே மூலதனத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் நன்கொடைகளை வரவேற்று, அவ்வப்போது வேண்டுகோள் விடுத்து வருகிறோம்.

நன்கொடைகளை "KACHCHI MOODOOR ARCHAKAS WELFARE TRUST" என்ற பெயரில் கிராஸ் செய்யப்பட்ட செக்/டிராஃப்ட் அல்லது மணியார்டர் மூலமாக மேற்படி நிர்வாக அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். காஞ்சிபுரம் ஸ்ரீமடத்திலும் இதற்கான நன்கொடைகள் பெற்றுக் கொள்ளப்படும். நன்கொடையாளர்களுக்கு வருமானவரி சட்டத்தின் 80ஜி பிரிவின் கீழ் 1998 மார்ச் முடிய வரிச்சலுகை உண்டு. வெளிநாடுகளிலிருந்தும் அன்பர்கள் நன்கொடை அனுப்புவதற்கு வசதியாக இந்த அறக்கட்டளை FCRAவின் கீழும் பதிவுசெய்யப் பட்டுள்ளது.

8 ஜனவரி 1998


ஜஸ்டிஸ் என். கிருஷ்ணசாமி ரெட்டி (Retd)
பொறுப்புக் குழுவின் சேர்மன்.

நடக்குமென்பார் நடக்கும்!



மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

புத்தாண்டு கொண்டாடின சந்தோஷத்தில இருக்கற உங்களுக்கு, குருவின் பலமும் சேர்ந்திருச்சுங்க. அப்புறம் என்ன! அந்தஸ்து, கௌவரம் எல்லாமே டக்குனு ஒசரும். நல்ல மனுஷங்களோட பழக்கம் ஏற்படும். அரசியல்வாதிங்களுக்கு எதிர்பார்த்த தொகுதியே கிடைக்கற சான்ஸ் இருக்கு. அறிவியல், இயந்திரத் துறை, எழுத்துத் துறைகள்ல இருக்கறவங்களும் வாழ்க்கைல ஒரு புதிய பரிமாணத்தைத் தொடலாம். மாணவர்களுக்கு இது ஹேப்பி வீக்! பொறந்த வீட்டுக்காரங்க யாராவது வர்றதால பெண்களும் சந்தோஷமா இருப்பாங்க.



ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோஹிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

முதல் ரெண்டு நாட்கள்ல காரியங்கள் நிதானமாத்தான் நடக்கும்னாலும் அப்புறம் பந்தயக் குதிரை மாதிரி பாய ஆரம்பிச்சிடும். பார்ட்டி கிட்டின்னு பிரண்ட்ஸுங்க வந்து சந்தோஷப்படுத்துவாங்க. அரசாங்க உத்தியோகஸ்தர்கள், தொழிலாளிகள் மற்றும் இயந்திரம் சம்பந்தமான தொழிலாளர்களுக்கெல்லாம் ஜோரான வாரம்தான்னாலும் அரசியல்வாதிகள் மாத்திரம் யோசிக்கச் செயல்படணும். ஷேர், ஸ்பெகுலேஷன்ல எல்லாம் வெற்றி கிடைக்கும்கிறதால, வாரக் கடைசில பணப்புழக்கமும் தாராளமாவே இருக்கும். பெண்கள் புடைவை, நகைன்னு வாங்குவாங்க. கொடுக்கல் வாங்கல்ல, உஷாரா இருங்க. சில நேரம் அலைச்சலும் இருக்கும், பார்த்துக்கங்க.




மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

பத்திரிகைக்காரங்க, எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் ஆகியோருக்கு முதல் மூணு நாட்கள் கஷ்டப்பட்டாலும் மத்த நாட்களெல்லாம் ராஜபாட்டையில நடக்கிற சுகம்தான். பயணத்தால சிலருக்கு லாபம். சினிமா, சங்கீதம், நாட்டியக்காரர்களுக்கு பாராட்டுகள் குவிந்து உற்சாகமளிக்கும். வியாபாரிகளுக்கும் ஏறுமுகமான வாரம்தான். தொழிலதிபர்களுக்குச் சில பிரச்னைகள் வரும்னாலும் சமயோசிதமாச் செயல்பட்டுச் சமாளிக்கலாம். ஷேர், ரேஸ் எல்லாம் இந்த வாரம் மறந்திடுங்க. வீட்டுக்காரிகிட்ட அநாவசியமா வாயக் குடுக்காதீங்க. வீண் சண்டைக்கு சான்ஸ் வந்திரும். கொடுக்கல் - வாங்கல் வேணாம். டூர் போனாலும் எச்சரிக்கையா இருங்க; எங்கியாலும் விழுந்து அடிகிடி படப் போகுது.



கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

உங்களோட ஆற்றல் வெளிப்படற வாரங்க இது. நிர்வாகத் திறமை கூடும். விஞ்ஞானம், மருத்துவம் மாதிரியான தொழில்காரங்களுக்கு வெற்றி வாய்ப்பு தெரியுது. அரசாங்கத்துல உங்க காரியமா ஃபைல் மூவ் ஆகாம இருந்தா இப்ப ஆயிடும். ஆசிரியர்கள், தொழிலதிபர்கள், பேச்சாளர்களுக்கும் பிரகாசமான வாரம். சிலருக்கு வெளியூர் போற சான்ஸ் இருக்கு. காங்கிரஸ்காரங்களுக்கு சோனியா காந்தியால ஒரு எதிர்பாராத திருப்பம் வந்த மாதிரி மத்த கட்சிக்காரங்களுக்கும் வர்ற சான்ஸ் இருக்கு. திருமதிகளுக்குத் திருவாளர்களின் பாராட்டு நிச்சயம். சினிமாத்துறை, பிசினஸ்ல இருக்கறவங்க எச்சரிக்கையா இருக்கணும். வீடு, நிலம் வாங்கற மாதிரியான புது முயற்சிகளை எல்லோருமே தள்ளிப் போடறது நல்லது.



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

துணிச்சலோடும் தன்னம்பிக்கையோடும் காரியத்தில இறங்கற - எதையும் தாங்கும் இதயம் படைத்த உங்களுக்கு இந்த வாரம் நல்லதெல்லாம் தேடி வரும். குறிப்பா ராணுவம், காவல், சட்டத்துறைல இருக்கறவங்களுக்குப் பிரகாசமான வாரம் இது. வியாபாரிகள், கமிஷன் ஏஜெண்டுகள் மாதிரியானவங்களும் முன்னேற்றமடைவாங்க. நண்பர்கள், உறவினர்கள் உதவுவாங்க. எழுத்துத் துறைல இருக்கறவங்களுக்குச் செழிப்பான வாரம்னாலும் செலவு ஜாஸ்தியா இருக்கும். அலைச்சலும் இருக்கும், சிலருக்குப் பொருள் நஷ்டம் கூட வரலாம். குறிப்பா புதிய சிநேகம், புதிய மனிதர்கள் விஷயத்துலயும் பிரயாணத்திலேயும் உஷாரா இருங்க.




கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

புத்திசாலித்தனம், வசீகரம் எல்லாம் உங்க கூடவே பிறந்த விஷயங்கறதால இந்த வாரம் பொருள் வரவு - எதிர்பாராத அதிர்ஷ்டம் என்று சிலர் ஜமாய்ப்பாங்க. கலைத்துறை மற்றும்

7.1.98 முதல் 13.1.98 வரை

சமுதாயப் பணியாளர்களுக்கு நல்லதே நடக்கும். சிலர் ஏதாவது நூதனமான பொருள் வாங்கலாம். பெண்கள் ஆசைப்பட்ட புடைவை நகையெல்லாம் இந்த வாரம் வாங்கற சான்ஸ் இருக்கு. குழந்தைங்க நல்ல மார்க் வாங்கி பெத்தவங்களை சந்தோஷப்படுத்துவாங்க. சிலருக்கு வெளியூர் டிரிப், உல்லாசப் பயணம் போற சான்ஸ் இருக்கு. சட்டம், ராணுவம், காவல்துறை அன்பர்களுக்குப் பாராட்டுகள் கிடைக்கும்.




துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*

எடுத்த காரியத்திலெல்லாம் நீங்கள் எதிர்பார்த்ததை விடவும் அதிகமாவே வெற்றி கிடைக்கும். நீங்கள் திட்டம் போட்ட படியே எல்லாம் நடக்கும். தொழிலதிபர்களுக்குப் புதுப் புதுத் திட்டங்கள் உருவாகும். அரசியல் வாதிகளுக்குப் புதிய கூட்டணி மாதிரி ஏதாவது புதுப் பாதைகள் தெரியலாம். அது நல்லதாவும் இருக்கும். குடும்பத்தில விசேஷ காரியங்கள் நடக்கும். நீங்கதான் வசீகரமாப் பேசறதில கில்லாடியாச்சே! அதனால எதிர்பார்த்த பணம் இந்த வாரம் வந்து சேரும். அதிக பக்தி கொண்டவர்கள் ஒரு புனித யாத்திரை போறதுக்கு வாய்ப்பு இருக்கு.



விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

எடுத்த காரியத்தில் வெற்றி தான் இந்த வாரம். குறிப்பா ராணுவம், காவல், சட்டம், மின்துறைக்காரங்களுக்கு யோக வாரம் இது. எதிரிங்க ஓடிப் போய் ஒளிஞ்சுக்குவாங்க. சிலருக்குப் பொருள் சேரும். சினிமா, சங்கீதங்காரங்களுக்கு நல்லதொரு திருப்பம் வரும். சிலருக்கு அண்ணன், தம்பி, அக்கா, தங்கைகளால செலவுகள் வரலாம். சிலருக்கு பெற்றோரை காசி - ராமேஸ்வரம்னு அனுப்பி வைக்கற செலவுகள் வரலாம். கொடுக்கல் வாங்கல் சுகமாயில்லை. பேச்சிலயும் கவனமா இல்லேன்னா மனஸ்தாபம் வரலாம்.



தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

பண விஷயம் தாராளமாவே இருக்குன்றதாலே குடும்பத்தில சந்தோஷம் தான். சங்கீதம், நாட்டியம் போன்ற கலைத் துறைக்காரர்களுக்கு மதிப்பும் பெருமையும் வரும். கூடவே தனலாபமும்! சமூகப் பணியாளர்கள், ஆசிரியர்கள், மருத்துவம் போன்ற வேலைகளில் இருக்கும் பெண்களுக்கு இந்த வாரம் ஓஹோ தான்! சிலர் டாக்டர் ஃபீஸாக் கொஞ்சம் ஒதுக்கிடறது நல்லது. சிலருக்கு வெளிநாடு போறதுக்கான சான்ஸோ இல்லேன்னா, வெளி நாட்டிலிருந்து சந்தோஷமான தகவல் வர்ற சான்ஸோ இருக்கு.

மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*



எடுத்த விஷயம் எதுவானாலும் ஜெயிச்சுடணும்னு செயல்படறவங்க நீங்க. விவசாயிகள், தொழிலாளர்களுக்கு நன்மையான வாரம். கலைத்துறையினருக்கு வாரப் பின்பகுதி தான் நல்ல டயமா இருக்கும். பொதுவாவே பணம் புழக்கம் இருக்கும்னாலும் தட்டுப்பாடும் வரலாம். ஆரோக்கிய விஷயத்தில அசிரத்தையா இருந்துடாதீங்க. உல்லாசப் பயணம் போற இடத்துல நீச்சல், பைக் சவாரி விஷயங்கள்ல உஷாரா இருங்க. கணவன் - மனைவி உறவிலும் அப்பப்போ சிடுசிடுப்பு இருக்கும். வீடு, நிலம் மாதிரியான விஷயங்கள் இந்த வாரம் வேணவே வேணாம்.

கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*




கடக ராசிக்காரரான வாஜ்பாயிக்கு ஏதோ ஓர் எதிர்பாராத திருப்பம் இந்த வாரம் இருக்குதாம்!

வியாபாரிகள், எழுத்து. கணிதம், ஆராய்ச்சியாளர்களுக்குக்கெல்லாம் ஜோரான வாரம் இதுன்னா, அரசியல்வாதிகள், அரசுப் பணியாளர்களுக்கு அதிர்ஷ்டமான வாரம் இது. ஏஜெண்டுகள், காண்ட்ராக்டர்களுக்கு லாபம் உறுதி. தொழிலதிபர்களுக்குப் பிரச்னைகள் வரும்னாலும் தீர்ந்தும் போயிடும். வெளிநாடுகள்ல உங்க மகனோ, மகளோ இருந்தா இந்த வாரம் வந்து சந்தோஷப்படுத்துவாங்க. சிலருக்குப் புதிய பொறுப்புகளோ, கூடுதல் பொறுப்புகளோ வரும். இல்லேன்னா, வெளியூர்ப் பிரயாணமாவது போக வேண்டியிருக்கும்.



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*



குடும்பத்தில் சுப காரியங்கள் நடப்பதற்கான சூழ்நிலைகள் ஏற்படும். ஸ்பெகுலேஷன், ஷேர்லயும் நல்ல லாபத்தையே எதிர்பார்க்கலாம். மூத்த சகோதரர் இருப்பவர்களுக்கு அவர்களால் நன்மை ஏற்படும். கலைத்துறையினரும் அரசியல் வாதிகளும் அரசுப் பணியாளர்களும் நன்மையே அடைவார்கள். பெண்களுக்கு நினைச்சது நடக்கும் வாரம் இதுதான். பிரயாணத்தால சிலருக்கு நல்லது நடக்கும். வெளிநாட்டு தொடர்புகள் நன்மையே தரும். இருந்தாலும் வாரக் கடைசில எச்சரிக்கையா இருங்க. தேக ஆரோக்கியம் பாதிக்கப்படலாம்.

இன்று வாழலாம்

சாரமில்லா சென் சேஷன்கள்; அலுப்பூட்டிய மாலைத் தினசரி. விளம்பரங்களை மட்டும் விருப்பமுடன் மேய்ந்து விட்டு நிமிர்ந்தான் ஜீவா. பிரம்புப் பின்னல் சேரில் மேலும் வசதியாகச் சாய்ந்து கொண்டான். சுற்றிலும் சூழ் நிலை வெகு ரம்யம். ஆவலுடன் அவன் கண்கள் விழுங்கின.

மேற்கில் தலை சாயும் சூரியன். தோட்டம் அனுமதித்த இடங்களில் பொன் தகதகப்பு. நிர்மலமான நீல வானத்தில் சற்றைக்கொருதரம் பல விதப் பறவை வரிசை. கூடு திரும்பும் அவற்றிடம் இருந்த கட்டுப்பாடு அவனைக் கவர்ந்தது.

தொலைவில் தோட்டத்தின் ஊடாக கௌதம் விளையாடுவதைப் பாசமுடன் பார்த்தான் ஜீவா. சளைக்காமல் மகனுக்கு ஈடு கொடுத்தது சீஸர். கட்டவிழ்ந்த கன்றுக்குட்டி மாதிரித் தாவும் மூன்று வருட அல்சேஷனிடம் என்ன வளர்ச்சி. நேசத்தையும் நெருக்கத்தையும் உறுதிப் படுத்திக் கொள்வதுபோல சீஸர் அவ்வப்போது இவனிடம் வந்து குழைந்து முகர்ந்து விட்டுச் சென்றது.

பச்சென்ற புல்வெளி. பலவகை பூச்செடிகள்; மரங்கள். லிண்ட்டலிலிருந்து ஊஞ்சல் கட்டி, குமிழ் விளக்குகள் சீலிங்கினுள் மறைந்து வைத்து, சிப்ஸ் தெளித்து, உறுத்தாத சாயம் சேர்த்து பங்களாவின் முகப்பு ஜோராக இருந்தது. உள்ளேயும் அப்படித்தான். திட்டமிட்டு ரசனையுடன் அமைத்திருந்த எல்லாவற்றிலும் மனைவி ஷீலாவின் கைவண்ணமும் சேர்ந்திருந்தது.

எழுந்து நின்று கை உயர்த்திச் சோம்பல் முறித்தான் ஜீவா.

"ஜீவா பார்த்து! மேகம் தொட்டு விடப் போகிறீர்கள்!"

சிரித்தபடி வந்த ஷீலாவைப் பார்த்ததும் பிரகாசமானான் ஜீவா. டீ கோப்பையை வாங்கிக் கொண்டான்.

"ஆறு அடி ஒரு உயரமா என்ன..."

"உங்கள் உள்ளத்தையும் சேர்த்து, கணக்கிட முடியாத உயரம்!"

"ஐஸ் போதும் ஷீலா! டீ சூடாகத் தான் இருக்கட்டுமே!"

எதிரில் அமர்ந்த அன்பு மனைவியைப் பெருமிதமுடன் பார்த்தான். பல வருடங்கள் முன் முதல்முறையாகப் பார்த்தது போலவே சற்றும் மாறாத இளமை; பின்னல் அழகு ஷீலாவுக்கு மாநிறம் தான். ஆனாலும் கண்டி இழுக்கும் களையான முகம். எப்போதும் சிரிக்கும் சிறிய உதடுகள். முறுவலில், குழி விழுந்து ஒத்துழைக்கும் பட்டுக் கன்னங்கள். நேர்த்தியான நாசி. பிரேமையுடன் அவனையே உபாசித்திருந்த ஷீலாவின் கண்களில் வழிந்த அந்தக் கனிவில், காதலில் மெய் மறந்தான்.

"புதுசாக என்ன பார்க்கிறீர்கள் சார்? இருவரும் கால் கிழம்! மறக்காதீர்கள் தோழரே!"

"எனக்கு 36. உனக்கு 30. ப்பூ! இதெல்லாம் ஒரு வயதா! இன்ஃபாக்ட், முப்பதுகளில்தான் நிதானமாக – "

பொய்க் கோபமுடன் ஷீலா இடைமறித்து, "என்ன... என்ன?"



1

பத்மா ரவிசங்கர்

வா!

"ஹிஹி... நிதானமாக வாழ்க்கையை ரசிக்க முடியும் என்று சொல்ல வந்தேன்!" சிரித்தார்கள் கலகலவென்று.

இம்மாதிரியானச் சொர்க்க வாழ்க்கையை ஜீவா எதிர்பார்த்திருப்பானா... எட்டு வருடங்கள் முன்பு வரை, கத்தியும் துப்பாக்கியுமாக ரத்தம் தோய்ந்த கரங்களுமாக சதா சாவை எதிர் பார்த்து... வேண்டாம் ஜீவா! கடந்தவை கடந்தவையே. நினைக்காதே, என்றும்... என்றும்!

இது வேறு ஜீவா. வேறு உலகம். இப்போது அவன் புதிய மனிதன். சராசரிச் சந்தோஷ வாழ்க்கை வாழ்பவன் - ஏனையோரைப் போலவே! அவன் முக இறுக்கம் சட்டென்று தளர்ந்தது.

"என்னாயிற்று ஜீவா டார்லிங்?" பதற்றமுடன் அருகே வந்தாள் ஷீலா.

''ம்ம். ஒன்றுமில்லை. பழைய நினைவுகள்டா." புன்னகைத்தான். அவளின் மென்மையான கரத்தை வாங்கிப் பொத்திக் கொண்டான்.

"அன்று உன்னைப் பார்க்காமல் இருந்திருந்தால் இன்று என் வாழ்க்கையே அர்த்தமற்றதாக இருந்திருக்கும். ஏதோ இருந்திருப்பேன். ஜஸ்ட் வெஜிடபிள் லைஃப்."


"எனக்கும்தான்! இனி, ஒருநாள் கூட உங்களைப் பார்க்காமல் வாழ்க்கை இல்லை."

"எனக்கும்தான்!" என்றவன் குனிந்து, இன்னமும் தன்னிடம் சிறைப்பட்டிருந்த மனைவியின் மென் கரத்தில் காதல் மிக முத்தமிட்டான். ஷீலா நெகிழ்ந்தாள்.

"டாடி!" என்று உற்சாகமாகக் கூவி கை காண்பித்தான் கௌதம். பதிலுக்குக் கை அசைத்தனர். செல்ல மகன்.

இன்னும் நான்கு நாட்களில் கௌதமுக்கு ஆறாம் பிறந்த நாள். மிக விமரிசையாகக் கொண்டாடத் திட்டமிட்டிருந்தனர். மேலும் அது பற்றி இருவரும் பேசத் தொடங்கினர்.

ஹலோ. அவசரமாக உதவுங்கள். சூழும் ஊழித் தீ. தீயணைக்கும் எஞ்ஜின். எச்சரிக்கை மணி ஒலித்தவாறு. எங்கே விரைகிறது? இங்கே.. இங்கே! திடுக்கென்று விழித்துக் கொண்டான்




மருந்து பவுடர்களால்

சூரியமூர்த்தி கொஞ்சம் வித்தியாசமான ஓவியர். இதுவரை 46 தடவை விருதுகள் பெற்றிருக்கிறார். 17 தடவை ஒரு நபர் ஓவியக் கண்காட்சிகள் நடத்தியிருக்கிறார். இருபது முறை அயல்நாடுகளுக்குச் சென்று, கண்காட்சிகள் நடத்தியுள்ளார். வசிப்பது, நாகை மாவட்டம் பூம்புகார் அருகில் உள்ள நெய்தவாசல் கிராமத்தில்.

அண்மையில் சென்னையில் நடைபெற்ற இவருடைய ஓவியக் கண்காட்சியில், நடுநாயகமாக இருந்தது கம்பீரமான யானை ஓவியம். தும்பிக்கையில் உள்ள நுணுக்கமான மடிப்புகள் கூட, இவரது கைவண்ணத்தில் வெகு அற்புதமாக வெளிப்பட்டன.

''யானை எனக்கு மிக விருப்பமான சப்ஜெக்ட். கடந்த பதினைந்து வருடங்களாக, வருடந்தோறும், ஒரு யானை ஓவியம் தீட்டுவது என் வழக்கம். இரண்டு வருடங்களுக்கு முன், இருபது அடிக்குப் பத்து அடி அளவில் பிரம்மாண்டமான யானையை வரைந்தேன். அது இப்போது வட இந்தியாவில் ஒரு மியூஸியத்தில் இருக்கிறது'' என்கிறார் சூரியமூர்த்தி.

இவரிடம் இன்னொரு வித்தியாசமான விஷயமும் இருக்கிறது. ஓவியங்கள் வரைய வழக்கமான வண்ணக் கலவைகள் தவிர, சித்த



• சூரியமூர்த்தி

ஜீவா. கனவா? இல்லை. மணி ஒலிக்கிறதே.

டெலிபோன்!

இந்த அகாலத்தில் யாராயிருக்கும்? ஆழ்ந்து உறங்கும் மனைவி, மகன் எழுந்து விடக் கூடாது. வேகமாக எழுந்து சென்று எடுத்தான்.

''ஹலோ!''

''ஜீவா?''

''எஸ்!''

''உன் மனைவி-மகனோட ராஜ வாழ்க்கை போல...!''

''அர்த்த ராத்திரியில் என்ன அபத்த விசாரிப்பு இது!''

''ப்சு.ப்சு. இருவரும் நல்ல ஆரோக்யமுடன் நீண்ட ஆயுளுடன் இருக்கட்டும்...!''

மிரட்டல் புரிந்து, ஜீவா அமைதியாக, ''யார் நீ? உனக்கு என்ன வேண்டும்?''

பதிலில்லை. சட். வைத்து விட்டான். யோசனையில், அவன் புருவம் சுருங்கியது. யாராயிருக்கும்? பழக்கமில்லாதக் குரல். மிரட்டல் எதற்காக? தெரிந்த வரையில், பகைமை பாராட்ட எவருமில்லையே. அதுவும், அமைதியான பிரஜையான புதிய ஜீவாவிடம்... தற்சமயம் காத்திருப்பது தவிர வேறு வழியில்லை.

ராஜா அண்ணாமலைபுரத்தில் அவன் அலுவலகம். 'பாரத் ஆட்ஸ்' பளீர் பெயர்ப்பலகையைச் சலிக்காத லயிப்புடன் பார்த்தவாறு காரிலிருந்து இறங்கினான் ஜீவா.

வழியில், ஊழியர்களின் வணக்கங்கள். ஆமோதித்தான். புன்னகைத்தான். கையசைத்தான். சில அவசர விசாரிப்புக்கள். அறைக்குள் நுழைந்தான். மேஜை டிராயருக்குள் ஷீலா - கௌதம் புகைப்படம். இமைக்காமல் சில வினாடிகள் செலவானது.

எழுந்து, ஏசியை மட்டுப்படுத்தினான். சிறு கண்ணாடி வழியே பார்த்தான். தேனீக்களாய்ப் பணியாளர்கள். பெருமையுடன் மீசையைத் தடவிக் கொண்டான். கடும் உழைப்பில், அனேக தாதாக்களை ஓரம் கட்ட வைத்து விட்டு -

தற்போது சென்னையில் முதல் தரத்தில், முதலாமிடத்தில் ஜீவாவின் 'பாரத் ஆட்ஸ்' விளம்பர ஏஜன்சி.

'மிகவும் கொடுத்து வைத்திருக்கிறாய் ஜீவா!' என்று நினைத்துக் கொண்டான். அடையாறில் பங்களா. அன்பு மனைவி; மகன். இங்கே கொழிக்கும் ஏஜன்சி. அமைதியாகச் சீராகச் செல்லும் வாழ்க்கை. போதும். இனி, வேறு ஆசைகளே இல்லை. சாசுவதமாக -

மதியம் போனில் ஷீலா.

''என்னடா?'' என்றான் வாஞ்சையுடன்.

மயக்கும் ஓவியங்கள்!

மருத்துவத்தையும் கையாளுகிறார். ஆமாம்! சித்த மருத்துவத்தில் பயன்படுத்துகிற மருந்துகளுக்கு குறிப்பிட்ட நிறம் உண்டு. அவற்றைப் பயன்படுத்தி, ஓவியங்கள் தீட்டுகிறார் சூரியமூர்த்தி.

இதற்கு ஒரு சுவையான பின்னணி உண்டு. சூரியமூர்த்தியின் அப்பா ஒரு சித்த மருத்துவர். வீட்டு அலமாரியில் மருந்து பாட்டில்களாய் அடுக்கி வைத்தி ருப்பாராம். சில சமயங்களில், கைதவறி, கீழே விழுந்து பாட்டில்கள் உடைந்து போகும். அந்தச் சமயங்களில், மருந்து பவுடரைத் தூக்கி எறியாமல் சேகரித்து வைத்து, ஓவியங்கள் தீட்டுவாராம் சூரியமூர்த்தி.

மற்ற ஓவியங்களுக்கும், சித்த மருந்து கொண்டு தீட்டப்பட்ட ஓவியங்களுக்கும் பார்க்கிற போது, எந்த வித்தியாசமும் தெரியவில்லை. சொன்னால்தான் அடையாளம் தெரிகிறது. ●

— கௌதம்

ஷீலா பதற்றமுடன், "நம் வீட்டை ஒருவன் கண்காணிப்பதாகப் படுகிறது ஜீவா!"

"வ்வாட்?"

"நெடு நேரமாக நம் வீட்டைப் பார்த்தவாறு தெருவில் அலைந்து கொண்டிருக்கிறான்!"

"அவன் எப்படி இருக்கிறான் ஷீலா?"

"இளைஞன். ப்ரெஞ்ச்க கட் குறுந்தாடி வைத்திருக்கிறான்!"

"ஆல்ரைட். பதற்றப்படாதே ஷீலா. சிசரை அவிழ்த்து விடு. எவருக்காகவும் கதவைத் திறக்காதே. நான் வந்து பார்த்துக் கொள்கிறேன். மை டார்லிங்!"

ஷீலாவின் அனாவசியமான பயப் பிரமையா? நேற்று வந்த மிரட்டல் போனிற்கும், இன்று உலவும் குறுந்தாடிக்கும் தொடர்பு ஏதும் உள்ளதா? முகம் காட்டாமல் என்ன விளையாட்டு இது! இன்னொரு டிராயரைத் திறந்தான்.

அதனுள், அவன் கைத் துப்பாக்கி பளபளப்பாக இருந்தது. ஜீவா யார், அவன் பராக்கிரமம் என்ன என்று காட்ட வேண்டிய தருணம் வந்து விட்டதா?

துப்பாக்கியை ஆசையுடன் தொடச் சென்ற கையை விலுக்கென்று இழுத்துக் கொண்டான்.

வேண்டாம்! அவன் தயாரில்லை. எல்லாவற்றையும் விட்டாயிற்று. வன்முறையின் விலை அவனுக்கு நன்றாகவே தெரியும். கடந்த பல வருடங்களாகத் திளைத்து வந்த அன்பின், அமைதியின் ருசியில் சட்டென்று அடங்கினான்.

மாலை வீடு திரும்பினான். குறுந்தாடி இளைஞனைக் காணோம். மூன்று மணி அளவில் அவன் 'மறைந்து' விட்டதாக ஷீலா தெரிவித்தாள். ஷாப்பிங் செய்யக் கிளம்பினார்கள்.

தி.நகர். நேர்மையான அரசியல்வாதி காணக் கிடைப்பதைவிட அரிதான பார்க்கிங் ஸ்பேஸிற்குப் பெரும் அல்லாட்டமாக இருந்தது. காத்திருந்து வென்றார்கள்.

எவரோ பின் தொடரும் உணர்வு. அவனுக்குப் 'பழகிய' கண்கள்தான். இருப்பினும், மக்கள் வெள்ளத்தில் எப்படி... நெரிசலில், தெரியாமல் தவித்தான் ஜீவா.

வகை, வகையாகப் பார்த்துப் பார்த்துக் கௌதமுக்கு டிரெஸ் எடுத்தார்கள். போனஸாகச் சில பொம்மைகள். மகன் மிக விரும்பி வாங்கியது: பிளாஸ்டிக் எந்திரத் துப்பாக்கி! 'அப்பா ஜீன்!' என்று ஷீலா அவனிடம் முணுமுணுத்தாள்.

ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு, உல்லாசமாக நடந்து காருக்குத் திரும்பினார்கள். சாலையில் காத்திருக்கச் சொல்லி விட்டு, காரை அணுகினான்.

கார் பக்கவாட்டுக் கண்ணாடியில், ஒரு ஸ்டிக்கர் ஒட்டியிருந்தது! குனிந்து பார்த்துப் படித்தான்: "ஜீவா! உன் உயிர் என் கையில்!" ஆங்கிலத்தில் டைப் செய்திருந்தது. நிமிர்ந்தான்.

ஷீலா, மகனுடன் ஏதோ உற்சாகமாகச் சளசளத்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு இவ் விஷயம் ஏதும் தெரியக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தான் ஜீவா. மனைவியின் சந்தோஷமும் நிம்மதியும் சற்றும் கெடக் கூடாது. ஸ்டிக்கரை அவசரமாகப் பிய்த்துக் கிழித்தெறிந்தான்.

ஆபத்தான, ஏதோ ஒரு விளையாட்டு துவங்கி விட்டதாக உணர்ந்தான். ஆபத்து அவனுக்குப் புதிதில்லை. ஏனெனில் எட்டு வருடங்கள் முன்பு வரை, ஜீவா –

ஒரு தேர்ந்த, இந்திய உளவாளி!

(தொடரும்)



• தினகரும் முகம்காட்ட மறுத்த அவர் காதலியும்

காந்தி மண்டபத்தில் ஒரு மேட்னி ஷோ!

காந்திக்கும் காதலுக்கும் ரொம்ப தூரம்... ஆனால், காந்தி மண்டபம் காதலர்களின் சொர்க்க பூமியாக இருக்கிறது! மரத்துக்கொரு காதல் ஜோடியும் மடிக்கொரு தலையுமாக சகலரும் காதல் தேசத்தில் கனவு ரத யாத்திரை போய்க் கொண்டிருந் தார்கள்.

இப்படித் துணிச்சலாகப் பொது இடத்தில் காதலிப்பவர்கள், அதே துணிச்சலுடன் தம் காதல் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வார்களா? என்று தெரிந்து கொள்ளாவிட்டால் தலை வெடித்து விடும் போலிருந்ததால் இட்டே போய் சில ஜோடிகளிடம் பேச்சுக் கொடுக்க முற்பட்டோம்!

நாம் சந்தித்த முதல் காதல் தலைவர் களில். தலைவி மேரி.

"என்னது? காதல் அனுபவங்களா? வெள்ளாடறீங்களா?" என்று தலைவர் முதலில் முறைத்தாலும் பிறகு மனமுவந்து நாலுவரி பேசினார்! "எங்க தெருவுலதான் இவங்க வீடும் இருக்குது. சின்ன வயசுலேருந்தே தெரியும்! மேலும் என் சொந்த அத்தை மகள்!"

"உங்க காதல், வீட்டுக்குத் தெரியுமா?"

"பின்னே? தெரியாம இருக்குமா?"

அட, ஓர்க் அவுட் ஆன காதல்! என்று மகிழ்ந்து, "ஒரு போட்டோ எடுத்துக்கலாங்களா?"

"இதெல்லாம் எங்கிட்ட வேணாம், சொல்லிட்டேன்!"

ஹீரோ, வில்லனாகிவிடும் அபாயமிருந்ததால் அடுத்த மரத்துக்குத் தாவினோம்.

"**எ**ன்னது? காதல் அனுபவமா?'' கடித்துவிடுவார் போலிருந்தது. இது காதலே அல்ல.... வாயை விட்டது நம் தவறு. புத்தி போட்டுக் கொண்டு அடுத்த மரத்தை நோக்கி நடையைக் கட்டினோம்.

"நாங்க ஏழைக் காதலர்கள். இப்பத்தான் புதுசா ஆரம்பிச்சிருக்கோம். பேட்டியெல்லாம் தர முடியாது. வேற ஆளைப் பாருங்க!" என்று ஹீரோ உக்கிரமாக மறுத்துக் கொண்டிருக்க, ஹீரோயின் மெய்



வருத்தம் பாராமல், பசி நோக்காமல் செல்லச் சில்மிஷங் களில் ஈடுபட்டிருந்தார்.

அதுசரி, காதலில் என்ன ஏழைக் காதல்? கேட்க நினைத்துக் கேட்கவில்லை. கேட்டால் பெண்டு வாங்கி விடுவார் என்று தோன்றியது. தோற்றம் அப்படி.

பாஸ்கரன், விஜயலட்சுமியை மும்முரமாகக் காதலித்துக் கொண்டிருந்தபோது நாம்



• காந்தி மண்டபம்

கரடியாக நடுவில் புகுந்தோம்.

பாஸ்கரன்தான் தம் தெய்வீகக் காதலை முதல் முதலாக வெளிப்படுத்தினாராம். வி. லட்சுமி நாணத்துடன் ஒப்புக் கொண்டதால் காதல், காந்தி மண்டபம் வரை ரூட் போட்டிருக்கிறது.

"எங்கனா ஓர்க் பண்றீங்களா?"

"இல்லைங்க. இனிமேதான் தேடணும்."

"நல்லா தேடுங்க. ஒரு போட்டோ எடுத்துக்கலாமா?"

"போனா போவுதுன்னு பேச்சுக் கொடுத்தா கெட்ட வார்த்தையெல்லாம் பேசறீங்களே?"

ஒரு வழியாக விடை பெற்று பின்புறம் போனதில், அற்புதமான, காணக்கிடைக்காத ஒரு காட்சி. ஆண், பெண் இருவருக்கும் சுமார் 45 வயது இருக்கும். இருவருக்கும் நடுவே ஒரு டிபன்பாக்ஸ். அம்மா அதிலிருந்து கவளம் கவளமாக ஊட்ட, ஐயா கிரங்கிப்போய் உண்டு களித்துக் கொண்டிருந்தார். கணவன் மனைவி போலும்! வீட்டில் என்ன இடைஞ்சலோ என்று எண்ணி, தொந்தரவு செய்ய மனம் வராமல் மேலே நகர்ந்தோம். இக்கட்டுரையின் கடைசி வரிக்கு ஓர் அற்புதத் திருப்பத்தை இவர்கள்தான் தரப் போகிறார்கள் என்று அப்போது தெரியாது!

சகதியாகி இருந்த மண்டபத்தின் பின்புறம் புல்வெளியைக் கஷ்டப்பட்டுத் தாண்டி, புங்க மரத்தடியில் குடியிருந்த ஒரு ஜோடியை அணுகினோம். காதலர் தினசுருக்குக் காதலிக்கும் வயசுதான். காதலி? பால் மணம் மாறாத பள்ளி மாணவி! சாட்சி, அந்த யூனிஃபார்ம்!

"ஏனுங்க, ஸ்கூல் பொண்ணை லவ் பண்ணுறீங்களே! காதல்னா அதுக்கு என்னன்னு தெரியுமா? அதும் வாழ்க்கையைக் கெடுத்துக்கப் போவுதேன்னு யோசிக்கப் பார்த்தீங்களா?"

"அட, விடுங்க சார்! அந்தக் காலத்துல 10, 12 வயசுல கல்யாணமே பண்ணி இருக்காங்க. நீங்க என்னடான்னா... ஒருத்தருக்கு ஒருத்தர் பிடிச்சிருந்தது. லவ் பண்றோம். என்ன ஒண்ணு... இவ படிப்பு கெட்டுப் போவுது. ஒரு வழியா படிப்பை முடிச்சிட்டான்னா கல்யாணம்தான்."

காந்தி மண்டப மரங்கள் அடியில் எப்போதும் ஹவுஸ் புல் என்றால், மண்டபத்தின் துவாரமுள்ள பக்கச் சுவர்களை ஒட்டிய குட்டித் திண்ணைகளும் ஹவுஸ் புல்தான்.

இந்தத் திண்ணை ஆக்ரமிப்பாளர்கள் காதலர்கள் இல்லை. காதலர்களின் லீலையைக் கண்டு களிப்பதற்கென்றே வரும் பார்வையாளர்கள்! வாட்ச்மேன், பட்டாணி கொறிப்பதைத் தவிர வேறு காரியம் பார்ப்பதில்லையாதலால் மேட்னி ஷோவுக்கு இடையூறே இல்லை!

திரும்புகையில் பஸ் ஸ்டாப்பில், நாலைந்து பேரா முன் நாம் சந்தித்த 45 வயது ஜோடி மறுபடி கண்ணில் பட்டது! தனித் தனியாக எதிரெதிர் பிளாட்பாரங்களில் அவரவர் ரூட் பஸ்ஸுக்குக் காத்திருந்த போஸில்! கண்ணில், சாலை தாண்டிய சங்கேத பாஷை! ●

— யுகாந்தன்

படம் : ஸ்ரீஹரி

அழகிகளுள் அழகி யார்...?

● என். தாமோதரன்,
சேலம் – 6.

? 'கேசரிக்கெல்லாம் பதில் சொல்லும் அளவுக்கு அவர் தகுதியானவர் அல்ல...' என்று ஜெ. கூறியிருக்கிறாரே...?

! ஹூம்! வளர்ப்பு மகன் கல்யாணத்துக்கு கேசரி ஓட்டமாக ஓடி வந்து, பரிசு தந்து, விருந்து வெட்டித் திரும்பியபோது இப்படியெல்லாம் நடக்கும் என்று நினைத்திருப்பாரா...? ஐயையோ, பாவம்!

● இ.சுபாகரன், சென்னை – 33.

? ஆடுகளம் சரியில்லாததால் ஒரு சர்வதேச ஒருநாள் போட்டி கைவிடப்பட்டது என்பது இந்தியாவுக்கு அவமானம் தானே...?

! சாமானிய அவமானம் அல்ல; ஆட்டத்தில் அடைகிற தோல்வியை விட கேவலமான தலைகுனிவு!

● கே. ஆர். உதயகுமார்,
சென்னை – 1.

? ஆன்மீகத்தில் நாட்டமுள்ள இளையராஜா கடவுள் இல்லை என்ற கருத்தை வலியுறுத்தும் 'கடவுள்' படத்திற்கு இசையமைத்துள்ளது குறித்து...?

! "கடவுளை நான் நம்புகிறவனாக இருந்தாலும், அதை மறுத்துக் கருத்துச் சொல்லுகிற உரிமை டைரக்டருக்கு உண்டு. அந்த வகையில் அவர் சொல்லியிருக்கிறார்!" என்று இளையராஜா பதிலும் சொல்லியிருக்கிறாரே!

● கே. எம். சுப்பிரமணியன்,
பூனாம்பாளையம் தெற்கு.

? ஐஸ்வர்யா ராய், சுஷ்மிதா, டயானா – இந்த மூன்று உலக அழகிகளில் யார் ரொம்ப அழகு...?

! இன்னும் பத்தாண்டுகள் கழித்து இவர்களில் யாருடைய செயல்கள் மக்களால் நினைவுகூர்ந்து போற்றப்படுகிறதோ அவர் தான் ரொம்ப அழகு!



• ...பத்தாண்டுகள்...



• இன்னும்...



• ...கழித்து...

● புத்தனாம்பட்டி சி. மணி, உறையூர்.

? 'வாஜ்பாய் மீது எனக்கு நல்ல அபிமானம் உண்டு...' என்கிறாரே லல்லு...?

! தேர்தல் கூட்டு காங்கிரஸுடன் தான் என்றாலும் நாளை பிரதமராகக்கூடிய ஒருவரை தட்டிக் கொடுத்து வைத்தால் வழக்கு விஷயங்களில் பிரச்னை உண்டாகாமலிருக்கும் என்ற நப்பாசைதான்!

● எம். பிரபு, குமராட்சி.

? அரசியல்வாதிகளிடம் கேட்கக் கூடாதது எது...?

! சொத்துக் கணக்கு!



• விரைந்து வீண்



• கடவுள் இசை!



• 'சத்யஜூரி'!



• 'ஜெ'வை அறிந்தவர்!



• ஞானியும் பாவியும்!



• இடிக்கிறதே!



• அப்போதைக் கிப்போதே....

● எம். குணசேகரன், வேலாயுதம்பாளையம்.

? 'எங்கள் நோக்கம் வெற்றியே; கொள்கையெல்லாம் பார்ப்பது இல்லை...' என்று டாக்டர் ராம்தாஸ் கூறுகிறாரே?

! அது மட்டுமல்ல... 'போட்ட மூலதனத்துக்கு ஏற்ப லாபம் கிடைப்பதுபோல், அ.தி.மு.க. கூட்டணியில் எங்களுக்கு நிச்சயம் பங்கு கிடைக்கும்' என்றும் கூறியுள்ளார். 'சத்யஜூரி' பட்டம் வழங்கலாம்!

● தேனி முருகேசன், தேனி.

? வாழப்பாடி தனிக்கட்சித் தொடங்கி அ.தி.மு.க.வுடன் கூட்டுச் சேர்ந்திருப்பது குறித்து...?

! மனத்தளவில் வாழப்பாடி எப்போதுமே அ.தி.மு.க. காரர்தான், என்றாலும் அவர் இல்லாடி! அ.தி.மு.க.விலேயே சேர்ந்து விட்டால் சரியான மரியாதை கிடைக்குமா...? தனிக்கட்சியாக இருந்தால்தானே 'தலைவர்' என்கிற சம அந்தஸ்துடன் பேச முடியும்! ஜெ பற்றி அவருக்குத் தெரியாதா என்ன...?

● என். சண்முகம், திருவண்ணாமலை.

? ஜெ ஒரு அனுபவம் வாய்ந்த தலைவர் என்று சு. சுவாமி கூறியிருப்பது பற்றி...?

! எதில் என்பதையும் தெளிவாகச் சொல்லியிருக்க வேண்டாமோ...?

● பொன்னிவளவன், கோனாபட்டு. ❑

? இந்து அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள கோயில் சொத்துக்களையும் வக்ஃப் வாரியச் சொத்துக்களையும் ஒரே சட்டத்தின் மூலம் பராமரிக்க மறுப்பது ஏன்...?

! ஹிந்து கோயில்களுக்கு சொத்து - பந்து அதிகம் என்று காரணம் சொல்லப்படுகிறது. Uniform Civil Code போல, சமச்சீரான நிர்வாக விதிகள் அறிமுகப்படுத்துவதும் அரசு வெளியேறி, பக்தர்களிடத்தில் நிர்வாகத்தை விடுவதுமே நல்லது.

● ஆர். மார்டின், திருமானூர்.

? மம்தா பானர்ஜி எனக்கு மகள் போன்றவர் என்கிறாரே கேசரி...?

! அதெல்லாம் சோனியா களத்தில் குதிப்பதற்கு முன்பு. இனிமேல் கதை வேறங்க...

● சூர்யநிலா, சேலம்.

? சமீபத்தில் தங்களை அறியாமல் சிரித்த சம்பவம்?

! ஜனா கிருஷ்ணமூர்த்தியிடம் பி.ஜே.பி. - அ.தி.மு.க. கூட்டு பற்றி நிருபர்கள் நோண்ட, Every saint has a past and every sinner has a future என்று பதில் சொன்னாராம். உடனே நிருபர்கள், அப்படியானால் பி.ஜே.பி. ஞானியா அல்லது பாவியா...? என்று கேட்டிருக்கிறார்கள். சற்று யோசித்து விட்டு, "பி.ஜே.பி. ஓர் அரசியல் கட்சி" என்று சமாளித்திருக்கிறார் ஜனா! இதைப் படித்து விட்டு நான் சிரித்த சிரிப்பில், 'என்ன என்ன?' என்று கேட்டு நாலு பேர் சூழ்ந்து கொண்டார்கள்!

● வசந்தாகாந்த், கருப்பம்புலம்.

? போயும் போயும் ரங்கராஜன் குமாரமங்கலம் பி.ஜே.பியில் சேர்ந்து விட்டாரே...?

! இவரைப் போலவே இன்னும் பலரும் காங்கிரஸை விட்டுத் தலைதெறிக்க ஓடி, மாற்றுக் கட்சிகளில் சரணடைந்ததால்தானே சோனியா தேர்தல் பிரசார களத்தில் குதித்தார்! அந்த மட்டில் லாபம்!

● ச. கார்த்திகை முருகன், திருவில்லிப்புத்தூர்.

? பி.ஜே.பிதான் முதலிடம் பெறும் என்று அத்வானி கூறுகிறாரே?

! 'மறுபடி முதலிடம் என்றுதான் சொல்கிறாரே தவிர, மெஜாரிடி இடம் என்று சொல்லத் தயங்குகிறாரே...' அதுதான் இடிக்கிறது!

● எம். பிச்சைக்கனி, கீழ்வெண்பாக்கம்.

? கொள்கை முரண்பாடுடைய தி.மு.க.வுடன் த.மா.கா. கூட்டணி அமைத்தபோது வரவேற்ற பத்திரிகைகள், பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. கூட்டணி அமைத்ததற்காகச் சீறுவது எந்தவிதத்தில் நியாயம்?

! தி.மு.க. - த.மா.கா.வுக்கு ஊழலை எதிர்ப்பது என்கிற ஒருமித்த நோக்கு இருந்தது. இப்போது (பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணியில்) ஊழல் கட்சி என்று தெரிந்தும் கூட்டு வைத்துக் கொள்கிறோம் என்று பகிரங்கமாக அல்லவா பா.ஜ.க.வினர் பேசுகிறார்கள்!

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
பொன்னி வளவன்,
கோனாபட்டு - 622 503.

நீங்கள் கேட்டவை — தராசு

பிரம்மா

கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா

அந்த பஸ்ஸில் பிரபல புரட்சி எழுத்தாளர் ரவி காந்தன் பயணம் செய்து கொண்டிருந்தார். இன்றைய தேதியில் ரவிகாந்தனைத் தெரியாத ஆள் தமிழ் நாட்டில் யாருமில்லை எனலாம். அவரது படைப்புகளைப் படித்த வாசகர்கள் புதுரத்தம் பாய்ச்சப் பட்டவர்களாய் வீறுகொண்டார்கள். அநீதியை எதிர்த்துப் போராடினார்கள்.

அவரது எழுத்தில் பாரதியின் ஆவேசமிருந்தது. பெரியாரின் புரட்சி இருந்தது. வள்ளுவனின் வழி காட்டுதல் இருந்தது.

இன்றும் கூட அவரது "சூரியனைச் சுட்டு எரி" எனும் நாவல் சாகித்ய அகாதமி பரிசு பெற்றதற்காக, கோவில்பட்டியில் ஒரு இலக்கிய அமைப்பு பாராட்டு விழா ஏற்பாடு செய்திருந்தது. அதில் கலந்து கொள்வதற்காகத்தான் போய்க் கொண்டிருந்தார்.

மதுரையில் புறப்பட்ட பஸ் விருதுநகரில் நின்று, மீண்டும் புறப்பட்டது. பஸ் நகர ஆரம்பித்த ஒருசில நிமிடங்களில் – குப்பென்ற ஒருவித நாற்றம் பஸ் முழுதும் வியாபித்தது.

ஒவ்வொருத்தரும் மூக்கைச் சுளிக்க, சிலபேருக்குக் குடலைப் புரட்டியது.

"சவம் என்னலே அது... என்ன எழவை பஸ்ல ஏத்துனாங்கடே? இந்த நாத்தம் நாறுது..." என்றார் ஒரு பாட்டையா.

பின்னால் நின்றிருந்த கண்டக்டரும் முன்னால் வந்தார்.

"ஏம்பா நாறுறது என்னது? யார் கிட்டேயிருந்து இந்த நாற்றம் வருது?" மோப்பம் பிடித்துக் கொண்டே வந்த கண்டக்டர் கண்டுபிடித்து விட்டார். ஒரு கிழவி. அவளது காலடியில் கூடை!

"ஏ... கிழவி... கூடையில என்னது?"

"கருவாடு ராசா... விருதுநகர் சந்தையில வாங்கிக் கழுகுமலைச் சந்தைக்குக் கொண்டு போறேன்... ஏன் லக்கேஜ் வேணுமா?"

"லக்கேஜ் கிடக்கட்டும்! யாரக் கேட்டு கருவாட்டுக் கூடையை பஸ்ல ஏத்தினே... இதென்ன டவுன் பஸ்னு நினைச்சியா... கன்னியாகுமரி போற எக்ஸ்பிரஸ் பஸ்... எத்தனை கட்டை, வண்டிகள் போகுது உங்களுக்குள்ளே... ஹேறால்டான், ஹேறால்டான்... கிழவி... கூடையைத் தூக்கிக்கிட்டு இறங்கு" அலறினார் கண்டக்டர்.

கிழவி தடுமாறி நின்றாள். கெஞ்சலானாள்.

"ஏன் ராசா இதென்ன பஸ்ஸிச் சாமியா? கருவாடு மனுசன் திங்கற பண்டம்தானே... நீங்க இப்பிடிச் சொன்னா எங்களை மாதிரி ஏழை பாழைகள் பொழைக்கிறதெப்படி?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. கூடையைத் தூக்கிக்கிட்டு இப்ப நீயா இறங்கப் போறியா? இல்லே நானே கூடையைத் தூக்கி வெளில எறியவா?"

பஸ் ஓரம் கட்டப்பட்டது. கிழவியை கண்டக்டர் வலுக்கட்டாயமாக இறக்க முயன்று கொண்டிருந்தார்.

கிழவி மருகலானாள் –

"ஏஞ்சாமி, இம்புட்டுப் பேரு இருக்கீகளே யாராவது சொல்லப்படாதா? இப்படி நடுக் காட்டுல ஒரு பொம்பளையை இறக்கி விட்டா நான் என்ன பண்ணுவேன்? ஏதாவது ஒரு ஊர்ல இறக்கி விட்டாலாவது அடுத்த பஸ்ல போய்டுவேன். யாராவது சொல்லுங்க. ஏ ராசா, ஏ துரைகளே...!"

எங்காவது கலவரம் என்றால் மத்தியஸ்தம் பண்ணப் போகும் தாசில்தாரே சீட்டில் 'கம்'னு உட்கார்ந்திருந்தார்.

ஒரு வக்கீல் இருந்தார். ஆனால் அவர் தன் வீரத்தையெல்லாம் கோர்ட்டில் மட்டும்தான் காட்டுவார் போலிருக்கு.

பயணத்தில் இருந்த ஆசிரியப் பெருமகனோ, ஊருக்கு மட்டும்தான் உபதேசம் உனக்கும் எனக்கும் இல்லடா என்பது போல் வேடிக்கை பார்த்தார்.

எழுத்தாளர் ரவிகாந்தனோ, போகிற ஊரில் என்ன பேச வேண்டுமென்ற சிந்தனையில், யதார்த்த உலகில் கண்ணெதிரில் நடக்கும் ஒரு அக்கிரமத்தைக் கண்டுகொள்ளாமல் கற்பனை உலகிலிருந்தார்.

கிழவியின் கெஞ்சல் எடுபடவில்லை.

எல்லோரும் கல்லூளிமங்கனாய் அமர்ந்திருக்க –

கூடையைத் தூக்கிக் கொண்டு கிழவி தட்டுத் தடுமாறி இறங்க முற்பட்டபோது –

அந்த முரட்டு இளைஞன் குறுக்கே வந்தான்.

"நில்லுங்க பாட்டியம்மா. இறங்காதீங்க" என்றான் அதிகாரத் தோரணையில்.

கண்டக்டர் முறைத்தார்.

அட, சர்தான் போய்யா என்பது போலத்தான் அமர்ந்திருந்த இருக்கையில் கிழவியை உட்கார வைத்தான்.

"ஹலோ... என்ன விளையாடுறியா? கண்டக்டர் நான் இறங்கச் சொல்றேன்... நீபாட்டுக்கு உட்காரச் சொல்றியே...?"

"போவ், கண்டக்டர் நானும் பார்த்துக்கிட்டே வாரேன். ஓரேயடியா எகிறிக்கிட்டே வர்றியே... பஸ்ல ஒருத்தன்



சுருட்டுப் பிடிக்கிறான், ஒருத்தன் ஃபுல்லா தண்ணியடிச்சுட்டு மப்புல லோலாயி பண்றான், ஊர்ப்பட்ட நாற்றத்தோட பஸ்ல முக்கால் வாசிப் பேரு உட்கார்ந்திருக்காங்க.. பாவம் ஒரு கிழவி பொழப்புக்காகக் கூடையில கருவாடு கொண்டு போறது உனக்குச் சகிக்கலையோ.. கொஞ்சம்கூட ஈவு இரக்கமில்லாம நடுக்காட்டுல இறக்கி விடப் போறியே..!

"நீ நினைச்சா உனக்குப் பிடிச்ச ஆளை பஸ்ல ஏத்துறதுக்கும் பிடிக்காத ஆளை இறக்கி விடுறதுக்கும் இதென்ன உங்கப்பன் வீட்டு பஸ்ஸா.. நல்ல மரியாதையோட அந்தக் கிழவியை சாத்தூர்ல கொண்டு போய் இறக்கி விடலே, மகனே நீ ஒழுங்கா வீடு போய்ச் சேர மாட்டே..?"

பஸ்ஸே ஒரு நிமிடம் கப்சிப் என்றானது.

அந்த இளைஞனின் முரட்டுத் தோற்றமும் மீசையும் சிவந்த கண்களும் பார்ப்பவர்களுக்கு பயத்தைக் கொடுத்தது. இளைஞனே ரைட்டு கொடுத்தான். பஸ் புறப்பட்டது.

ரவிகாந்தன் பொறாமையுடன் அந்த இளைஞனைப் பார்த்தார். அவருக்கு வெட்கமாக இருந்தது.

இந்தச் சமுதாயத்தில் ஒரு துரும்பைக் கூட கிள்ளிப் போடத் துப்பில்லாத கோழை ஜாதி ஒன்று உண்டென்றால் அது எழுத்தாள ஜாதிதான் என்று யாரோ ஒரு எழுத்தாளன் சொன்னது உண்மை தானோ?

சாத்தூரில் கிழவி, அந்த இளைஞனைக் கையெடுத்துக் கும்பிட்டு வாழ்த்தி விட்டு இறங்கிப் போனாள்.

கோவில்பட்டியில் இறங்கும்போது ரவிகாந்தனை மாலைகளோடு வரவேற்க இலக்கிய அமைப்பு இளைஞர்கள் வந்திருந்தனர்.

தனக்கு முன்னால் இறங்குவது பிரபல எழுத்தாளர் ரவிகாந்தன் என்று அறிந்த இளைஞன், பவ்யமாய் அவரை வணங்கி விட்டு ஒதுங்கி நின்றான்.

இதைக் கவனித்து விட்ட எழுத்தாளர் ரவிகாந்தன் –

யாருமே எதிர்பாராதவண்ணம், தனக்கு வந்த முதல் மாலையை வாங்கி அந்த இளைஞனின் கழுத்தில் போட்டு விட்டுச் சொன்னார் : "நாங்களெல்லாம் கதைகளில் ஹீரோக்களைப் படைக்கிறோம். ஆனால் நிஜ வாழ்க்கையில் எங்களால் ஒரு துரும்பைக் கூட கிள்ளிப் போடத் துப்புக் கிடையாது. இந்த இளைஞன் நான் வந்த இந்த பஸ்ஸில் காட்டிய துணிவும், வீரமும், அநியாயத்துக்கு எதிராக முஷ்டியை உயர்த்திப் போராடிய ஆக்ரோஷமும் என்னை ரொம்பப் பாதிச்சிடுச்சு.. உண்மையில் இதுபோன்ற இளைஞர்கள்தான் ஹீரோக்கள், நாமெல்லாம் ஸீரோக்கள்..!"

சங்கோஜத்துடன் நெளிந்த இளைஞன் சொன்னான் :

"ஐயா.. அநீதியையும் அக்கிரமத்தையும் எதிர்த்துப் போராடணும்கிற துணிவை எங்களுக்கு ஏற்படுத்தினதே உங்க எழுத்துக்கள்தான். அக்கினி மழைங்கிற உங்க நாவலைப் படிச்சுட்டு அதுல வருகிற இளைஞனைப் போல நானும் வாழணும்கிற ஒரு வெறியை ஏற்படுத்தினதே உங்க எழுத்துக்கள்தான்.."

இளைஞன் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் அவர் மேல் பூ மழையாய்ப் பொழியப் புல்லரித்துப் போனார் ரவிகாந்தன்.

'எழுத்தாளன் கோழையாய் இருந்தாலென்ன? அவனது எழுத்துக்கள் வீரர்களை உருவாக்குகிறதே, அந்தவரை சந்தோஷம்!' ●

டைனிங் டேபிள்



சில நாள் சைவமும் உண்டு... சில நாள் அசைவமும் உண்டு...

விஸ்வநாதன்னு ஒருத்தர் எங்க அப்பாவை அடிக்கடி பார்க்க வருவார். சிரிச்சார்னா பல்லு டாலடிக்கும்! சேலத்துக்கு அவரு மாற்றலாகிப் போன பின்னாடி தொடர்பில்லாமப் போச்சு. போன வாரம் ஒருநாள் காலேஜ் போயிட்டு வீட்டுக்கு வந்தா அப்பாகூட ஒருத்தர் பேசிக்கிட்டிருந்தாரு.

என்ன சுமி, அடையாளம் தெரியலையான்னு அவரே சொன்னப்புறந்தான் திரும்பிப் பார்த்தேன்!

விஸ்வநாதன் அங்கிள்தான்! நிஜமாவே அடையாளமே தெரியலை! கன்னமெல்லாம் டொக்கு விழுந்து முகமே தொங்கிப் போயிருந்தது. இப்ப அவர் வயசு, மிஞ்சிப் போனா 37, 38தான் இருக்கும்! குரல் கணீர்னு இல்லாம தொபதொபன்னு வருது. சின்ன வயசுல நான் பண்ணின சேட்டையெல்லாம் சொல்லிச் சிரிச்சாரு. முன்னால ரெண்டே ரெண்டு பல்லுதான் இருக்கு. அலிபாபாவும் நாற்பது திருடர்களும் படத்தில வர்றதுமாதிரி பல்லில்லாம குகைப் பாதை மாதிரி, வாய் இருக்கே! பரிதாபமா இருந்தாலும், அவர் சிரிச்சதும் பயந்து போயிட்டேன்!

அமுதாகிட்டேயும் விஜயாகிட்டேயும் இந்தக் குறை ஏற்படாம இருக்க வழியே இல்லையான்னு கேட்டேன். பல்லு விழுந்த பின்னாடி ஒண்ணும் செய்ய முடியாது. விழுறதுக்கு முன்னாடி தடுக்க முடியும்ங்கிறாங்க!

நம்ம உடம்புக்கு உருவம் கொடுக்கிறதே எலும்புதாங்க! எலும்பு இல்லன்னு வச்சுக்கங்க, நம்ம உடம்ப சாக்கு மாதிரி சுருட்டிட்டுப் போக வேண்டியதுதான். நிக்கணும்னா, கிளிப்ல மாட்டி தொங்க விட வேண்டி வரும். அப்புறம் அழகுப் போட்டியெல்லாம் நடத்த முடியாது. தோல் போட்டிதான் நடத்தணும். என்ன சுமி, இப்படி கோரமா கற்பனை பண்றாளேன்னு பாக்கறீங்களா? உண்மை அதுதான்!

டயானா ஹைடன் தோல் வெற்றி பெற்றதுன்னு அறிவிப்பாங்க!

எலும்புக்கு முக்கியத் தேவை, கால்ஷியம்தான். அது காய்கறியில இருக்கிறதவிட மீன்ல அதிகம்! அதிலயும் கருவாட்டில முழுக்க முழுக்க கால்ஷியம்தான் இருக்கு! (கப் அடிக்கறதெல்லாம் ஒரு பொருட்டா?)

மீனில் புரோட்டின், விட்டமின்-Aகூட இருக்கு. ஆனால் கால்ஷியம் உள்ள ஒரே

உணவு சாப்பிடுறதவிட, எல்லா உணவிலயும் இருக்கிற கால்ஷியம் ஜீரணமாகி, அதை நம்ம உடம்பு உறிஞ்சிக்கறதுதான் பெட்டர். சைடு எபக்ட் எதுவும் வராது.

பால், கேழ்வரகு மாதிரியான சைவ உணவுகளிலேயும் கால்ஷியம் சத்து இருக்குது.

குழந்தை பிறந்து பாலூட்டிக்கிட்டிருக்கற அம்மாமார்களுக்கு கால்ஷியம் உதவிகரமாய் இருக்கும். இவங்களை 'வெற்றிலை போடு வெற்றிலை போடு'ன்னு வீட்டில இருக்கற பாட்டிங்க விரட்டிட்டேயிருப்பாங்க. காரணம் ரொம்ப சிம்பிள்... வெற்றிலைக்குத் தடவற சுண்ணாம்புல கால்ஷியம் இருக்கு.

சின்ன வயசிலேயே பல்லு விழுறதுக்கு நம்ம உடம்பில கால்ஷியம் சத்து குறைவா இருக்கிறதுதான் காரணம். எலும்பு நல்லா வலுவா இருக்கணும்ன்னா கால்ஷியம் சத்துள்ள உணவு தேவை.



- ஒரு போலந்துக்காரன், ஒரு இத்தாலியன், ஒரு யூதன் மூவரும் நெருங்கிய நண்பர்கள். இவர்கள் ஒருமுறை படகில் செல்லும்போது அது உடைந்து ஆளில்லாத தீவில் ஒதுங்கினார்கள். அவர்கள் நடந்து கொண்டிருக்கும்போது ஒரு பாட்டில் தட்டுப்பட, அதிலிருந்து ஒரு பூதம் கிளம்பி, ஆளுக்கு ஒரு வரம் கொடுப்பதாய்ச் சொன்னது. முதலில் யூதன், ''நான், என் ஊர் திரும்ப வேண்டும்'' என்றான். உடனே மறைந்து விட்டான். இத்தாலியனும் அப்படியே கேட்டு மறைந்தான்.

கடைசியில் போலந்துக்காரன் ''நண்பர்கள் இல்லாமல் தனிமையாய் இருக்கிறது. அவர்கள் திரும்பி வர வேண்டும்'' என்றான்!

—கே.ஆர். உதயகுமார்

ரேமண்ட்ஸ் துணிக்காரங்க, முழுமையான மனிதனை உருவாக்குறது பத்தி விளம்பரம் பண்றாங்கில்லே? அது மாதிரி கம்ப்ளீட் ஃபுட் ஒண்ணு இருக்கு. வெளியில பகட்டா இருந்து என்ன பிரயோஜனம்? உடலுக்குள்ள நம்ம மெஷினும் கன்மாதிரி இருக்கணுமில்லையா? அதுக்கு ஒரு நாளைக்கு ஒரு முட்டை சாப்பிட்டு வாங்க! அதில புரோட்டீன், இரும்பு, கொழுப்பு, விட்டமின் இப்படி எல்லாம் சேர்ந்து எஸன்சா இருக்கு! இப்பதான் சைவ முட்டை கிடைக்குதே!

ஆபீஸ் போற ஆளுங்கன்னா, பச்ச முட்டை சாப்பிடாதிங்க. ஏன்னா நீங்க நிழலில் உக்கார்றதால மெதுவாகத்தான் ஜீரணமாகும். அதுக்கு வேக வச்சு சாப்பிடுங்க! ஆம்லட்டாகவோ, அரைவேக்காடாகவோ தயார் பண்ணினா அதுல சில சத்துக்கள் வெளியேற வாய்ப்பிருக்கு. வேக வச்சு சாப்பிட்டீங்கன்னா சத்து வெளியேறாம இருக்கும்!

அத்தலட்டிக் வீரர்களெல்லாம் பச்சை முட்டை சாப்பிடுவாங்க. ஏன்னா அவங்க கடுமையா எக்சர்சைஸ் செய்றதால உடனே ஜீரணமாயிடும்.

மஞ்சள் கரு இருக்கில்ல? எட்டு மாதக் குழந்தைக்கு அதில கால் பீஸ் கொடுக்க ஆரம்பிங்க. ஒரு வருஷத்துக்கு பின்னாடி ஒரு முட்டை தரலாம்!


— சுமி



• டயானா: தோல் வெற்றி?

பொங்கல் நல்வாழ்த்துகள்

உங்கள் பட்ஜெட்டில் "லிப்கோ" விற்கும் இடம் உண்டு!



லிப்கோவின் வெளியீடுகளில் சில :

ஸ்ரீமத் பகவத் கீதை
தமிழில் மூலமும், உரையும் . . . ரூ. 30.00

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் - ஸ்ரீ C.R.S. தமிழ் வசனம் - 2 பாகங்களில் 1800 பக்கங்கள் . . .	ரூ. 250.00
" " ஆங்கில வசனம் . . .	ரூ. 250.00
ஸுந்தர காண்டம் - ஸ்ரீ C.R.S. தமிழ் வசனம் . . .	ரூ. 56.00
ஸகல காரிய ஸித்தியும் ஸ்ரீமத் ராமாயண பாராயணமும் . . .	ரூ. 35.00
கம்ப ராமாயணம் - கதைச் சுருக்கம் . . .	ரூ. 45.00
ஸுந்தர காண்டம் - நவரத்ந மந்த்ரமாலா - ஸம்ஸ்க்ருதம், தமிழ் . . .	ரூ. 7.00
" " - ஸம்ஸ்க்ருதம், ஆங்கிலம் . . .	ரூ. 6.00
விநாயக விஜயம் (புராணம்) . . .	ரூ. 30.00
கந்த புராணம் . . .	ரூ. 42.00
நவக்ரஹ க்ஷேத்ர புராணம் . . .	ரூ. 10.00
ஸ்ரீ விஷ்ணு புராணம் . . .	ரூ. 42.00
லக்ஷ்மீஸஹஸ்ரம் - ஸ்ரீ வேங்கடாத்வரி - ஸம்ஸ்க்ருதம், தமிழில் 1018 செய்யுட்கள், . . .	ரூ. 60.00
ஸ்ரீமத் பாகவத ரஸாம்ருதம் . . .	ரூ. 30.00
கீத கோவிந்தம் (அஷ்டபதி) . . .	ரூ. 20.00
ஸ்ரீ ஸுதர்சந ப்ரபாவம் . . .	ரூ. 25.00
ஸ்ரீ தயாசதகம் - ஸம்ஸ்க்ருத தமிழ் மூலம், உரையுடன் . . .	ரூ. 20.00
108 ஸ்ரீவைஷ்ணவ திவ்யதேச வைபவம் . . .	ரூ. 12.00
நாலாயிர திவ்யப் பிரபந்தம் - 2 பாகங்களில் 1670 பக்கங்கள் . . .	ரூ. 180.00
விரத பூஜா விதானம் . . .	ரூ. 22.00
குடும்ப ஜோதிடம் . . .	ரூ. 22.00

அஞ்சல் செலவைத் தவிர்க்க உங்களூர் புத்தகக் கடையில் கேளுங்கள். இலவச முழு விலைப் பட்டியலுக்கு எழுதுக.

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

தி.நகர், சென்னை-600017
தொலைபேசி : 4341538
மின்-அஞ்சல் : varadan@lifcobooks.com

லிப்கோ - 69 ஆண்டுகளாக ஆன்மிக உலகில் பெரும்புகழ்!

எங்கள் இணைய முகவரி
(Web Site Address) http://www.lifcobooks.com


புத்தகம் பரிசளிப்பீர்! புதுமை படைப்பீர்!

RAE-3009

படித்ததில் பிடித்தது

வாழ்க்கை வரலாறு எழுதுவது போல் ஒரு கஷ்டமான காரியம் இருக்க முடியாது. அதுவும் அடுத்தவர் வரலாறு. அதுவும் சிறுவர்களுக்கு.

சமயக் குரவர் எனப்படுகிற அப்பர், சுந்தரர், நாவுக்கரசர், மணிவாசகரின் வாழ்க்கை வரலாற்றை படு



இளைய தலைமுறைக்கு ஓர் இனிய பரிசு!





எளிய தமிழில் சலிப்பூட்டாமல் விறுவிறுப்பாகத் தந்திருக்கிறார் வானதி திருநாவுக்கரசு.

சாடிலைட் யுகத்தில் நமது தொன்மையான அற்புதங்கள் பற்றிய அடிப்படையே இளைய தலைமுறைக்கு இல்லாமல் போய்விடக் கூடாது என்கிற அக்கறை இப்புத்தகங்களின் தயாரிப்பில் தெரிகிறது.

அட்டை எப்போதும் போல் நேர்த்தி என்பது இருக்கட்டும். படிக்கிற ஆர்வத்தைத் தூண்டும் விதமாக உள்ளே தரப்பட்டுள்ள அபாரமான முழுப்பக்க வண்ணப்படங்கள் நெஞ்சை அள்ளுகின்றன. (பத்மவாசன், வினு, ம.செ.)

இந்த முயற்சியில் வானதி செய்திருக்கிற ஒரு நுணுக்கமான காரியம் - தேவார, திருவாசகப் பாடல்களின் அதி அற்புதமான சில வரிகளை ஆங்காங்கே ஸாஷே பாக்கெட் போலக் கொடுத்து, விளக்கி, மாணவர்களுக்கு அவை முழுவதையும் படிக்க வேண்டும் என்கிற ஆசை உண்டாகும் விதமாகச் செய்திருப்பதுதான்.

பள்ளி நூலகங்களில் அவசியம் இருக்க வேண்டிய புத்தகங்கள். (பீரோக்களில் வைத்துப் பூட்டுவதற்கு அல்ல!)

— ஜிண்டு



[சுந்தரர் வாழ்வும் வாக்கும் (ரூ. 25)
மாணிக்கவாசகர் வாழ்வும் வாக்கும் (ரூ. 25)
திருநாவுக்கரசர் வாழ்வும் வாக்கும் (ரூ. 20)
திருஞான சம்பந்தர் வாழ்வும் வாக்கும் (ரூ. 22)
(ஆசிரியர் : திருவரசு/திருவரசு புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, சென்னை - 17.)]

கே. மலைச்சாமி!

தமிழக அதிகாரிகள் வர்க்கத்தில் பரபரப்பை உண்டாக்கிய பெயர். எடுத்துக் கொண்ட பொறுப்புகளில் தமது 'அக்மார்க்' முத்திரையைப் பதித்தவர். குறிப்பாக, சென்னை மாநகராட்சி ஆணையாளராக இருந்த சமயம், நடைபாதைக் கோயில்கள் உள்பட, சாலையில் உள்ள ஆக்ரமிப்புக்களை அகற்றிய போது, நகரமே அவருக்குத் துணை நின்றது. அவருடைய பாப்புலாரிட்டியைப் பொறுக்க முடியாமல் அன்றைய அரசு அவரை எழுது பொருள் துறைக்குத் தூக்கியடித்தது. தற்போது உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தும் பொறுப்பிலுள்ள மாநிலத் தேர்தல் ஆணையத்தில், ஆணையாளராக இருக்கும் மலைச்சாமி, மீண்டும் செய்திகளில் அடிபடுகிறார். "தேர்தல் ஆணையத்துக்கு தன்னாட்சியும், நிதி சுதந்தரமும் அவசியம் தேவை" என்று குரல் கொடுக்கிறார். வடபழநி நூறடி சாலையில் உள்ள மாநிலத் தேர்தல் ஆணையத்தில் மலைச்சாமியைச் சந்தித்தோம். சிநேகமாகப் பேசினார்....

"1995-ம் வருடம், ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது நான் மாநிலத் தேர்தல் ஆணையாளராக நியமிக்கப்பட்டேன். இது அரசியல் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பதவி. 62 வயது வரை பதவியில் இருக்கலாம். அந்தஸ்தில் உயர்நீதி மன்ற நீதிபதிக்குச் சமமான பதவி. Protocol படி அந்த மரியாதையைத் தேர்தல் ஆணையாளருக்குக் கொடுக்க வேண்டும். முதலில் எனக்கு இரண்டு வருடம் பதவிக் காலம் கொடுக்கப்பட்டது. இப்போது எனது பதவிக் காலத்தை மேலும் இரண்டு வருடத்துக்குத் தி.மு.க. அரசு நீட்டித்து இருக்கிறது. பதவிக் காலத்தின் இடையில் என்னை நீக்க வேண்டுமானால் பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து இரண்டு பங்கு மெஜாரிட்டியுடன் நிறைவேற்ற வேண்டும்.



"கிட்டத்தட்ட 25 வருடங்களாக உள்ளாட்சித் தேர்தல்கள் நடக்காமல் இருந்த தமிழகத்தில் வெற்றிகரமாகத் தேர்தல்களை நடத்தி முடித்தோம். எனக்குப் பெரிய திருப்தி. முதல்வரே பாராட்டினார். அதன் பின் உள்ளாட்சிகளில் ஏற்படும் காலியிடங்களை நிரப்ப, குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் அவ்வப்போது தேர்தல் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

"உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தி முடித்தாலும், என் மனதுக்குள் ஒரு நெருடல் இருந்து கொண்டே இருந்தது. அது, மாநிலத் தேர்தல் ஆணையத்தின் தன்னாட்சியையும் தனித் தன்மையையும் பற்றியது. இது ஒரு தனி அமைப்பு. மாநில அரசு, இதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். ஆனால் நடைமுறையில் பல கசப்பான அனுபவங்கள். முக்கியமாக, நிதிச் சுதந்தரம் கிடையாது. ஒரு சின்னப் பொருள் வாங்குவது உட்பட எல்லாவற்றுக்கும் கோட்டைக்குக் கடிதம் எழுத வேண்டும். அவர்

சிக்கல் உண்டாக்குவது என் நோக்கமல்ல!

கள், எதோ தாலுக்கா ஆபீஸிலிருந்து வந்த கடிதம் போல பாவித்து - ஆறு மாதம் கழித்து நெகடிவ் வான பதிலைச் சொல்வார்கள். 'எங்களுக்கென்று ஆண்டுக்கொரு முறை மொத்தமாக நிதி ஒதுக்கீடு செய்து விடுங்கள். அதைப் பல்வேறு தலைப்பு களில் செலவு செய்து, தணிக்கைக்கு உட்படுத்து கிறோம்' என்று பலமுறை எழுதியபோதும் பதி லில்லை. பட்ஜெட்டில் ஒரு தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகையை அவசியத்துக்கேற்ப, இன்னொரு தலைப்புக்கு மாற்றக் கூட எனக்கு அதிகாரம் கிடையாது. ஆனால் அண்டை மாநிலங்களில் உள்ள தேர்தல் ஆணையாளர்கள் முழு நிதி சுதந்தரத்தை அனுபவிக்கிறார்கள். இது போன்ற நிதிச் சுதந்தரம் இருந்தால்தான் ஆட்சி அதிகாரத்தைச் சார்ந்திராமல், தேர்தல் ஆணை யம் பாரபட்சமின்றி இயங்க முடியும்.

"அது போலவே பதவிக் காலத்தையும் இரண்டு வருடம், இரண்டு வருடம் என்று நீட்டிப் பது சரியல்ல. ஏனென்றால் பதவியிலுள்ளவர் பதவி நீட்டிப்புக் கிடைக்க வேண்டுமே என்ற காரணத்திற்காக ஆளும் கட்சிக்காகச் சிலவற்றை அனுசரித்துப் போக வேண்டியிருக்கும். எனவே, 'பதவிக்காலத்தை ஐந்து வருடங்கள் என்று ஏற் படுத்திவிட வேண்டும்' என்று அரசுக்கு எழுதி னேன். 'முடியாது' என்று சொல்லி விட்டார்கள். மாவட்டத் தலைநகர்களில் தேர்தல் ஆணைய அலுவலர்களை நியமிக்க வேண்டும் என்று வேண்டுகோள் வைத்தோம். பதிலில்லை. இப்படி எதற்கெடுத்தாலும், ஆதரவற்ற ஒரு போக்கைத் தான் நான் சந்திக்க வேண்டியிருந்தது. தலைமைச் செயலாளரைச் சந்தித்து விவாதித்தால், நிலைமை சரியாகிவிடும் என்று பார்த்தால், மீட்டிங் தள்ளிப் போய்க் கொண்டே இருக்கிறது. தலைமைச் செய லாளர் அவ்வளவு பிஸியாக இருக்கிறார். என் னுடைய நோக்கம் சிக்கலை உண்டாக்குவதல்ல. அரசியல் சட்ட ரீதியாக உருவாக்கப்பட்ட இந்தப் பதவிக்கு உள்ள தனித்தன்மையைப் பாதுகாக்கவே நான் போராடுகிறேன்."

"தலைமைச் செயலாளர் ஒரு தேதியைக் குறிப்பிட்டபோது, உங்களுக்குத் தானே நேரம் இல்லாமல் போனதாகச் செய்தி வந்தது?"

"அவர்கள் முதலில் தெரிவித்த தேதியில் ஊரக வளர்ச்சித் துறைச் செயலர் இருக்க மாட்டார் என்றார்கள். எங்கள் மீட்டிங்குக்கு அவர்தான் மிகவும் முக்கியம் என்பதால் அவர் அவசியம் வேண்டும் என்றேன். பிறகு, ஒரு தேதியைக் குறிப் பிட்டபோது நான் ஏற்கெனவே 'கேம்ப்' போவதற் கான ஆயத்தங்கள் செய்யப்பட்டு விட்டதால் என்னால் அந்தத் தேதியில் முடியவில்லை. பிறகு நான் நினைவூட்டுகள் அனுப்பியும் அவர்களிட மிருந்து பதிலே இல்லை."

"ஒரு வேளை நீங்கள் ஜெயலலிதா அரசில் உள்துறைச் செயலாளராக இருந்ததால், அந்த அமைப்புடன் இன்னமும் தொடர்புபடுத்தி, உங்களைச் சங்கடப்படுத்தினால், இன்றைய ஆட்சியாளர்கள் ஒன்றும் சொல்ல மாட்டார் கள் என்ற ரீதியில் கோட்டை அதிகாரிகள் செயல்படுவதாக நீங்கள் நினைக்கிறீர்களா?"

"அப்படி இருந்தால் அது தவறான பார்வை. என்னை யாரோடும் ஐக்கியப் படுத்திப் பார்ப்பது எனக்குப் பிடிக் காது. நான் அறிவாளியாக இல்லாமல் கூட இருக் கலாம். ஆனால் என்னிடம் நேர்மையும் ஒழுக்க மும் இருக்கின்றன. இதை யாரும் மறுக்க முடி யாது. இந்த இரண்டுடன் துணிவும் உண்டு. ஆகை யால் நான் மனத்தில் பட்டதைத் தைரியமாக சொல்லத் தயங்காதவன். இந்தத் துணிவுதான் ஜெயலலிதா அரசில் எனக்கு உள்துறைச் செய லாளர் பொறுப்பை பெற்றுத் தந்ததாக நான் கருது கிறேன். ஜெயலலிதா முதல்வராகப் பொறுப் பேற்றுக் கொண்டவுடன் சீனியர் அதிகாரிகள் கூட்டத்தைக் கூட்டியிருந்தார். அந்தக் கூட்டத்தில் நுகர் பொருள் ஆணையாளராக இருந்த நானும் கலந்து கொண்டு, 'என்ன பிரச்னை' என்பதைப் பிட்டு வைத்தேன். அந்த வெளிப்படையான பேச்சு அவருக்குப் பிடித்திருக்க வேண்டும். அதன் பின் அமைச்சர் ஒருவர், அவரது துறைச் செய லாளராக என்னை எடுத்துக் கொள்ள அனுமதி கேட்டபோது, 'எனக்குக் கீழ் உள்ள இலாகாவில் அவரைப் போட்டுக் கொள்ளப் போகிறேன்' என்று உள்துறைச் செயலாளராக என்னைப் போட்டார், ஜெயலலிதா. இதுதான் நடந்தது. நானறிய, எனக்காக யாரும் அவரிடம் சிபாரிசு செய்யவுமில்லை; நான் யார் சார்பாகவும் இயங் கவுமில்லை. அப்படி இருக்கவும் என்னால் முடி யாது. காரணம் இயல்பாகவே, நான் சுதந்திரமான எண்ணங்களைக் கொண்டவன். எனக்குச் சரி, அல்லது தவறு என்று பட்டதை தைரியமாகச் சொல்பவன்!"

சந்திப்பு : ப்ரியன்
படம் : ஸ்ரீஹரி

வெறி சார், வெறி!

"முப்பது வருடங்களில் 52 நாடகங்கள், 1,500 தடவைகளுக்கும் மேல் நடிக்கப்பட்டு விட்டன. ஆனாலும் எங்களைப் பற்றி தமிழ் நாட்டில் பல பேருக்கு இன்னும் தெரியாதே சார்!" என்று ஆதங்கப்படுகிறார் கிருஷ்ணன். கோவையில் கே.ஆர்.எஸ். நாடகக் குழுவை நடத்திக் கொண்டிருப்பவர்.

அண்மையில் இரண்டு நாடகங்கள் நடத்த சென்னைக்கு இந்த நாடகக்குழு வந்திருந்தது.

"பதிமூனு பேர் கொண்ட எங்கள் குழு, கோவையிலிருந்து சென்னை வந்து போக ரயில் கட்டணம், சென்னையில் தங்கும் செலவு, சாப்பாடு எல்லாமாய்ச் சேர்ந்து பத்தாயிரம் ரூபாய் ஆகிவிடும். அங்கே இங்கே கடன் வாங்கி, பணத்தைப் புரட்டிக் கொண்டு வந்து விட்டேன். ஆனால் மூவாயிரம் ரூபாய் தான் இங்கே நாடகங்கள் போட எங்களுக்குக் கிடைக்கிற சன்மானம்'' என்கிறார் கிருஷ்ணன்.

"கைக்காசை செலவழித்துக் கொண்டு, இத்தனை தூரம் வந்து ஏன் நாடகம் போடுகிறீர்கள்?"


"வெறி சார் வெறி! மேடை மீது எங்களுக்கு உள்ள தணியாத வெறி! சென்னைக்கு வந்து, பத்திரிகைகளால், சபாக்களால், நாடக உலக ஜாம்பவான்களால் அங்கீகாரம் பெற வேண்டும் என்கிற வெறிதான் ஒரே காரணம்."



• நாடக மேடையில்...

தமிழ் நாட்டின் பல ஊர்களுக்கும் சென்று நாடகம் போட்டிருக்கிறது கே.ஆர்.எஸ். நாடகக்குழு.

பழனியில், ஒரு பொருட்காட்சியில் நாடகம் போடக் கூப்பிட்டார் ஒரு காண்டிராக்டர். மாலையில் நாடகம் ஆரம்பிக்க வேண்டிய நேரம். ஆனால் நாடகத்தைப் பார்க்க ஒரு ஆள் கிடையாது. கொஞ்சம் கூட்டம் சேர்ந்ததும் ஆரம்பிக்கலாமே என்றபோது, 'அதெல்லாமில்லை! பார்க்க ஆள் இருக்கிறதா இல்லையா என்று எனக்குக் கவலை இல்லை. நாடகத்தை ஆரம்பியுங்கள்!' என்று கடுமையாய்ச் சொன்னார்.



• கிருஷ்ணன்

நாடகம் ஆரம்பமானது. கொஞ்சம் கொஞ்சமாய் ஆள் சேர்ந்து, நாடகம் முடியும்போது, சுமார் முப்பது பேர் இருந்தனர். ஆனால் அந்த முப்பது பேரும் நாடகத்தை ரொம்ப ரசித்தார்கள். நாடகம் முடிந்தபின், பார்த்தால் காண்டிராக்டரைக் காணோம்.

காண்டிராக்டருடைய ஆள் ஒருவரைப் பிடித்து, சத்தம் போட்டதில், அவர், தம் பையிலிருந்து சில்லரையாக அறுபத்தி இரண்டரை ரூபாயை பொறுக்கி எடுத்துக் கொடுத்து விட்டு, "ஆளைவிடு'' என்று புறப்பட்டுப் போய்விட்டாராம்!

இப்படியான அனுபவங்களைச் சொல்லிக் கொண்டே போகிறார்!

"சென்னையிலிருந்து ஐம்பதாயிரம் அறுபதாயிரம் ரூபாய் கொடுத்து, நாடகக் குழுக்களை அழைத்து வந்து கோவையில் நாடகம் போடுகிறார்கள். ஆனால் உள்ளூர் நாடகக் குழுவுக்கு வாய்ப்புத் தரத் தயங்குகிறார்கள். அதே சமயம், கெஞ்சிக் கூத்தாடி, சென்னையில் நாடகம் போட வாய்ப்புக்கள் பெற்றாலும், குறைந்த சன்மானம்தான் கொடுக்கிறார்கள்" என்கிறார் நாடகக் குழுவைச் சேர்ந்த கவுண்டர் சுப்ரமணியம். (வழக்கமாய் கவுண்டர் கேரக்டர்களிலேயே நடித்து வருவதால், இந்த டெலிபோன் இலாகா அதிகாரிக்கு இந்தப் பெயர்.)

கடந்த சில ஆண்டுகளாக சென்னையில் நடைபெறும் நாடகப் போட்டிகளில் கலந்து கொண்டு, சுமார் அரை டஜன் பரிசுகளைத் தட்டிச் சென்றுள்ளது இந்த நாடகக்குழு.

இன்று திரையில் கொடிகட்டிப் பறக்கும் கோவை சரளாவுக்கும் சின்னத் திரையில் அட்டகாசம் பண்ணுகிற கோவை அனுராதாவுக்கும் இந்த கே.ஆர்.எஸ். நாடகக் குழுதான் கலை உலகத் தாய் வீடு!

— மௌலி

டைரக்டர் கதிருக்குக் காதலிக்க நேரமில்லை!

"என் வாழ்க்கையில் நான் ஒரு சினிமா டைரக்டர் ஆவேன் என்று கனவு கூடக் கண்டது இல்லை. பள்ளிக்கூட நாட்களில், எனக்கு, டாக்டராக வேண்டும் என்றுதான் ஆசை!" என்றார் கதிர்.

"என்னங்க கதிர்! வழக்கமா, எல்லா சினிமாக்காரங்களும் சொல்ற மாதிரியே நீங்களும் சொல்லறீங்களே?"

"இல்லீங்க! நான் சொல்வது சத்தியம்! எங்க டவுன் ஆஸ்பத்திரியில், நேர்த்தியாக உடையணிந்து, ஸ்டெதஸ்கோப் மாட்டியபடி டாக்டர்கள் நடந்து வருவது, அவர்களுக்கு நர்ஸ்களும், மற்ற ஊழியர்களும் தருகிற மரியாதை எல்லாம் என்னை ஆச்சரியப்படுத்திய விஷயங்கள். எனவே எனக்கும் டாக்டராக வேண்டும் என்ற ஆசை வந்தது."

"ஆனால் டாக்டராகாமல், டைரக்டர் ஆகி விட்டீர்களே!"

"நான் டாக்டராகாதது நிஜம். ஆனால் டைரக்டராவதற்கு முன்பு ஓவியனாக இருந்தேன் தெரியுமா?"

"என்னது ஓவியராகவா?"

"ஆமாம்! நான் (அப்போது பெயர் கதிரேசன்) சின்ன வயதிலிருந்தே படம் வரைவதில் ஆர்வம் கொண்டிருந்தேன். என் அப்பா, விவசாயி என்றாலும், கலை ரசனை கொண்டவர். விளையாடிக் கொண்டிருந்தால், 'போதுமடா விளையாட்டு! போய் ஏதாவது கதைப் புத்தகம் படி! இலக்கிய ரசனை வளரும்!' என்பார். மண்ணைக் குழைத்து, சிறு உருவங்கள் செய்வதும் அவருக்குக் கைவந்த கலை. என்னுடைய ஓவிய ஆர்வத்தையும் ஊக்கப்படுத்தினவர் அவர். 'பெரியவனானதும், பல ஊர்களுக்கும் போ! கண்களைத் திறந்து உலகைப் பார்! அதைவிடப் பெரிய புத்தகம் வேறு எதுவுமில்லை' என்பார். என் கூடப் படித்த மாணவர்கள் எல்லாம் அதே ஜில்லாவில் காலேஜ் படித்தபோது, என்னை மெட்ராஸ் அனுப்பி, ஓவியக் கல்லூரியில் சேர்த்தார்!"

"ஓவியக் கல்லூரியில் சேர்ந்த சமயத்தில், மெடிக்கல் படிக்கப் போகவில்லையே என்று வருத்தப்பட்டீர்களா?"

"இல்லை. மருத்துவம் படிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன் என்றாலும், குடும்பச் சூழ்நிலையில் அது வசதிப்படாது என்று உணர்ந்து கொண்டேன். ஓவியமும் என் மனதுக்குப் பிடித்த விஷயம்தானே! இதையெல்லாம் விட, "உன்னிடமுள்ள ஓவியத் திறமைக்கு, நிச்சயம் பெரிய ஆளாக வருவாய்" என்று எனக்கு என் தந்தை கொடுத்த ஊக்கம் பெருமகிழ்ச்சியைத் தந்தது."

"ஓவியக் கல்லூரி வாழ்க்கை எப்படி இருந்தது?"

"ஓ! லவ்லி! மனதுக்குப் பிடித்த படிப்பு என்பது ஒருபுறம். சென்னை வாழ்க்கை என்கிற த்ரில் மறுபுறம். அதற்கும் மேலே நான் பயின்ற ஓவியப் பயிற்சி, பகுதி நேரமாய் பல சிறு சிறு வேலைகளைப் பெற்றுத் தந்தது. அதன் மூலம் எனக்கு, நாமும் சொந்தக் காலில் நிற்கிறோம் என்ற தன்னம்பிக்கையும், நாமும் பணம் சம்பாதிக்கிறோம் என்ற சந்தோஷமும் கிடைத்தது. பத்திரிகைகளில் லே-அவுட் ஆர்ட்டிஸ்ட், சினிமா விளம்பர டிசைனிங் போன்ற பணிகள் எனக்கு, பிறகாலத்தில் சினிமாவில் நுழைய அடித்தளம் அமைத்துக் கொடுத்தன. ஓவியக் கல்லூரியில் படிக்கிற போது, பொருட்காட்சிகளில் விளம்பர ஸ்டால் அமைப்பு, தேர்தல் நேரத்தில் சுவரில் விளம்பரம் எழுதுவது போன்ற வேலைகளைக் கூடச் செய்திருக்கிறேன்."

"ஓவியர், சினிமா டைரக்டர் ஆனது எப்படி?"

"ஒரு நண்பர் மூலம்... பாக்யராஜ், ஒரு கை ஓசை படம் எடுக்கத் துவங்கிய போது, அந்தப் படத்துக்காக நானே ஒரு விளம்பர டிசைன் தயாரித்து, எடுத்துக் கொண்டு, அவரைப் போய்ச் சந்தித்தேன். என் ஒர்க் அவருக்கு ரொம்பப் பிடித்திருந்தாலும், ஏற்கெனவே விளம்பர டிசைனரை ஒப்பந்தம் செய்து விட்டதால், உடனடியாக எனக்கு வாய்ப்புத் தர முடியவில்லை. ஆனால் அதற்குப் பின், அந்த ஏழு நாட்கள் படத்துக்கு என்னைக்

கூப்பிட்டு வாய்ப்புத் தந்தார். அதைத் தொடர்ந்து சத்யஜோதி தயாரித்த சில படங் களுக்கு வாய்ப்புக் கிடைத்தது. எல்லாமே விளம்பர டிசைனராகத்தான்.

"ஒரு விளம்பர டிசைனருக்கு, ஷூட்டிங் கில் எந்தவிதமான குறிப்பிட்ட பணியும் கிடையாது என்றாலும், நான் ஷூட்டிங்கிற் குப் போவேன். படப்பிடிப்பைக் கூர்மையாய் கவனிப்பேன். அப்போதுதான் எனக்குக் கொஞ்சம் கொஞ்சமாய் நாமும் சினிமாவில் ஒரு டைரக்டரானால் என்ன என்கிற எண் ணம் ஏற்படத் தொடங்கியது!"

"டைரக்டராவதற்கு ரொம்பக் கஷ்டப்பட வேண்டியிருந்ததா?"

"சினிமா ஷூட்டிங்குகளைப் பார்த்த சமயம், சினிமா என்பது, வாழ்க்கையைப் பிரதிபலிக்கிற ஒரு சமாசாரம் என்பதை உணர்ந்தேன். ஏன்... நாமும் மனிதன் தானே? நமக்கும் பிரச்னைகளை சந்தித்த அனுபவங்கள் நிறைய உண்டே! அவற்றையே திரையில் சொன்னால் என்ன? என்கிற எண்ணம் வலுப்பட, வலுப் பட, எனக்குள் டைரக்டர் ஆகவேண்டும் என்கிற ஆசை வளர ஆரம் பித்தது.





1967-இல் தி.மு.க. பெரும் வெற்றியைப் பெற்ற சமயம். ம.பொ.சி.க்கு சபாநாயகர் பதவி தரப்படலாம் என்ற பேச்சு அடிபட்டுக் கொண்டிருந்தது. ஒரு நிருபர் அண்ணா விடம், "ம.பொ.சி. தானே ஸ்பீக்கர்?" என்று கேட்டு விட்டார்.

அண்ணாவும் சட்டென்று, "ஆமாம், ம.பொ.சி. அருமையாகப் பேசுவாரே! குட் ஸ்பீக்கர்" என்று கூறி, பிடிகொடுக்காமல் பதில் கூற, அனைவரும் சிரித்தனர்.

– 'சிரித்து மகிழ்வோம்' நூலிலிருந்து : ஆர். பார்த்திபன்.

பாக்யராஜிடம், அசிஸ்டெண்ட் ஆகச் சேர முயற்சித்தேன். முடியவில்லை. அதன்பின் வேறு இயக்குனர்களிடம் இரண்டு படங்களுக்கு உதவி இயக்குனராய்ப் பணியாற்றினேன். ஆனாலும், இடைவிடாமல் சத்ய ஜோதி தியாகராஜனைச் சந்தித்து, டைரக்ஷன் வாய்ப்புக் கேட்பேன். அவரும் பிடிகொடுத்துப் பேச மாட்டார். நானும், அம்புலிமாமா கதை விக்ரமன் போல, மனம் தளராமல் முயற்சி செய்தேன். ஒருநாள் அவருடன் பேசிக் கொண்டிருந்தபோது, ஒரு முக்கியமான காட்சியை திடீரென்று, இடையில் சொல்ல ஆரம்பித்தேன். 'நல்லா இருக்கே!' என்று சொல்லி, முழுக் கதையைக் கேட்டார். இதைப் படமாய் எடுக்கலாம் என்று பச்சைக் கொடி காட்டினார். அதன்பின், நான் அதில் நடிக்க அணுகிய நட்சத்திரங்கள் எல்லாம், நழுவினார்கள். கடைசியில், தியாகராஜனின் ஆலோசனைப்படி, முரளியையும், ஹீரோயினாக ஹீராவையும் நடிக்க வைக்க முடிவு செய்தேன்."

"இதயம் படத்தைப் போல, அடுத்தப் படமான உழவன் ஜெயிக்காமல் போனது ஏன்?"

"இன்றைக்கும் சொல்லுவேன், உழவன் படத்தின் ஒரிஜினல் கதை மிக அற்புதமானது. ஆனால் ஒருசில காரணங்களால், அதற்கும், இறுதியில் திரையில் இடம்பெற்ற கதைக்கும் ஏகப்பட்ட வித்தியாசங்கள்! அந்த ஒரிஜினல் கதையை மறுபடி படமாய் எடுத்தாலும், நிச்சயம் ஹிட் ஆகும் என்று அடித்துச் சொல்லுவேன்."

"அதன்பின் காதல் தேசம், காதலர் தினம் என்று தொடர்ந்து ஏன் காதல்?"

"காதல் என்பது மிக மென்மையான ஓர் உணர்வு. அதைச் சரியானபடி புரிந்து கொள்ளாததனாலேயே சமூகம் சந்திக்கிற பிரச்னைகள் பல. சாதாரணமான ஒருவரின் உணர்வுகளைக் கூடத் தட்டி எழுப்பி, கவிதை பாட வைக்கக்கூடிய சக்தி படைத்தது காதல். ஆனால் அந்தக் காதல் உணர்வுக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது, எந்த அளவுக்கு அது சம்பந்தப்பட்டவரை பாதிக்கிறது என்பதெல்லாம் தனிமனித இயல்பைப் பொருத்த விஷயங்கள், புத்திசாலித்தனம் சம்பந்தப்பட்ட விஷயங்கள். இன்றைக்கு வேறெந்த விஷயத்தையும் விட, மனதை ஆழமாகத் தொடுவது காதல் என்றால் மிகையில்லை."

"இன்று சினிமாவில் வன்முறை மிகுந்திருப்பதற்கு என்ன காரணம்?"

"என்னைப் பொறுத்தவரை, வன்முறையில் நம்பிக்கை கிடையாது. அழுத்தமான கதையே படத்தின் வெற்றிக்கு அஸ்திவாரம். என்னைப் பாதித்த படங்கள் என்று பதினாறு வயதினிலே, முள்ளும் மலரும் போன்ற படங்களைச் சொல்லலாம். நான், பேசிக்கலாய் ஸாஃப்ட் நேச்சர் கொண்டவன். எனவேதான் என் படங்களில் காதலை மென்மையாய்க் காட்டவே விரும்புகிறேன்."

"உங்களுடைய ஒரு படத்துக்கும், அடுத்தப் படத்துக்கும் ரொம்ப இடைவெளி இருக்கிறதே ஏன்?"

"ஒரு படத்தின் வெற்றியை அடுத்து குவிகிற வாய்ப்புகளைப் பயன்படுத்தி, நிறைய படங்களை ஒப்புக் கொண்டு, பணம் பண்ணுகிற வகையைச் சேர்ந்தவன் இல்லை நான். எனக்கு நல்ல கதை வேண்டும், மிகச் சிறந்த கேமராமேன், மியூஸிக் டைரக்டர் வேண்டும். இதனால் பிஸியான அவர்களுக்காக நான் காத்திருக்க வேண்டியுள்ளது. ஒரே சமயம் மூன்று நான்கு மொழிகளில் என் படங்கள் எடுக்கப்படுவதால், அவற்றுக்கு ஏற்ப, நட்சத்திரங்களைத் தேர்வு செய்ய வேண்டியுள்ளது. அதன்பின் நாலு மொழி டப்பிங். உலகம் முழுக்க ஒரே தினத்தில் ரிலீஸ் ஏற்பாடு என்று அடுத்தடுத்துப் பல வேலைகள். இதனால்தான் படம் தாமதமாகிறது."

"உங்கள் திருமணம் காதல் திருமணமாக இருக்கும் என்று நம்பலாமா?"

"படிக்கிற காலத்தில், வெட்டியாய்ப் பொழுதுபோக்கியபோது, சைட், லவ் எல்லாம் எனக்கும் உண்டு. ஆனால் இன்று என் மனம், மூளை முழுக்க சினிமாதான் ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறது. எனவே என் காதல் பற்றி யோசிக்க நேரமில்லை. (சிரிப்பு)

சந்திப்பு : எஸ். சந்திரமௌளி

GITAA CASSETTES ☎ 494 0376 , 494 2530

NEW RELEASES



M.D. RAMANATHAN

CLASSICAL VOCAL GCT 559 — Rs. 36/-

SIDE A - 1. BHAJANA SEYAVE O MANASA 2. DWAITHAMU SUKHAMA 3. APARADHAMU LANNIYU
SIDE B - 4. NANDAGOPA 5. SMARA JANAKA SUBHACHARITHA

GENERATION SERIES

SRIRAM GANGADHARAN

CLASSICAL VOCAL GCT 578 — Rs. 36/-

SIDE A
1. MAHA GANAPATHIM
2. BROCHEVA REVARURA
3. MANASAYATULC
4. BHANTUREETHI

SIDE B
5. THAMATHAMEN
6. BROOHI MUKUNTHETHI





SIDE A
1. CHERA RAVATHEY
2. THOLI JANMA
3. SIVA SIVA SIVA ENA
4. DURMARGA CHERA

SIDE B
1. SWARA RAGASUDHA
2. SEETHAMMA MAYAMMA
3. THILLANA

Rs. 36/-

GENERATION SERIES

BALAJI SHANKAR

TYAGARAJA KRITHIS GCT 579

GENERATION SERIES

MALLADI BROTHERS

CLASSICAL VOCAL

GCT 580 — Rs. 36/-

SIDE A
1. SADA CHALESWARAM 2. NEEVERA KULADHANAMU 3. THELIYALERU 4. AVADHARU RAGHUPATHI 5. GOVARDHANA GIRIDHARA GOVINDA

SIDE B
1. SATHATHAM 2. BHAJA BHAJA MANASA 3. NARAHARI CHANCHAL HAI MATHI MERI 4. THILLANA





KRISHNA STUTHI

By : T.S. RANGANATHAN GCT 135 — Rs. 36/-

SIDE A : 1. BHAJA GOVINDAM (All Verses) 2. MADHURASHTAKAM
SIDE B : 1. HARISHARANASHTAKAM 2. BALAMUKUNDASHTAKAM 3. PANDURANGASHTAKAM 4. ACHYUTHASHTAKAM 5. KRISHNASHTAKAM

TAMIL ARCHANAI

By : T.L. MAHARAJAN GCT 357 — Rs. 36/-

SIDE A : 1. VINAYAGAR POTTRI ARCHANAI 2. MURUGAR POTTRI ARCHANAI 3. SIVAN POTTRI ARCHANAI 4. NAVAGRAHA PAADAL
SIDE B : 5. DURGAI POTTRI ARCHANAI 6 AMMAN POTTRI ARCHANAI 7. NAVAGRAHA POTTRI ARCHANAI - NAMAMAYIRAM 8. NAVAGRAHA STOTHRAM



Produced and Marketed by :

GITAA CASSETTES
P. Box No. 2931, Mylapore, Madras - 600 004.
Phone : 494 3551 FAX : 91-44-4953821
email : akshayaa@md2.vsnl.net.in

Postage : 1 Cassette to 5 Cassettes Rs. 18/-
above 5 Cassettes to 10 Cassettes Rs. 26/-

Packing & Forwarding Charges Free


Alos Available at all Leading Cassette Shops and also at

GIRI TRADING AGENCY
10, Sannadhi Street, Mylapore, Madras - 600 004. Ph : 494 0376, 494 2530

Write for Our Detailed Catalogue

அதிர்ஷ்ட அலிகள் படை!

அங்கே இணக்கம்; இங்கே சுணக்கம்!



• ஜோஷி

அரை மணி நேரத்தில் சிவசேனை - 21, பி.ஜெ.பி - 26 என தொகுதிகளைப் பிரித்துக் கொண்டு, தேர்தல் உடன்படிக்கையை சுமுக மாக முடித்துக் கொண்டு விட்டது ஆளும் கட்சி! 'இச்சல்கரன்ஜி ஸீட் ஒன்று மிச்சம்; அது வும் விரைவில் யாருக்கென்று முடிவாகிவிடும்; புது வருடத்திலிருந்தே தேர்தல் பிரசாரத்தைத் துவக்குவோம்' என தாக்கரேவும், அத்வானியும், கைகோத்துக் கொண்டு அறிக்கைவிட, அங்கே காங்கிரஸ் காம்ப்பில் எக்கச்சக்க குழப்பம்! கையை உதறிக் கொண்டு எல்லோரும் சாரி சாரியாக பி.ஜெ.பி.யை நோக்கிப் படை எடுக் கையில், தேர்தலில் யார் யாரை நிற்க வைப்பது என்பதே பிரச்னை! 'வேட்பாளர்கள் தேவை' விளம்பரம் கொடுக்காத குறையாகத் தத்தளிக் கிறார்கள்! இந்த இக்கட்டான நேரம் பார்த்து, பழைய I.A.F. பைலட்டும், வசூல் மன்னனு மான சுரேஷ் கல்மாடி வேறு பறந்து விட்டார். இதை 'ஃப்ப்பூ' எனக் காங்கிரஸ் பெருந்தலைகள் ஊதித் தள்ள முற்பட்டாலும், கல்மாடி லேசுப் பட்டவர் இல்லையே'! அவரும் பி.ஜெ.பி. கூட்டில் சரண் புகுந்து விட்டால், அவருக்கு ஆதரவளிக்கும் பெரிய பெரிய பிஸினஸ் மேக் னட்களும் அல்லவா கட்சி மாறிவிடுவார்கள்?



• கைர்நார்

பழைய மருந்து; புதிய பாட்டில்

பி.ஜெ.பி.யின் காரியதரிசி பிரமோத் மஹாஜனுக்கு, "உவமை மன்னன்" என்ற பட்டத்தை தாராளமாக வழங்கலாம்! மனி தரின் பேச்சில் ஒரே உவமை மழை! அண்மை யில், மும்பையில் ஒரு கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்த போது, காங்கிரஸை 'எக்ஸ்பயரி டேட்' தாண்டிவிட்ட மருந்து" என்றிருக்கிறார். நேருஜி, முதல் பிரதமரான போது, "காங்கிரஸ் 50 ஆண்டுகளுக்கு நாட்டை ஆளும்" என்றாராம். "அவர் குறிப்பிட்ட காலக்கெடு முடிந்து விட்டது. காங்கிரஸ்காரர்கள் இன்னும் இழுத்தடித்துக் கொண்டிருப்பது அனாவசியம்; காலாவதியான மருந்தைத் தூக்கி எறிவதுதானே உத்தமம்? அதை எடுத்துக் கொள்வதால் நன்மை எதுவும் விளையாதிருப்பது இருக் கட்டும்... எதிர் விளைவுகள் ஏற் பட்டு வைத்தால்...? தலையைச் சுற்றி வீசுங்கள்" என்றிருக்கிறார். அது சரி... அதே மருந்தில் பி.ஜெ.பி. என்ற புதிய லேபிளை ஒட்டி 'மார்க்கெட்' செய்வது மட்டும் மக்க ளுக்கு உதவுமோ?

நினைப்பதெல்லாம் நடந்து விட்டால்...

நூறு அலிகளை சேர்த்துக் கொண்டு தன் படை வலிமையைப் பெருக்க எந்த சேனைத் தலை வனாவது முன் வருவானா? நடக்காது என்று தானே நினைக்கிறீர்கள்? 'நடக்கும்' என்கிறார், சிவசேனையையும், காவ்லி சேனையையும் எதிர்த்துப் புதிதாக கைர்நார் சேனையை உரு வாக்கியிருக்கும் பழைய டெபுடி முனிசிபல் கமி ஷனர் ஜி.ஆர். கைர்நார்! 'அலிகளுக்கு குரு பக்தி அதிகம்! 'ஆஷா' என்றொரு 'குரு'வைப் பிடித்திருக்கிறேன். அவர் மூலமாக சரியான ட்ரெயினிங் அளித்தால், ஊழல் பெருச்சாளி களை இவர்களை வைத்துக் கொண்டே

விரட்டி விடலாம்' என நம்பிக்கையுடன் கூறுகிறார்!


நான் யார்... தெரியுமா?

அரசியல்வாதிகள், காவல் துறையினர், போன்றோரின் பெயரைச் சொல்லிக் கொண்டு மக்களைக் கொள்ளையடித்த காலம் போய், இப்போது அண்டர்வேல்ட் மன்னர்களின் பெயரில் ஊரை ஏமாற்றுகிறார்கள். அண்மையில் ஒரு பெண் ஓவியர் வீட்டில் "நான் தாவூத்தின் ஆள்" என ஃபோனில் மிரட்டி, ஒருவன் இரண்டு லட்சம் பணம் பறிக்க முற்பட்டிருக்கிறான். பெண் போலீஸ் இன்ஸ்பெக்டர் விஜயா, தன்னை ஓவியரின் தங்கையாக அறிமுகப்படுத்திக் கொண்டு, அவனுடன் பேரம் பேசி, தொகையை 75,000க்கு குறைத்து, அவன் சொன்ன இடங்களுக்கெல்லாம் சென்று, லாகவமாக அவனை வளைத்துப் பிடித்த கதை மஹா த்ரில்லிங்! கடைசியில், அவன் இந்தோரைச் சேர்ந்த ஒரு வேலையற்ற இளைஞனாம்! ஒரு புகழ் பெற்ற கஜல் பாடகர் வீட்டிலும் இதே போன்ற மிரட்டல்கள் - அவனும் ஒரு வேலையிழந்த செக்யூரிடி கார்ட்! சூரத்திலிருந்து மாதா மாதம் ஒரு கும்பல், சீசன் டிக்கெட் எடுத்து மும்பை வந்து, தாவூத், காவ்லி, சோடா ராஜன் போன்றோரின் ஆட்கள் போல பாவ்லா செய்து, பணம் பண்ணிக் கொண்டு ஊர் திரும்புகிறதாம்! ஹூம்... வரவர "நான்... இன்னாரின் ஆள்" எனச் சொல்லிக் கொள்வது, 'ஸ்டேடஸ் ஸிம்பல்' ஆகிவிடும் போலிருக்கிறது!

மின்னுவதெல்லாம்...

சட்டசபையில், காங்கிரஸ்காரரான பாமஸ், "முதல்வர் ஜோஷியின் 60வது பிறந்த நாளன்று, கலாசார அமைச்சர் பிரமோத் நவால்கர் அளித்த வைர மாலை 60 லட்சத்திலிருந்து, ஒரு கோடி வரை தேறும்! அதன் உண்மையான மதிப்பு என்ன?" என்று 'ஜீரோ அவரில்', ஒரு விலை மதிப்பான பிரச்னையைக் கிளப்பினார். (ஏற்கெனவே, கோர்ட்டில், 'ஜோஷி இதை எப்படி எடுத்துக் கொள்ளப் போயிற்று?' என யாரோ பெட்டிஷன் போட்டிருக்கிறார்கள்). "மின்னுவதெல்லாம் வைரமாகி விடுமா? அது வெறும் கண்ணாடிக் கல்; விலை 3000 மட்டுமே" என்றார் நவால்கர். "அடடா! நீர் உண்மையானவர் என்றல்லவா நினைத்தேன்? இப்படி 'போலி' என்பது தெரியாமல் போயிற்றே" என முன்னவர் அங்கலாய்க்க, சபையில் இருந்த அனைவருமே பல்லிளித்தனர்! "உண்மையில் அன்று ஜோஷி எந்தப் பரிசையும் ஏற்றுக் கொள்ளவில்லை" என நவால்கர் அடித்துச் சொல்கிறார். இதுவாவது உண்மையாயிருக்குமா?

ஜெயஸ்ரீராஜ்



"அவர் டி.வி. அறிவிப்பாளரா இருக்கலாம். அதுக்காக இப்படியா?"

"என்ன...?"

"உங்க காதலி பெயர் என்னன்னு கேட்டேன். 'மாலா'ன்னு சொல்லிட்டு' கடைசி நேர மாறுதலுக்கு உட்பட்டது'ன்னு சொல்றார்...!"

— ஜி. செல்லத்துரை

"என்னது... பணத்தை இங்கே தொலைச்சிட்டீங்களா...?"

"ஆமா சார்..."

"கெட்டுது போங்க, ஏதாவது பஸ் ஸ்டாண்டு, கடைவீதி... இப்படி எங்காவது தொலைச்சிருந்தாலும் கிடைக்க வாய்ப்பிருக்கு... ஹூம்!"

— சீர்காழி வி. ரேவதி



"விடியற்காலையில் எழுந்து, நாலு கிலோ மீட்டர் ஓடிவிட்டு வந்தால் கிடைக்கிற புத்துணர்ச்சியே தனிதான்!"

"எத்தனை நாளாய் நீங்கள் ஓடுகிறீர்கள்?"

"அடுத்த மாதத்திலிருந்து ஓடலாம் என்று இருக்கிறேன்!"

— கௌதம்



12

ஜன்னலுக்கு வெளியே கழுவி விடப்பட்டு இருந்த ஒரு துண்டு உலகம். இன்னமும் நிற்காத ஊசித் தூறல். மேகம் அடைத்த சாம்பல் வானில் ஊர்ந்து மறையும் ஒற்றை விமானம். இருந்த இடத்திலிருந்து எல்லாமே தெரிகிறது. மிகவும் தெளிவாக. படுத்த வாக்கிலேயே பேப்பர் படிக்க முடிகிறது. கைக்கட்டை நீக்கி விட்டதால் கையசைக்க முடிகிறது. கால் மட்டும் காலண்டர் போல் அந்தரத்தில் ஊஞ்சல் கட்டி ஆடுகிறது. இடுப்பில் வலி இருக்கிறது. ஆயினும் பொறுத்துக் கொள்ளும் வல்லமையை இறைவன் அருளி இருக்கிறார்.

கட்டிலுக்கு அருகிலே சின்ன மேசை. அதில் ரஞ்சனி அடுக்கி இருந்த பழங்களும் வண்ண மருந்துக்குப்பிகளும். நூல்கட்டித் தொங்கிய குறிப்புப் புத்தகத்தில், வேறு வேறு கையெழுத்துக்களில் தேர்ச்சி மற்றும் டோஸேஜ் விவரம்.

விழியோட்டம் நான்கு சுவர்களுக்குள் இருந்தாலும் மனம் வாகினியில் மேய்ந்து கொண்டு இருந்தது. இன்று ரங்காவின் படத்துக்குப் பூஜை. முன்னேற்பாடுகளுக்காக இரண்டு நாள் முன்பு சொல்லிவிட்டுக் கிளம்பிப் போனான். பிறகு பார்த்துக் கொண்டது எல்லாம் ரஞ்சனிதான் என்று டாக்டர் சொன்னார். இடுப்பில் நடந்த அறுவைச் சிகிச்சைக்கு மருந்துகளின் உதவியுடன் மயக்க யாத்திரை.


சினிமாத்தனம் எத்தனை தூரம் மூளையை ஆக்கிரமித்து. அப்படியே ரயிலோடு போய் விடுவாள் என்று எண்ணி விட்டேன்? தூண்டில் புழு போல எதிலாவது சிக்கி, மீண்டும் ரணப்பட வேண்டும் போலிருந்தது அவனுக்கு.

மனம், சரியான பாதையில் சிந்திக்கத் தவறிவிட்டது. எடுக்கிற முடிவுகள் எல்லாமே பிசகாகி விடுகின்றன. தனக்குள் தானே அற்பப் பதராகிவிட்ட அயர்ச்சி. யாரையும் ஏறிட்டுப் பார்க்கவும் ஓரிரு சொல் பேசவும் கூட வெட்கம் பிடுங்கித் தின்கிறது.

நான் முழுக்கப் படுத்துக் கிடக்கிற கட்டிலின் அருகிலேயேதான் ரஞ்சனி அமர்ந்து இருக்கிறாள். நினைவு திரும்பின நிமிஷத்திலிருந்து பார்க்கிற ஒரே காட்சி. ஆனால் ஒரு சொல் பேச, உதடு திறக்க மறுக்கிறது. அவளும் கூட கலையாத மௌனத்துடன்தான் கொலு வீற்றிருந்தாள்.

மருந்து தருவது, போர்த்தி விடுவது, இயற்கை அழைக்கிற போது உதவி செய்வது என்று இழை பிசகாத ரோபாட் நேர்த்தி. மிகக் கனமான மௌனச்சுவர். கடவுளே, இது எப்போது உடையும்? ஒரு கடமை போல அவள் செய்யும் பணிவிடைகளைச் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. கதறி அழத் தோன்றிய இயலாமை. மாறாக, அவள் போயிருந்தால்கூட இத்தனை வலி இருந்திருக்காது. அல்லது, நான் போயிருந்தால் அவளுக்கு.

“மடத்



பா. ராகவன்

தனமாகப் பேசாதே ஹரி!" என்றான் ரங்கா. பூஜை முடித்துத் திரும்பி வந்தவன் நெற்றியில் வழக்கத்துக்கு மாறாகக் குங்குமத் தீற்றல்கள்.

"நல்லபடியா ஆரம்பிச்சுட்டியா ரங்கா? நான்தான் வரமுடியலை!"

பூஜை மட்டுமல்ல. எல்லாமே நல்லபடியாகத்தான் நடந்து இருக்கிறது என்று ரங்கா சொன்னான்.

"அதென்ன?"


"உன் மனைவி உட்பட- உன்னைச் சுற்றி இருக்கிற சின்ன உலகத்தில் எல்லாரும் அன்பு மயமாக இருக்கிறார்கள். படு சுத்தம்! பட், நீ மட்டும் எப்படி தப்பாவே எப்பவும், எதையும் யோசிக்கிறாய்?"

முகத்தில் அறையும் கேள்வி. ஆனால் ரங்கா ஒரு வித்தகன். சாமர்த்தியமாக ஒரு புன்னகையின் பின்னால் நின்று கொண்டுதான் அம்பு எய்கிறான். நல்லது. கேட்பது யாரோ அல்ல. இதற்கு விடை தெரிந்தால் பின் எல்லாமே ஒன்றுமில்லாத சங்கதிகள்தாம். தினசரி, போட்டுக் குழப்பிக் கொந்தளித்து, அடங்குவதெல்லாம் இதற்கான பதிலைத் தேடித்தான். ஆனால் கிடைப்பேனா என்று ஒளிந்து நின்று உசுப்பேற்றும் பதில் பூதம்.

"நான் சொல்லட்டுமா? நீ சுய இரக்கத்தில் உருகறே! உன் குறை- அப்பாகன்னு நீ நினைச்சுட்டிருக்கறதை- உன்னைத் தவிர வேறு யாருமே பொருட்படுத்தலை! ஆனால் உனக்கு அதைத் தவிர வேறு நினைவே கிடையாது. Am I right?"

அப்படியா? அப்படித்தானா? அதுதானா? உடனே, இல்லை என்று அவன் உதடுகள் முணுமுணுத்தன. மனத்தையும் அப்படியே முணுமுணுக்க வைக்க முயன்று பார்த்ததில், படு தோல்வி. தன் போலித்தனங்களை உடைத் தெறிய உதித்திருக்கும் அவதார புருஷன் மாதிரி அவன் நின்று கொண்டிருப்பதாக ஹரி நினைத்தான். இது கூட மிகையாக இருக்கலாம். அதீதமாக யோசித்து யோசித்து, இயல்பாக இருப்பதே சுமையாக இருக்கிறது.

"பதில் சொல்லாமல் இருந்தால் எப்படி? ஆஃப்ட்ரால், ஒரு குழந்தை பெத்துக்கறதுதான் ஆண்மைன்னு நினைக்கறியா? நெவர் ஹரி! ப்ச்... இதெல்லாம் நான் சொல்ல வேண்டி இருக்கு பாரு! உன் மனைவி, உன் குடும்பம்- அதன் மேல் நீ செலுத்தக் கூடிய அன்பு ஒண்ணுதான் எல்லாமே!"



நானா? ரஞ்சனி மேல் அன்பு இல்லாமல் இருக்கிறேனா? கடவுளே! அன்பில்லாமலா, கை நழுவியது பற்றி இத்தனை தவிக்கிறேன்?

"இல்லை. அன்பு நிஜமானதென்றால் அப்படியொரு சந்தேகம் வந்திருக்காது. அல்லது, வலுக்கட்டாயமாக அதை வரவழைச்சிட்டிருக்க மாட்டாய்!" என்று ரங்கா சொன்னான்.

முகத்தில் அறையும் குற்றச்சாட்டுகள் எதுவுமே புதிதில்லை. ஆனாலும் வேரைச் சுற்றித்தானே நீரோட்டம்?

"இதுக்குமேல் நான் பேச ஒண்ணும் இல்லை ஹரி. இது கடைசி முயற்சி. உனக்கு இது போதும்னு நம்பறேன்!"

சட்டென்று, நாலாக மடித்த ஒரு தாளைத் தூக்கி முகத்தில் விட்டெறிந்துவிட்டு வெளியே போனான்.

இது எல்லாவற்றையும் கதவருகே நின்று கவனித்துக் கொண்டிருந்தாள் ரஞ்சனி. முகத்தில் ஒரு விலை உயர்ந்த சாந்தம். மிரட்டும் மௌனம். அவிழாத புதிர்ப் பொட்டலம்.

ஓரப்பார்வையில் அவளைக் கவனித்தவாறே தாளைப் பிரித்தான் ஹரி. எழுத்தில் விரிந்த ஸ்டீபனின் மனம்.

அன்புள்ள ஹரி, முற்றிலும் எதிர்பாராத மாபெரும் சிக்கல். ஆயுளுக்கும் மறக்க முடியாத அதிர்ச்சி தந்திருக்கிறாய். ஒரு நட்பு கொச்சைப்படுத்தப்படுவது எத்தனை வலி தரக் கூடியது என்பது முதல் முறையாகப் புரிந்திருக்கிறது. ஒரு பெண்ணை பலாத்காரப் படுத்துவதைக் காட்டிலும் விகாரமாக இருக்கிறது. கடவுளே, இத்தனை நாள் நாம் பழகியது? பேசிய பேச்சுக்கள்? உதிர்த்த முறுவல்கள்? காட்டிய அன்னியோன்யம்? தேர்ந்த சினிமாக்காரனின் தத்ரூப நடிப்புத்தானா, எல்லாமே? ஒன்று நிச்சயம், என் இந்த க்ஷண தவிப்புக்கு ஒத்தடமே இல்லை!

எனக்குத் தெரிந்தவரை யோசித்துப் பார்க்கிறேன். எது உன் சந்தேகத்தின் ஆரம்பம்? தற்செயலாக நீ என் வீட்டில் பார்த்துவிட்ட அந்த போட்டோ. (நான் பார்த்தேனா இல்லையா என்று அன்று எத்தனை தவித்தாய்!) அதுதானா? அது ஒரு ஸ்லிப். ஆக்ஸிடென்ட் என்று உன் நிம்மதிக்காகச் சொல்லலாம். ஏதோ ஒரு ஃபங்ஷன். இடம் கூட ஞாபகமில்லை. நீ மூட்டிவிட்ட தீயால், சம்பவம் மட்டும் நினைவுக்கு வருகிறது. முற்றிலும் எதிர்பாராமல் நாங்கள் சந்தித்துக் கொண்ட இனிய அதிர்ச்சியில், சற்று வேகமாகக் கிட்டே வந்தாள் ரஞ்சனி. கீழே வீடியோ ஒயர் தடுக்கி, அவள் விழுந்த விநாடி, ஆல்பத்தில் ஸ்டில்லாகி இருந்ததை அவள்தான் எடுத்து வந்து காட்டினாள். வைத்திருக்க வேண்டும் என்று வைத்திருக்கவில்லை. தூக்கிப் போடத் தோன்றாததால் தூக்கிப் போடவில்லை.

ஹரி, உண்மையைச் சொல்லத்தான் முடியும். நிரூபிக்க வேண்டும் என்கிற கட்டாயம் வரும்போதே அதன் புனிதம் விகாரப்பட்டுவிடுகிறது. இறுதியில் ஒரு விஷயம். எனக்கு நண்பர்களை விட நட்பு என்கிற கான்செப்ட் தான் வெகு முக்கியம். அதனால் தான்–

"அவன் போய் விட்டான்!" என்றான் ரங்கா.

"எங்கே?"

"ஜெய்ப்பூரில் ஏதோ காண்ட்ராக்ட் என்று சொல்லி இருந்தானாமே? இரண்டு மாத ப்ராஜெக்ட். ஆனால், திரும்பி வரப் போவதில்லை என்று சொல்லிவிட்டான். உனக்குப் புரிகிறதா ஹரி? ரஞ்சனியை அல்ல; அவன் நட்பைத்தான் அவன் முக்கியமாக நினைக்கிறான். உன்னைவிட, உன் உணர்வுகளை மதிக்கிறான்– அவை எத்தனை தவறாக இருந்த போதிலும். வாழ்க்கையை அல்ல; அதன் தத்துவங்களில் கவனம் செலுத்தி வாழ்பவர்கள் எப்போதும் இப்படித்தான்."

வானம் உக்கிரமாக இருட்டிக் கொண்டு வந்தது. குளிர்ந்த காற்றின் ஒரு தொடுதலுக்காகக் குவிந்து காத்திருக்கிற மேகங்கள். அது தொட்டுத் தடவிய விநாடியில் பீறிட்ட நீரூற்று. இடியும் மின்னலுமாக உடைபடும் சொற்கள். கரைபிளந்த நதி போல உணர்ச்சிப் பிரவாகம். பொங்கிப் பெருகிய சுடு நீரில் கரையத் துடிக்கிற அவமானக் கறைகள்.

சுயவெறுப்பும் இழிவும் குத்திக்கிழிக்க, தனக்குள்ளே ஒடுங்கிச் சிறுத்து, துரும்பாகிப் போனதுபோல் உணர்ந்தான். என்னவெல்

"நேற்று வரைக்கும் வலிய வந்து வணக்கம் சொன்னவன், இன்னைக்குக் கண்டுக்காமல் போறானே?"

"இந்த வருஷம் நம்ம கம்பெனில காலண்டர் போடலைன்னு சொன்னதும் அப்படி ஆயிட்டான்!"

– சீர்காழி வி. ரேவதி



லாம் நினைத்து இருந்தான்? அத்தனையும் ஒன்றுமில்லாமலாக்கிவிட்டான் ஸ்டீபன். ஜென்மத்தில் மறக்கப் போவதில்லை. அவன் விலகலே ஒரு தண்டனை. கடவுளே, ரஞ்சனியின் பேச்சற்ற வெற்றுப் பார்வைக்குப் பின்னே, இத்தனை நேரமாகப் புரியாமல் நான் தேடிய புதிருக்கு விடை இதுதானா? எப்போது போனான் ஸ்டீபன்?

''உனக்கு விபத்தான தினம். அவனை வழியனுப்பத்தான் ரஞ்சனி போயிருக்காள். அது தெரிந்து, நான் மறுபடி போன் பண்ணுவதற்குள்ளாகத்தான்...''

ஒரு குழந்தைபோல் அவன் தேம்பத் தொடங்கியபோது, ரஞ்சனி உள்ளே வந்தாள். சட்டென்று ரங்கா, ''நான் வரேன் ஹரி. வெளியே இருக்கேன்'' என்று போனான்.

கடக்கிற வேளையில் ரஞ்சனியின் விழிகளைச் சந்தித்தவன், அதில் தெரிந்த பாவமற்றப் பேரமைதியில் கொஞ்சம் மிரண்டான்.

''ரஞ்சனி, உங்கள் அமைதி அச்சமூட்டுகிறது. தயவு செய்து ஏதாவது பேசுங்கள்'' என்று போகிற போக்கில் கிசுகிசுத்துவிட்டுப் போனான்.

அவள் பதில் சொல்லவில்லை. தலை குனிந்தபடி கட்டிலருகே போனாள். இடம் மறந்து, நிலை மறந்து, உயிரை உருக்கிக் கண்ணீராய்ச் சொரிந்து கொண்டிருந்தவனின் தலையில் கை வைத்துப் பூ வருடினாள்.

''ப்ளீஸ், காம் யுவர் ஸெல்ஃப்.''

ரகசியக் குரலில் முதல் முதலாக உதிரும் சொற்கள்.

''எதுக்கு அழணும்? இப்படி எல்லாம் ஆயிடுச்சேன்னா?''

அவன் பதில் சொல்லவில்லை. கண்ணீரே அவன் பதிலாக இருந்தது.

''உடம்பு இன்னும் முழுசாகச் சரியாகலை. ரொம்ப எமோஷனல் ஆனால், ஏதாவது கொலாப்ஸ் ஆகலாம். ப்ளீஸ்...''

என்னவெல்லாம் செய்து விட்டேன்? மிகக் கேவலமாக. மிக மிக அற்பமாக. மன்னிப்பாளா ரஞ்சனி? இப்படிக் கேட்பதே எத்தனை வீரியமற்ற அபத்தமானது?

''I can forgive you. But I cannot forget what you have done. காயம் ஆற நாளாகும் ஹரி.'' என்றாள் ரஞ்சனி.

''அது வரைக்கும்?''


அவள் சில விநாடிகள் அமைதியாக இருந்தாள். பின் இடமாக, ''கொஞ்ச நாள் தனியா இருக்கலாம்னு நினைக்கறேன்'' என்றாள்.

அவன் அதிர்ந்து இருந்தான். மறுபடி மறுபடி நிருபணமாகும் நிதர்சனம். வாழ்வின் சில மோசமான கணங்களைத் தவிர்க்க முடிவதே இல்லை. இதை விடவும் இம்சிக்கக் கூடிய, எண்ணி எண்ணிக் கதறச் செய்யக் கூடிய தண்டனை வேறு இருக்க முடியாது.

● ஸ்ரீலங்காவில் விடுதலைப் புலிகளுக்கும் ராணுவத்துக்கும் இடையே நடந்து வரும் சண்டையில் மிக மோசமாக பாதிக்கப்பட்ட விஷயங்களுள் ஒன்று பனை மரங்கள். சாலைகளில் போட்டு தடை ஏற்படுத்தவும் பூமிக்கு அடியில் ஒளிந்து கொள்ளும் குழிகளைப் பலப்படுத்தவும் பனை மரங்களை ஏராளமாக வெட்டி விடுகின்றனர். கடந்த பத்து ஆண்டுகளில் அழிந்துள்ள பனை மரங்களின் எண்ணிக்கை– சுமார் 25 லட்சம்!

(ஆதாரம்: இந்தியன் எக்ஸ்பிரஸ்)

–எஸ்.ஆனந்



''உங்கள் ஒரு சொல்லால் நான் ரொம்ப இழந்து இருக்கேன் ஹரி. வலி தாங்க முடியாமல் தவிச்சுட்டு இருக்கேன். சட்டுனு உங்கள் மன்னிப்பை அங்கீகரித்து எல்லாத்தையும் மறந்து– அல்லது மறந்துட்டதாகச் சொல்லிக் கட்டிப் பிடிச்சுக்கறதோ, ஒரேயடியாக டைவர்ஸ் பண்ணிட்டுப் போறதோ எனக்கு சாத்தியமில்லை ஹரி. பிகாஸ், நான் உங்களை வெறுக்கலை. நாட் அட் ஆல்! எதிர்பார்ப்புகள் இல்லாமல் உங்களை முழுசாக நான் நேசித்தேன். ஸோ, காயம் கொஞ்சம் ஆழமாகத்தான் இருக்கும். இல்லையா?''

அவன் பேசவில்லை. வார்த்தைகளற்றுப் போய் வெற்றுப் பார்வையில் அவளைப் பார்த்துக் கொண்டு இருந்தான்.

''இதே மெட்ராஸில் இன்னொரு மூலையில் எங்காவது இருப்பேன். டிராயிங் மாஸ்டராக ஏதாவது ஸ்கூலில் ஒர்க் பண்ணலாம்னு ஐடியா இருக்கு. டைவர்ஷன் வேணும் இல்லையா? நாம் போனில் பேசலாம். ஆனால், கொஞ்ச நாள் சந்திக்க வேண்டாம் ஹரி. நானே திரும்பி வருவேன், நிச்சயம்! இந்தத் தனிமை ரெண்டு பேருக்குமே அவசியம்னு நினைக்கறேன். என்னை இப்பவாது புரிஞ்சுப்பீங்களா?''

மெல்ல விரலெடுத்து, அவன் விழிகளைத் துடைத்தாள். துக்கத்தின் விளிம்புகளில் வெளிப்படுகிற ஒரு விரக்தி முறுவல்.

''இப்பவே போயிடுவியா?''

''ம்ஹூம்! நீங்கள் தேறி, வீடு வந்தப்புறம் தான்!''

அவன் கண்களை மூடிக் கொண்டான். காத்திருக்க ஆரம்பித்தான். ●

(முற்றும்)

"நடந்தா... திருப்பதிக்கா?" – ஸ்ரீகாந்த் கேட்கும்போதே எட்டுக்கல் விட்டெறிந்த மாதிரி இருந்தது.

"ஆமாண்டா.. இருபது வருஷமா போயிண்டிருக்கேன். இது இருபத்தியோராவது வருஷம்! நீயும் கூட வரே...!" – மாமா ராமன் வளைத்த வளைப்பில் மேலும் வெலவெலத்துப் போகிறான் ஸ்ரீகாந்த்.

"உனக்குத்தானே ஜாண்டிஸ், டைபாய்டு, நிமோனியான்னு எல்லா எழவும் வந்தது? அதுல இருந்து உன்னை காப்பாத்தினது யாராம்? அந்த வெங்கடாசலபதிதானே?"

"இல்லை... எனக்கு ட்ரீட்மெண்ட் தந்த டாக்டர் பேர் செரியன்."

"என்ன இண்டலா? உன் செரியன் ஒரு வயாமீடியா. அத தெரிஞ்சுக்கோ. எல்லார்க்கும் சொல்லி அனுப்பிடுங்க, அவ்வளவுதான்னு அந்த செரியன் சொன்னதை நான் மறக்கலடா! உன் அம்மா ஒரு பக்கமும் – அப்பா ஒரு பக்கமும் மயக்கம் போட்டு விழுந்துட்டா. எமனுக்கு ரொம்ப வசதியாப் போச்சு. ஆனா நான் விடலை. நேரா வெங்கடாசலபதிகிட்டப் போய் நின்னேன். காப்பாத்திக் கொடு. நடத்தி அழைச்கண்டு வந்து காணிக்கை செலுத்தறேன்னேன். கொடுத்துட்டான். சொன்னபடி செய்ய வேண்டாமா?"

"மாமா... இதுக்கு என்னை நீங்க சாகவே விட்டிருக்கலாம்"

"மேற்கொண்டு பேசினே, தெரியும் சேதி..."

"வெங்கட்ரமணா, கோவிந்தா, கோவிந்தா...!"

"திருப்பதி ஏழுமலையானே கோவிந்தா.. கோவிந்தா..."

– நடை பயணம் தொடங்கி விட்டது. 'வெங்கடேச பக்த சமாஜம்' என்கிற பெயரில் ஏகமாய்க் கூட்டம்.

பஜன், பூஜை என்று அமர்க்களங்கள் முடிந்து சாரி சாரியாய்க் கூட்டம் கிளம்ப, ஜனக் கூட்டமும் பொத்பொத்தென்று காலில் விழுந்து யாத்ராதாரிகளை வழியனுப்பி வைக்க, ஸ்ரீகாந்துக்கு எல்லாமே வேடிக்கையாக இருந்தது.

"உம் நடடா.." – மாமா பிடித்து இழுக்கிறார்.

செருப்பு போட்டே நடந்த கால்களுக்கு வெறும் தரையில் நடப்பது ஒரு பெரிய அசௌகரியமாக இருக்கிறது. சின்ன கல் கூடப் பெரிய பரிணாமமெடுத்துக் குத்துகிறது.

"மாமா இப்படி கேனத்தனமா வேண்டிண்டு என்னை நீங்க உகரை வாங்க வேண்டாம்!"

"பேசாம வா. உன் நாத்திக புத்திக்கு சில தெல்லாம் புரியாது."

"என்ன புரியாது... எதுக்கு இப்படி நம் மனை நாமே வருத்திக்கணும்?"

"தோ பார்... இந்த உடம்பாலதான் நாம நிறைய தப்பு பண்றோம். அதுக்கு இந்த உடம்பைக் கொண்டே செய்யற பரிகாரம்டா இந்த பாதயாத்திரை..."

"ஏன் பாவம்

நடந்தால், வாழ்!



இந்திரா சௌந்தர்ராஜன்

பண்ணணும்? அப்புறம் பரிகாரம்னு இப்படிக் கஷ்டப் படணும்? பாவம் புண்யமெல்லாம் வெறும் நினைப்பு. பாவமாம் புண்யமாம் – வெங்காயம்..."


வெறும் நினைப்புதானோ? ராமனுக்குள் கூட அந்தக் கேள்வி தொற்றிக் கொள்கிறது. லேசாக ஆயாசப்படுகிறார்.

இருபது வருட நடை ஒரு வினாடி கண் முன் தோன்றி அடங்குகிறது. வாழ்க்கையில் ஆயிரம் தேவைகள். சில ஈடேறி விடுகின்றன. சில நினைக்க முடியாத உயரத்தில் இருக்கின்றன.

குறிப்பாக ராமனுக்கு ஆஸ்த்துமா உண்டு. அதில் அவர் அவதிப்படும்போது பார்த்தால் அவருக்குப் பேய் பிடித்து விட்டதோ என்று நினைக்கத் தோன்றும். கர்ர்.... கர்ர்... என்று சப்தமுடன் மார்பு இழுபட, மனிதர் திணறிப் போவார். பிரபஞ்சம் முழுவதும் பஞ்சமில்லாத படி நிரம்பிக் கிடக்கும் காற்று அவரிடம் மட்டும் உள் நுழைய ஒரு பெரிய போராட்டமே நடத்தும். எந்த வைத்தியத்தாலும் முழுமையான குணப்பாடு இல்லை. எல்லாம் கர்ம வினை என்று இறுதியில் முடிவானது.

கர்மவினைக்கு ஒரே தீர்வு கடவுளின் கருணைதான். அதற்காகத்தான் நடக்கிறார். நடந்தும் அந்த கர்மம் விட்ட பாடில்லை. அவ்வப்போது வந்து பாடாய்ப்படுத்தத்தான் செய்கிறது.

இருபது வருடம் நடந்தும் ஏழுமலையான் இரக்கம் காட்டவில்லையே...? ஒரு வேளை இந்த ஸ்ரீகாந்த் சொல்கிற மாதிரி எல்லாம் வெறும் நினைப்புத்தானோ? கடவுள், பக்தி எல்லாமே மனிதமனக் கற்பனையோ?



ஸ்ரீகாந்தை இழுத்துக் கொண்டு நடப்பவர் இப்பொழுது ஸ்ரீகாந்தைப் போலவே நினைக்கத் தொடங்கி, விடுகிறார்.

யாத்திரைக் குழுவின் தலைவர் கப்புவிடம் பேசிக் கொண்டிருந்தபோது, "நான் என்னத்த சொல்வேன். இந்த நாத்திகப் பயலுக்காக வேண்டிண்டது என் குற்றமா? இல்லை, இவன் சொல்றது தான் சரியா, நாமல்லாம் முட்டாள்களான்னு கூட ஒரு கோணத்துல தோண்றது'' என்று அங்கலாய்த்தார்.

"என்னய்யா பேச்சு இது. உன் நம்பிக்கையும் ஆட்டம் காண ஆரம்பிச்சுட்டுதே. இப்படிக் குழப்பத்தோட நடந்தா உருப்பட்ட மாதிரிதான்.."

''எனக்கும் ஒண்ணும் புரியலை. இவன் நெத்திப் பொட்டுல அடிக்கற மாதிரி ஒரு பதில் என்னால சொல்ல முடியலையே கப்பு"

"என்ன பதிலைச் சொல்லணும்?"

"நம்ம நடைக்கு ஒரு அர்த்தம் இருக்கு. இந்தக் கஷ்டத்துக்கு ஒரு பலன் இருக்குன்னு-பக்திங்கறது பழுதில்லாத ஒண்ணு..."

"ஏன் இருபது வருஷத்துல எதுவும் புரியலையா... தெரியலியா?"

"அப்படித்தான் நினைக்கறேன். ஆஸ்த்மா அப்படியேதானே இருக்கு?"

"அப்ப நடக்கறது ஆஸ்த்மாக்காக மட்டுமா?"

"அப்படி இல்லை... குறைந்தபட்சம் அந்த ஒரு குறை போயிருந்தாக் கூட இவனுக்கு நான் ஒரு பதிலைச் சொல்லலாம் இல்லியா? அந்த வெங்கடாஜலபதி ஏன் இப்படி கல்லாவே இருக்கான்? இந்தத் தடவை என்னோட மெய் வருத்தத்துக்கு ஒரு நல்ல பதிலை அந்த பாலாஜி சொல்லித்தான் தீரணும். அப்படி நடக்காதபட்சத்துல இதுதான் என் கடைசி யாத்திரை."

மலையில் கட்டி ஏறும் கூட்டம். எள் போட்டால் எடுக்க இடமில்லை.

"பார்ரா... நன்னா பார் எவ்வளவு கூட்டம்.." – உற்சாகமாக சிலாகிக்கிறார் சுப்பு. ராமனிடம் பாலாஜி வந்து பேச வேண்டிய எதிர்பார்ப்பு. ஆகவே கட்டி இழுக்கும் மௌனம்.

ஸ்ரீகாந்த் மட்டும் அந்த வலியிலும் கிண்டலாக பதில் தருகிறான்.

"எவ்வளவு கூட்டம் இல்ல மாமா... எவ்வளவு பிரச்னைன்னு சொல்லுங்கோ. அவ்வளவும் பிரச்னை. இல்லன்னா ஆசை. எனக்கு அது வேணும் இது வேணும்கற கோரிக்கை. கடவுள்ங்கற குபேரியர்கிட்ட செய்யற பிசினஸ். நான் உனக்கு அது தரேன். நீ எனக்கு இதுதா... இதுக்கு பேர் பக்தியா...?"

"முட்டாள். பாலாஜி ஒரு தாய்டா. பிள்ளைகள் தாய்கிட்ட கேக்காம வேற யார்கிட்ட கேப்பா?"

"கேட்டா தர்றவ தாய் கிடையாது. கேக்காமலே தர்றவதான் தாய்."

சுப்புவுக்கு ஸ்ரீகாந்தின் குதர்க்கம் பெருமூச்சை வரவழைத்தது. ராமனைப் பார்க்கிறார். ராமனும் பார்க்கிறார்.

"இவன் இப்ப கேட்டிருக்கறது சாதாரண கேள்வி. இந்த மாதிரி நூறு கேள்வி கேட்டுப்புட்டான். பொட்டுல அடிச்ச மாதிரி ஒரு பதிலைச் சொல்ல முடியலை."

திரும்பவும் புலம்புகிறார் ராமன்.

கடைசி வரை ஸ்ரீகாந்த் இப்படித்தான் பேசிக் கொண்டு வந்தான். ராமன் மிக சோர்ந்து போய் விட்டார். நிதர்சனமாக ஒரு விஷயம் புலப்படவில்லை. தரிசனத்துக்குக் கூட ஆறு மணி நேரம் காத்திருக்க வேண்டி இருந்தது. காசுள்ளவர்கள் முந்திக் கொண்டு போனார்கள்.

"பாத்தேளா, இங்க கூட பணத்துக்குத்தான் மதிப்பு!"

சுட்டிக்காட்டிய ஸ்ரீகாந்தை ராமன் பரிதாபமாகப் பார்க்கிறார்.

"மாமா இனியும் பக்தி பூஜைன்னு வழியாம, மெட்ராஸ்ல உங்களைக் கூப்பிட்டுட்டிருக்காளே, அந்த மல்டி நேஷனல் ஸாஃப்ட்வேர்காரன், வேலையை ஒத்துண்டு போய்ச் சேருங்க. இங்க பெங்களூர்ல இருந்து குப்பை கொட்டினது போதும்."

"ஆமாண்டா ஸ்ரீ.... போய்ச் சேர வேண்டியதுதான். பின்னால ஃபாரின் கூட போகலாம்னான். பெங்களூர்ல இருந்துண்டு குப்பை கொட்டினதும் இப்படி நடந்ததும் போதும்."

மலையில் சொன்னது போலவே ராமன் ரயில் ஏறி விட்டார். கையை ஆட்டி வழி அனுப்பி வைத்தது ஸ்ரீகாந்த் மட்டுமல்ல; ராமனின் மனைவியும் மக்களும் கூட...

ராமன் மனைவி ஜானகி, நிம்மதியாகப் பெருமூச்சு விடுகிறாள்.

"பெருமாளே என் கோரிக்கையை நல்ல விதமா நிறைவேத்தினே! டாக்டர் அட்வைஸ்படி இந்த ஊர் கிளைமேட் இவருக்குத் துளியும் பொருந்தாத ஒண்ணு. வெப்பப் பிரதேசத்துல சில வருஷம் இருந்தாலே ஆஸ்த்துமா படிப்படியா குணமாயிடும்னு டாக்டர் சொன்னதுக்கு தகுந்த மாதிரி இவரும் ஒரு வேகம் வந்து கிளம்பிட்டார். இவர் அங்க போய் செட்டிலாகி, நாங்களும் போனதும் இனி என்ன கவலை... இவர் விட்ட நடையை இனி அங்கிருந்து நான் பிடிச்சுக்கறேன்."

ஜானகியின் வேண்டுதல், ஸ்ரீகாந்தை ஒரு கலக்கு கலக்குகிறது.

"என்னது... மாமா மெட்ராஸ் பக்கம் போகணும்னு வேண்டிண்டேளா?"

"ஆமாம் ஸ்ரீகாந்த். அந்தப் பெருமாள்தான் உன் நாக்குல உக்காந்து பேசி அவரை அப்படித் திருப்பி விட்டது. அந்த பாலாஜியை நீ என்னன்னு நினைச்சே? இதை வேணும்னுதான் நான் முதல்ல சொல்லலை. சொல்லியிருந்தா அவர் 'பாலாஜி, நீ பேசிட்டே'ன்னு திரும்ப இங்க டேரா போட்டு இந்த கிளைமேட் ஒத்துக்காம ஆஸ்த்மால அவஸ்தைப்பட ஆரம்பிச்சிடுவார். ஒரு நல்ல வருமானமும் எங்களுக்கு இல்லாம போயிருக்கும்."

ஜானகி சொல்லச் சொல்ல ஸ்தம்பித்துப் போகிறான் ஸ்ரீகாந்த். ●

சுலபமாக செல்லலாம், எளிதாக வாங்கலாம்.

ஊரப்பாக்கத்தில் உங்களுக்கு சொந்தமான வீட்டு மனை.


கங்கை நகர், ஊரப்பாக்கம்

வண்டலூர் மிருகக்காட்சி சாலைக்கு அருகில்

DTCP எண் 588 / 97

தாம்பரத்திற்கு அருகில், ஊரப்பாக்கம் ரயில் நிலையத்திலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவில், 200 அடி GST சாலையிலிருந்து நடை தூரத்தில் அமைந்துள்ள அருமையான வீட்டு மனைகள்.

மனையைப் பார்வையிட ஒவ்வொரு நாளும் காலை 6 மணி, 11 மணி மற்றும் மாலை 3 மணி - இலவச வாகன ஏற்பாடு.





Quality is Our Strength

டிஎல்வி எஸ்டேட்ஸ்

54, பெரம்பூர் பேரக்ஸ் ரோடு,
(புவனேஸ்வரி தியேட்டருக்கு எதிரில்)
புரசைவாக்கம், சென்னை - 600 007.
போன் : 5325311 / 12 / 13. ஃபேக்ஸ் : 91-44-5325363.

20 வருடங்களுக்கு மேலாக நன்மதிப்பை கட்டிக் காப்பவர்கள்.

நேற்று .

இன்று..

ave

நாளை...

இனி எப்பொழுதும் ..

MediaSyam / GEM / 97

குறையொன்றுமில்லை

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

40

இரண்டு கைகளாலும் குழந்தை கிருஷ்ணன் தலையிலடித்துக் கொள்வதைப் பார்த்து யசோதை கேட்கிறாள்: "ஏன் தலையிலே அடிச்சுண்டே....?"

"நீ பண்ணுகிற காரியத்தைப் பார்த்து எனக்குச் சிரிப்பு வருகிறது! இந்தக் காரியங்களையெல்லாம் நீ விடவேண்டும் என்பதற்காக அல்லவா உன் வீட்டிலே நான் வளர்கிறேன்! என்னைப் பிடித்து இங்கே கட்டிவிட்டு நித்தியம் பண்ணுகிற காரியத்தையே பண்ணிக் கொண்டிருக்கிறாயே... இதெல்லாம் உனக்கு விட்டுப் போக வேண்டுமென்றுதானே நான் வந்திருக்கிறேன். என்னை வைத்துக் கொண்டு கொஞ்சாமல் இதெல்லாம் என்ன காரியம்!" என்றானாம் குழந்தை.

ஆகையினாலே, லௌகிக விஷயத்திலே நாம் ஈடுபட்டோமானால், பகவத் விஷயம் நம்மை விட்டுப் போய்விடும். பகவத் விஷயத்திலே நாம் ஈடுபட்டோமானால் இதெல்லாம் நம்மை விட்டுப் போய்விடும் என்கிற சாஸ்திரார்த்தத்தை உணர்த்தினான் பகவான்.

இப்படி, உபநிஷத்தில் அர்த்தமாகியிருக்கக் கூடிய பரமாத்மா, ஓர் எளிய உறவிலே கட்டுண்டு கிடக்கிறான். இதைப் பார்த்து, இந்த எளிமையைப் பார்த்து நம்மாழ்வார் 'எத்திரம்? எத்திரம்? எத்திரம்?' என்று மூவாறு மாதம் வியப்பில் தோய்ந்து கிடந்தாராம்!

கூரத்தாழ்வாரோ, 'உங்கம்மா உன்னைப் பிடித்துக் கட்டினாலென்ன, நீ கட்டுண்ட விருத்தாந்தத்தைக் கேட்டவர்களுடைய மனத்தையெல்லாம் உன்னிடத்திலே கட்டுவிக்கிறாயே...!' என்கிறார்.

அப்படி சுலபமாய்க் கட்டுண்டு விடுகிறான் பரமாத்மா. அதனால்தான் அவனுக்கு 'நாராயணா' என்று அழைத்தால் பிடிக்காதாம். 'கோவிந்தா' என்று கூப்பிட்டால்தான் இஷ்டமாம். ஏனென்றால் 'நாராயணா' என்பது பரதத்துவம். 'கோவிந்தா' என்பது அவனுடைய எளிமை! 'பரதத்வத்தை மறைத்துக் கொண்டு சாமான்யனாய் அவன் வந்தால், அங்கேயும் நாராயணா என்று ஏன் சொல்ல வேண்டும்...?' என்பதே அவன் கேள்வி!

அயோத்தியிலே தசரதனுக்கு எதிரிலே நின்று ராமனை பரப்ருஹ்மம் என்று கொண்டாடுகிறார் விச்வாமித்திரர். ராமனுக்கு உள்ளுக்குள்ளே வருத்தமாம். 'இந்த மஹரிஷியை யாரிங்கே வரச் சொன்னார்கள்? மஹாத்மா என்று இவரை யார் சொல்லச் சொன்னது...? இதையெல்லாம் மறைத்துக் கொண்டு இருக்க வேண்டும் என்றுதானே நான் மனிதனாக வந்திருக்கிறேன்! இங்கே வந்து மறுபடியும் என்னைத் தூக்கி வைத்துப் பேசுகிறாரே!' என்று எண்ணிக் கொண்டானாம். விச்வாமித்ரர் சொன்ன வார்த்தை பகவானுக்குப் பிடிக்க



வில்லையாம்!

எளிமையிலே ஆசைப்படுகிறான் பரமாத்மா. பெரிய மந்திரங்களில் போய் அவனைத் தேட வேண்டாம்; பெரிய பெரிய விஷயங்களில் போய் ஆராய வேண்டாம். சுலபமாக, ஸ்த்ரீகள், குழந்தைகள் எல்லோருமே சொல்லக் கூடிய நாமா விஷ்ணு என்கிற நாமா. அதற்குக் தனியாக எந்த நியம நிஷ்டையும் அவசியமில்லை. எந்த தியானமும் வேண்டிய தில்லை.

வேதம் இதைத்தான் சொல்கிறது. விஷ்ணு என்கிற சப்தத்திலே சமஸ்த தர்மத்தையும் தாங்கிக் கொண்டு பரமாத்மா இருக்கிறான். அப்படிப்பட்ட விஷ்ணுவினுடைய கர்மாவை நீங்களெல்லாரும் பாருங்கள்; அவனுடைய திருநாமத்தின் பெருமையைப் பாருங்கள் என்று ஒவ்வொருத்தரையாகக் கூப்பிட்டு வேதம் சொல்கிறது. 'இங்கே வந்து பாருங்களேன்.





அருள்வாக்கு

கோயிலுக்குப் போகிறோம். பிள்ளையார் ஸந்நிதியில் நிற்கிறோம். அப்போதைக்கு ஒரு க்ஷணம், இரண்டு க்ஷணம் மனஸு குவிந்த மாதிரிதான் இருக்கிறது. அப்புறம் கையை, காலை சொறிந்து கொள்கிறோம். மனஸு பிய்த்துக் கொண்டு கிளம்பி விடுகிறது! அப்படியே எந்தக் குப்பைத் தொட்டிக்கு வேண்டுமானாலும் ஓடட்டும் என்று விட்டு விடுவதா? அப்படி விட்டு விடாமல், நல்லதிலேயே, தெய்வ ஸம்பந்தமாகவே அந்த மனஸை இழுத்தால்தானே தேவலை? எப்படி இழுப்பது? பாழும் மனஸுக்கு இந்த விக்நேச்வரமூர்த்தி, தொப்பையும் தொந்தியுமாக இத்தனை அழகாக உட்கார்ந்திருந்துங்கூட, அவரிடமே தொடர்ச்சியாக ஒட்டிக் கொண்டிருக்க முடியவில்லையே! 'பரவாயில்லையப்பா!' என்று இங்கேதான் நம் ஸமயாசார புருஷர்கள் ஆறுதல் தர வருகிறார்கள். 'மனஸின் நேச்சர் அப்படித்தான் அப்பா! அதைக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் திருத்தி, நிலையாக ஒருமுகப் படுத்த முடியுமப்பா! அதற்கு எதிலும் 'சேஞ்ச்' வேண்டும். தெய்வ ஸம்பந்தமாகவுங்கூட அப்படி வேண்டும். அதையும்தான் நம்முடைய மதம் தருகிறதே! விக்நேச்வர ரிடம் ஈடுபாடு குறைகிறதா, அழாதே! இதோ 'சேஞ்சா'க ஸுப்ரஹ்மண்யர் ஸந்நிதி. அப்புறம் இன்னம் பல 'சேஞ்'கள் - அம்மன், ஸ்வாமி, தக்ஷிணாமூர்த்தி, துர்க்கை, நடராஜா, மநுஷ்ய ரூபத்தில் வந்த அறுபத்து மூவர் என்று எல்லாம் ஒன்று சேர்த்துத்தானே கோவில் என்று வைத்திருக்கிறோம்? ஒவ்வொன்றிடமும் ஒரு க்ஷணம், இரண்டு க்ஷணம் மனஸ் ஈடுபட்டுக் கும்பிட்டு விட்டுப் போயேன். மொத்தத்தில் ஒரு கணிசமான நாழி உன் மனசு தெய்வ ஸம்பந்தமாகவே ஈடுபட்டிருக்கும்' என்கிறார்கள்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

விஷ்ணு என்கிற சப்தத்திலே சர்வ தர்மங்களும் அடங்கியிருக்கிறது...' என்று வேதமே அத்யாஸ்சர்யமாக அவன் பெருமையை எடுத்துச் சொல்கிறது.

விஷ்ணு என்கிற திருநாமம், ஸஹஸ்ரநாமத்தில் முதல் ச்லோகத்தில் வந்திருக்கிறது. மறுபடியும் இருபத்தெட்டாவது ச்லோகத்திலே 'விஷ்ணு' வருகிறது; எழுபதாவது ச்லோகத்திலேயும் வருகிறது. இந்த மூன்று ச்லோக எண்ணையும் கூட்டிப் பாருங்கள் - ஒன்று + இருபத்தெட்டு + எழுபது... 99 என்கிற எண் கிடைக்கும். 99 விஷயங்கள் இந்த விஷ்ணு சப்தத்துக்குப் பேசப்படுகிறது! 99 விதமாக அதை அனுபவிக்க வேண்டும்!

வேதத்திலேயும் பல இடங்களிலே விஷ்ணு பிரபாவமானது விளக்கப்பட்டிருக்கிறது. யக்ஞமுகமாகவும், காம்ய கர்மாவிலேயும், வேதாந்தத்திலேயும் விளக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு வரும்படியான வேத வான்மயத்தை நாம் ஆராய்ந்து பார்த்தோமானால், பொதுவாக யக்ஞத்திலே ரக்ஷகனாக சொல்லப்படுபவன் விஷ்ணு.

நம் வாழ்க்கையையே யக்ஞம் என்று எடுத்துக் கொண்டோமானால், இதை ரக்ஷிக்கிறவன் பரமாத்மா. நம் ஜீவித காலம் முழுதும் அவனால் ரக்ஷிக்கப்படுகிறது. நம்மையறியாமல் நாம் நித்தியம் யக்ஞம் பண்ணிக் கொண்டிருக்கிறோம். யக்ஞமென்று தெரியாமலே அதைப் பண்ணுகிறோம். வேதமோ, நாம் நித்தியம் யக்ஞம் பண்ணுகிறோம் என்று சொல்கிறது. யக்ஞம் என்று அது எதைச் சொல்கிறது...? பிரஸாத ஸ்வீகரணம் இருக்கிறதே... நாம் அன்றாடம் சாப்பிடும் உணவு.. அதைத்தான் 'யக்ஞம்' என்கிறது வேதம்!

யக்ஞம் பண்ண ஒரு யக்ஞ வாடிகை - நல்ல இடம் - வேண்டும். இந்த சரீரம்தான் யக்ஞ வாடிகை! இந்த சரீரத்தை பரமாத்மா நமக்கு யக்ஞ வாடிகையாக அனுக்கிரஹம் பண்ணியிருக்கிறார்!

யக்ஞ வாடிகை அமைந்தாயிற்று.... ஹோம குண்டம் வேண்டாமா?... 'ஆ'வென்று வாயைத் திறந்தால், அதுதான் ஹோம குண்டம்! அக்னி தஹிக்கிறது. அக்னிக்கு இருப்பது போலவே வாய்க்குள் நாக்கு அமைந்திருக்கிறது. நேத்திரம் பிரும்மாவாக இருந்து இந்த ஹோம குண்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறது! எலும்புகளெல்லாம் சமித்தாயிருக்கின்றன. உடம்பிலிருக்கிற ரோமங்களெல்லாம் தர்ப்பமாயிருக்கின்றன.

ஹோமம் பண்ணுவதற்கு சருக்கு, ச்ருவம் என்று இரண்டு சாதனங்கள் வேண்டும். கரண்டி போன்ற சாதனங்கள். பகவான் நமக்கு இயற்கையிலேயே சருக்கு ச்ருவமாகிய கைகளைக் கொடுத்திருக்கிறான். இரண்டினாலேயும் ஹோமம் நடத்துவதுண்டு.

சாப்பிடும்போது என்ன செய்கிறோம்... இடது கையினாலே இலையைப் பிடித்துக் கொண்டு, அந்தர்யாமியான பகவானுக்கு நிவே

தனம் செய்கிறோம். இரண்டு பருக்கை எடுத்துக் கொண்டு பல்லிலே படாமல் உள்ளே சேர்க்க வேண்டும். இதைத்தான் பிராணாஹுதி என்பார்கள்.

கிருஷ்ணாவதாரத்திலே, பகவான் பூதனை, சகடாசுரனையெல்லாம் பிராணாஹுதி ஸ்தானத்திலே வைத்துக் கொண்டான் என்று வேடிக்கையாகச் சொல்வதுண்டு. ஏனென்றால், பின்னால் குருக்ஷேத்திரத்தில் பெரும் சேனையை முடிக்க வேண்டியிருந்ததனாலே...!

இந்த பிராணாஹுதி சாப்பிடும்போது பார்த்தால் கொஞ்சமாகத் தோன்றும். அப்புறம் சாப்பிடுவதோ பிரமிக்க வைக்கும்!

பகவானுக்கென்று நினைத்துக் கொண்டு நாம் சாப்பிடுவதாலே, சரீர ஆரோக்கியத்தைப் பூரணமாக அவன் நமக்குக் கொடுக்கிறான். 'உள்ளுக்குள்ளே, அந்தர்யாமியாய் இருக்கிற பகவானுக்கு இது இல்லை' என்று ஒருத்தன் சாப்பிடுவானானால், அவன் பாவத்தையே சாப்பிடுகிறான்!

இதை பிரத்யக்ஷமாக விளக்க ஒரு சம்பவம் நடந்தது. எங்கே நடந்தது என்றால், கோபிஸ்த்ரீகளெல்லாம் பால், தயிர், வெண்ணெய் விற்கப் போனார்கள். யமுனையைக் கடந்து போனார்கள். விற்றுவிட்டுத் திரும்பி வருகிறார்கள் அவர்கள். போகும்போது முழங்கால் வரையிலே இருந்த யமுனை ஜலம், திரும்பி வரும்போது இரண்டு கரைகளையும் தொட்டுக் கொண்டு ஓடுகிறது! இவர்களுக்கு என்ன பண்ணுவது என்றே தெரியவில்லை! 'குழந்தைகளெல்லாம் அழுவார்களே... பசுக்களெல்லாம் கதறுமே... என்ன பண்ணுவது...?' என்று அவர்கள் பயப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், ஒரு பக்கமாக அங்கே வியாஸ மஹரிஷி உட்கார்ந்திருந்தார். அவரைப் பார்த்தவுடனே அவர்களுக்குத் தைரியம் வந்து விட்டது. போய் வியாஸரை விழுந்து சேவித்து,

"சுவாமி! நாங்களெல்லாம் அக்கரைக்குப் போக வேண்டும். அதற்கு நீங்கள் வழிபண்ண வேண்டும். அனுக்கிரஹம் பண்ண வேண்டும்..." என்று கேட்டார்கள்.

உடனே அவர் சொல்கிறார்... "நான் ரொம்ப பட்டினியாயிருக்கிறேன். பசி காதை அடைக்கிறது. உங்களிடம் ஏதாவது மீதியிருந்தால் கொடுங்கள். சாப்பிட்டுவிட்டு அழைத்துக் கொண்டு போகிறேன்..." என்கிறார்!

சரியென்று, அவர்களிடத்திலே மீதியிருக்கிறதையெல்லாம் கொடுக்கிறார்கள். நன்றாகச் சாப்பிட்டார் வியாஸர்! யமுனை நதியிலே போய்க் கையை அலம்பிக் கொண்டார். பிறகு யமுனையைப் பார்த்துக் கை கூப்பிக் கொண்டு சொன்னார்:

"ஹே சூர்ய புத்ரியே! காளிந்தி... நான் இன்றைய தினம் சுத்த உபவாஸம் இருந்தது மெய்யானால் வழி விடு..." என்றார்.

யமுனை நதியும் விலகி வழிவிட்டு விட்டது! அவர் முன்னே போனார். கோபஸ்த்ரீகள் மொத்த பேரும் பின்னால் வருகிறார்கள். மறு கரையை அடைந்தவுடனே யமுனை பழையபடி கூடிக் கொண்டது! இது கோபஸ்த்ரீகள் அனைவருக்கும் வியப்பாகவும் இருக்கிறது; வியாஸரை எப்படிக் கேட்பது என்று தயக்கமாகவும் இருக்கிறது. கடைசியில் கேட்கவும் கேட்டு விட்டார்கள்!

என்ன கேட்டார்கள்...?

"உங்களைப் போன்ற பெரியோர்கள் புளுகினால் தவறு இல்லையா?" என்று கேட்டார்கள்!

"பொய்யா? நான் எங்கே பொய் சொன்னேன்...?" என்றார் வியாஸர்.

> ★ மாவீரன் அலெக்சாண்டரின் அரண்மனைத் தோட்டத்தில் அநேக சிலைகள். விருந்தாளி அலெக்சாண்டரைப் பார்த்து, "இத்தனை வீரர்களின் சிலைகள் இந்தத் தோட்டத்தில் இருக்கும் போது உங்களுடைய சிலை மட்டும் இங்கு ஏன் இல்லை?" என்று கேட்டார்.
> "இங்கு எனது சிலையைப் பார்த்து இது யாருடைய சிலை என்று வருபவர்கள் கேட்பதை விட, மாவீரன் அலெக்சாண்டருடைய சிலை ஏன் இங்கு இல்லை என்று கேட்பதையே நான் விரும்புகிறேன்" என்று பதில் சொன்னார் அலெக்சாண்டர்.
> — வினோபாவின் குட்டிக் கதைகள்
> தகவல் : ஏ.எஸ். இராமசாமி

"இன்றைய தினம் சுத்த உபவாஸம் இருந்தது மெய்யானால் வழி விடு என்றீர்கள். யமுனை நதியும் வழி விட்டு விட்டது! இதிலிருந்து என்ன தெரிகிறது...? பெரியோர்கள் பொய் சொன்னால் தவறில்லை போலிருக்கிறது..." என்றார்கள் கோபஸ்த்ரீகள்!

"நான் பொய்யே சொல்லவில்லையே! நான் இன்றைய தினம் உபவாஸமிருந்தது மெய்தானே...!"

"உபவாஸமிருந்தது மெய்யா...? இவ்வளவு வெண்ணெயைச் சாப்பிட்டுவிட்டு, பாலைச் சாப்பிட்டு விட்டு, தயிரைச் சாப்பிட்டு விட்டு, உபவாஸம் இருந்தது மெய்யென்றால் எப்படிப் பொருந்தும்....?"

"வெண்ணெய், பால், தயிரை நானா சாப்பிட்டேன்? உள்ளே இருக்கிற அந்தர்யாமிக்கு அல்லவா நிவேதனம் பண்ணினேன்..." என்றார் வியாஸர்!

(தொடரும்)

காதில் விழுந்தவை:



பால் தாக்கரே ரஜினியை மிரட்டினாரா?

● அ.இ.அ.தி.மு.க. அலுவலகம் கட்ட சஃபையர் தியேட்டர் வளாகத்தை ஜெ. வாங்கியது ஞாபகமிருக்கும். ஆனால் அதை வாங்கிய அதிர்ஷ்டமோ என்னவோ, தேர்தலில் கட்சி ஊத்திக் கொண்டது. இதனால் உண்டான 'பகுத்தறிவின்' காரணமாக அந்த வளாகத்தை யாருக்காவது விற்று விடலாமா? என்று இப்போது யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அவ்வை சண்முகம் சாலையில் உள்ள பழைய கட்டடத்தை இடித்து அலுவலகத்திற்காக பிரம்மாண்டமான புதிய கட்டடம் எழுப்பப்பட்டு விட்டதால், விற்கும் வாய்ப்பு அதிகமாகி வருகிறது. ஆனால் ஒரே ஒரு தடைதான்; அது உடன் பிறவாச் சகோதரியிடமிருந்து. 'அண்ணாசாலையில் அது போன்ற இடத்தை எதிர்காலத்தில் வாங்கவே முடியாது; ஆகையால் விற்க வேண்டாம்' என்று சகோதரி சொல்கிறாராம்.

● மைலாப்பூரிலுள்ள காங்கிரஸ் அலுவலகத்தில் நுழைந்தவுடன் "என்ன சார்; அதிமுக- பாஜக. கூட்டால் நாங்கள் மிகவும் அப்செட்டாகிப் போயிருந்தோம் என்று எழுதியிருந்தீர்களே- இப்போது பாருங்கள்!" என்று உற்சாகமாக வரவேற்றார் காங்கிரஸ் பிரமுகர் ஒருவர். எல்லாம் 'அம்மா (சோனியா) பிரசாரத்திற்கு வருகிறேன்' என்று சொன்னதால் உண்டான எழுச்சிதான். அலுவலகத்திற்கு வெளியே சோனியா படம் போட்ட தோரணங்கள், திருவிழாக் கோலம்! சோனியாவுக்குப் பொன்னாடை போர்த்தும் தலைவர் தங்கபாலு படம் அவரது மேஜையில் 20"× 20" சைஸில் பெரிதாக்கப்பட்டு வைக்கப்பட்டு இருந்தது. பாராளுமன்றத் தேர்தலுக்குப் போட்டியிட 2000 ரூபாயுடன், கிட்டத்தட்ட ஐந்நூறுக்கும் மேற்பட்டவர்கள் விண்ணப்பித்திருக்கிறார்களாம். இப்போது காங்கிரஸாருக்கு உள்ள கவலை; ரஜினி என்ன செய்யப் போகிறார் என்பதுதான். "இந்த தேர்தலில் ரஜினி யாரையும் ஆதரிக்கக் கூடாது என்று பால் தாக்கரே அவரை பூனாவில் 'அன்பாக' மிரட்டியிருப்பதாக ஒரு பேச்சு உலவுகிறதே. அது உண்மையா ஸார்" என்று நம்மைக் கேட்டார் பிரமுகர் ஒருவர். அவர் சொன்ன சேதி கொஞ்சம் வியப்பாக இருந்தாலும், அப்படிப்பட்ட மிரட்டலுக்கெல்லாம் பயந்தவரல்ல ரஜினி என்பது நாம் அறிந்த விஷயம்தானே!

● சமீபத்தில் சத்தியமூர்த்தி பவனில் பீட்டர் அல்போன்ஸ் காரில் ஏறி விர்ரென்று போகும் போது தமாகா. தொண்டர்கள் இருவர் 'கலைஞர் போறார்- கலைஞர்...' என்று அவரைப் பார்த்து உற்சாகமாகக் குரல் கொடுத்தார்கள். அந்தத் தொண்டர்களைத் தனியாகத் தள்ளிக் கொண்டு போய், 'அது என்ன சார் கலைஞர்?' என்று கேட்டபோது, 'கலைஞர் போல் அழகுத் தமிழில் அருமையாகப் பேசும் பேச்சாளர் பீட்டர். அதனால் அவரைச் செல்லமாக 'கலைஞர்' என்று சொல்கிறோம் என்றார்கள். அவர்கள் சொல்லாமல் விட்டது திமுக. கூட்டணியில் தமாகா தொடர வேண்டும்' என்று தீவிரமாக வற்புறுத்துபவர்களில் பீட்டரும் ஒருவர் என்பதுதான். ●

அட, இந்த இதழ் என்ன இளமை ஸ்பெஷலா? என்று கேட்டு வாசகர்கள் எழுதும்முன், நாமே சொல்லி விடுகிறோம் — ஆமாம்!

— தில்லப்பா

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621.
Annual Subscription : India : Rs. 250/-; Overseas : Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 125/-; Overseas : Rs. 800/- (Air Mail)

சிட்டி யூனியன் வங்கி லிட்.

149, டி.எஸ்.ஆர். பெரிய தெரு, கும்பகோணம் - 612 001.
(அந்நியச் செலாவணி அங்கீகாரம் பெற்ற வங்கி)

1-12-97 முதல் திருத்தியமைக்கப்பட்ட வட்டி விகிதங்கள்

வைப்பு நிதிகள்	வட்டி விகிதம்
உள்நாட்டு வைப்பு நிதிகள் :	
30 நாட்களுக்கு மேல், 90 நாட்கள் வரை	6%
91 நாட்களுக்கு மேல், ஒரு ஆண்டு வரை	8%
ஒரு ஆண்டுக்கு மேல், 2 ஆண்டுகள் வரை	10.5%
2 ஆண்டுகளுக்கு மேல், 3 ஆண்டுகள் வரை	12.0%
3 ஆண்டுகளுக்கு மேல்	13.0%
NRE வைப்பு நிதிகள் :	
6 மாதங்கள் முதல் ஒரு ஆண்டு வரை	8%
ஒரு ஆண்டுக்கு மேல், 2 ஆண்டுகள் வரை	10.5%
2 ஆண்டுகளுக்கு மேல், 3 ஆண்டுகள் வரை	12.0%
3 ஆண்டுகளுக்கு மேல், 5 ஆண்டுகள் வரை	13.0%
NRNR வைப்பு நிதிகள் :	
6 மாதங்கள் முதல் ஒரு ஆண்டு வரை	12%
ஒரு ஆண்டுக்கு மேல் 3 ஆண்டுகள் வரை	13%

திருத்தியமைக்கப்பட்ட வட்டி விகிதங்கள், புதிய வைப்பு நிதிகளுக்கும், முதிர்ச்சியடைந்து புதுப்பிக்கப்படும் வைப்பு நிதிகளுக்கும் பொருந்தும். எல்லா வட்டி விகிதங்களும் மாற்றத்திற்குட்பட்டது.

கடன்களுக்கான அடிப்படை வட்டி விகிதம் (வட்டிக்குரிய வரி இன்றி) 1-12-97 முதல்	14%
அதற்கு மேல் அதிகபட்ச உயர்வு (நுகர்வோர் கடன் மற்றும் உத்தரவாதமற்ற கடன்கள் தவிர)	4%

உங்களது மேலான ஆதரவை தொடர்ந்து
நல்கிட வேண்டுகிறோம்.

CUB - உங்கள் வளர்ச்சிக்கு வழிகாட்டும் வங்கி !

MCS COMM/CUB 1666.97

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN/MS (S) M4392/97 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN/MS/(S) 161 * Registered as a Newspaper in Srilanka